769

ஆனந்தபோதினி

நந்தன௵
ஆனி௴

3 அணா

ஜாதகாமிருத பல விமர்சம் என்னும்

ஜாதக கணிதசாகரம்

(மூன்றும் பதிப்பு)

யாதொரு நக்ஷத்திர பாகத்தில் வருகின்ற எந்த க்ரஹமாவது அந்த நக்ஷத்திர சுபாவத்திற்கு ஒற்றுமை அல்லது வேற்றுமை யுற்றதா யிருக்குமானால் நக்ஷத்திரத்தினுடையவும் க்ரஹத்தினுடையவும் சுபாவ குணம் தேச கால வர்த்தமானங்கட்குத் தக்கபடி பேதித்து விளங்கும். அதாவது நமது பூமியின் சுழற்சியால் அதைச் சூழ்ந்துகொண்டிருக்கும் பஞ்ச பூதாம்சங்கள் நுட்ப நேரந்தோறும் கவர்ச்சியிற் துவாரா நெருங்கி கலந்து மாறுதலை யுண்டாக்கும். அதனாலேயே பிரபஞ்சத்தில் உலக மாறுதல்களும் பேதங்களும் நேரிடுகின்றன.

இந்த இரகசியத்தை விளக்கிக் காட்டும் பொருட்டே சோதிட சாஸ்திரம் ஏற்பட்டிருக்கின்றது. ஜோதிடத்தைப் பற்றிய எல்லாவற்றிற்கும் ஆதாரம் முக்கியமாய்ப் பிருகத் ஜாதகம். அதை மலையாளத்தில் ஹோரை என்பார்கள். இந்த ஜாதக கணித சாகரம் என்னும் புத்தகம் வேதம் எப்படியோ அப்படிப்போல ஜோதிடத்திற்குத் தாயாகும். இதன் விலை ரூபா 2-0-0

ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்

ஜோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், 9-கிரகங்களை 12-இராசிகளில் அடைத்து ஆட்சி யுச்சம் இவைகளைக்கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 1,2,3,4,5,6,7-கிரகங்கள் ஒன்றாகக் கூடியிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறி யிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்லவும் இதனால் தெரிந்து கொள்ளலாம். இதன் விலை அணா 8

நிமித்தியகுறி சாஸ்திரம்.

இந்த நிமித்தியகுறி சாஸ்திரத்தில் மனிதர்கள் மனதில் நினைத்துக்கொள்ளும் காரியங்களையும் அவற்றின் பலாபலன்களையும் அறிந்து சொல்லும் மார்க்கங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இது சகல மதஸ்தர்களுக்கும் வர்த்தகர்கள், சோதிடர்கள், விவசாயிகள், வைதிகர், வைத்திய நண்பர்கள், பிரயாணிகள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் முதலாகிய எல்லா கனவான்களிடத்தும் அவசியமிருக்கவேண்டியது. இதன் விலை அணா 2

கோசார பல நிர்ணயம்

ஸ்ரீமான் என். ஆர். திருவேங்கடாச்சாரியர், பி. ஏ. எழுதியது.

கோசார பலன்கள் நடைபெறுவது பல்வேறு அம்சங்களைப் பொறுத்திருக்கிறது என்ற விஷயத்தை விரிவாக ஆசிரியர் இந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அது மாத்திரமில்லை. கோசார சம்பந்தமாகவுள்ள பலவேறு புராதன கிரந்தங்களில் காணப்படும் எல்லா முக்கிய விஷயங்களையும் ஆசிரியர் உருட்டித் திரட்டிக் கொடுத்திருப்பது இதிலுள்ள முக்கிய விசேஷமாகும். மாத வார தின பலன்களையும், ஆதாய விரய பலன்களையும், ரோக மேற்பட்ட நக்ஷத்திரத்தைக்கொண்டு ரோகம் நீங்கக்கூடிய காலத்தையும் கண்டறியும் விவரம் முதலிய பல உபயோகமான விஷயங்களை ஆசிரியர் இதில் சேர்த்திருக்கிறார். தமிழ் நாட்டில் ஒவ்வொருவர் கையிலு மிருக்கவேண்டிய நூலாகும். இதன் விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆனந்தபோதினி

ஒரு சிறந்த மாதாந்தத்

தமிழ்ச் சஞ்சிகை

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

(தொகுதி 37.)

கரஞு ஆடிமீ முதல் நந்தனஞு

ஆனிமீ வரையில்

1951ஞு ஜுலைமீ முதல் 1952ஞு ஜுன்மீ வரையில்

நா. முனிசாமி முதலியார்,

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,

நெ. 6, ஸாயர் சின்னதம்பி முதலி தெரு,

சௌகார்பேட்டை, மதராஸ்.

All Rights Reserved.

187597

பைண்ட் விலை ரூபா 2-12-0	1952	தபாற் கூலி வேறு.

ANANDA BODHINI

GOLDEN OPINIONS

From Rao Saheb Late T. Ramakrishna Pillai Avl., B.A., F.M.U., F.R.H.S., Chairman, Board of Examiners in Dravidian Languages, Madras University.

I am a regular reader of "ANANDA BODHINI" the Tamil monthly published in George Town and I am glad to take this opportunity of expressing my appreciation of the way the journal is conducted. It is just the kind of magazine we want for the Indian women in their houses and the conductors of the journal have my best wishes for the success of their undertaking.

Madras, 28th Nov. 1915.
THOTTAKADU HOUSE.

(Sd.) T. RAMAKRISHNA PILLAI.

From Rao Bahadur A. C. Pranatartihara Iyer Esq., B.A., I.S.O., Retired Inspector of Schools, and Registrar of Books, Nungambakkam.

I have read several numbers of "ANANDA BODHINI." It is conducted on right lines. The matter is suitable and the diction is unobjectionable. I can unhesitatingly say that the journal deserves public encouragement and support.

NUNGAMBAKKAM,
Madras, 5th Dec. 1915.

(Sd.) A. C. PRANATARTIHARA IYER.

We have received the current number of the Tamil monthly "ANANDA BODHINI," containing a variety of information on several subjects of every day importance. The special feature of the monthly is that a separate section is set apart for giving advice to women either in the form of abstract statements, or small stories containing moral lessons.—HINDU 22—9—15.

Dear Sir,

Your Tamil monthly entitled "ANANDA BODHINI"......................is written in EASY, CLEAR and READABLE style, WELL-SUITED, PARTICULARLY, to LADIES who take a liking to it on account of the varied subjects of interest dealt therein, calculated to mould their characters. That such a monthly should be in existence, side by side with the Anglo-Indian contemporaries, is very much to be appreciated. The subjects dealt within the short compass of the monthly are such that they deserve to be READ and RE-READ f[illegible] view point to quality in contradistinction from style and rhetoric, [illegible] of our readers seem to yearn for, as is evident from the [illegible] number i.e., pages 288 and 289. A majority of the [illegible] olls will be at one with me when I say that the style now adopted wo[illegible]o to the well-being and uninterrupted continuance of the monthly[illegible] is being and has to be read by both sexes. ... ... It is [illegible] much to be envied that there should be over 10,000 subscribers, [illegible] rolls which no other monthly of the kind is able to secure, or has ever bef[illegible]e secured since inception. I wish the monthly all success.

TRIVANDRUM,
21—1—17.

A. V. SUBRAMANIA AIYAR,
F.N.S.A. (Lon.), F.G.I. (Birm.)

ஆனந்தபோதினி

37-ம் வருடத்திய விஷய அட்டவணை

விஷயங்கள்	பக்கங்கள்
கடவுள் வணக்கம்	2,62,122,182,242,302,362, 422,482,542,602,662
தலையங்கம்	
காங்கிரஸ் சீர்கேடு	3
கட்டாயக் கொள்முதல் செய்க!	63
தமிழ் மாகாணம் வேண்டும்	123
தமிழில் முடியாதாம்	183
கல்விக்கும் பஞ்சமா?	243
வாக்காளர் கடமை	303
அமெரிக்கர் உதவி	363
தேர்தல் முடிந்தது	423
பஞ்ச நிவாரணத்துக்குப் பணம் உதவுக!	483
ஜனநாயகக் கூத்து	543
அரசியலும் மதமும்	603
நல்ல சட்டம்	663
பாட்டு	
உயர்ந்த நாள்	37
என்ன சொல்வேன்!	48
மருந்து சொல்லேன்!	67
தமிழனும் நீகொலோ?	95
சுதந்திரப் பெரு மலர்	145
ஒரு சொற் கேளீர்!	170
துன்பம்	197
பொய்யின் புகழ்!.	228
எங்கள் தமிழ் நாடு	293
அன்னையின் கொலு	305
வாழியவே!	349
வாணி பூஜை?	376
கொள்ளைக்காரன் காதல்	469

விஷயங்கள்	பக்கங்கள்
வள்ளுவன் புகழ் ...	496
எது நாகரிகம்...? ...	497
உலகுக்கு ஒரு எச்சரிக்கை ...	524
ஆசிரியன் ...	539
சிந்திப்போம் நாம் ...	557
எழு தமிழா ...	572
உள்ளம் சிரிக்கட்டும் ...	625
இறுதி முத்தம் ...	683
சொன்னபடி செய்வாய் ...	709
ஜாம்ஷெட்ஜி டாடா ...	8
வள்ளுவரும் குறளும் ..	17
கர்ம யோகி ...	21
வெண்ணிலாவே! வேகமேன் உனக்கு? ...	27
பாசம் ...	30
கள்ளமார்க்கெட்டும் லஞ்சப் பேயும் ...	38
வளைகழலாச் செய்தி ...	40
தமிழகம் தந்த பரிசு ...	44
நன்றுமன் ...	49
உடைந்த உள்ளம் ..	51
இரு சகோதரர்கள் (தொடர் கதை) ..	54,113,174,233
கர–நந்தன ஆம் ஆனந்தபோதினி பஞ்சாங்கம் ..	60,120,180,240,300,360, 420,480,540,600,660,720
கவி காளிதாஸன் ...	68
புதுப்புனல் நீராடல் ...	70
தெய்வசாதி! ...	72
அழகு ...	76
மாக்ஸிம் கார்க்கி ...	77
திருந்தினர்கள் ...	80
தமிழ்ப் பெருங் காப்பியம் ...	91
இரு காதலர்கள் ...	96
நன்றியில் செல்வம் ...	100
தாபம் ...	104
அபிவிருத்தி ...	108
குமுறுங் குரல் ...	127
மெய்கண்ட நூல்கள் ...	132

விஷயங்கள்	பக்கங்கள்
ரசு பிரான் ...	137
ன்னி ...	146
திருந்தும் வீரமும் ...	152
அவன தப்பு ...	155
தாழியின் திருமண முயற்சி ...	157
துறவி வேடமியன் ...	160
கருகிய மொட்டு ...	164
இந்த சொர்க்கம் ...	171
மலைநாட்டு வள்ளல் ...	186
நபிகள் நாயகம் (ஸல்) ..	188
எழுதாத காரணம் ...	198
ஆதியும் வீதியும் ...	204
வாடகைக் குழந்தை ...	207
அத்தானின் கலியாணம்! ...	210
முதல் முத்தம் ...	213
ராமன் அல்லது அயன் முட்டாள் ...	218
தெலுங்கு நாட்டின் புரட்சிக் கவி ...	222
கருங்காலி ...	229
புத்த பகவான் ...	247
விடியுமா? ...	255
அவளும் அவனும் ...	257
கம்பன் கண்ட நாடு ...	262
சீவகன் ...	267
நமது வைத்தியம் ...	281
வெள்ளிக் காப்பு ...	286
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ...	292
சிதைந்த உள்ளம் ...	295
வள்ளுவப் பெரியார் ...	306
தண்டனை ...	314
சேற்றில் முளைத்த செந்தாமரை ...	317
பிச்சைக்காரி ...	328
திருப்பாவையும் திருமொழியும் ...	332
காளி கோவில் பேய் ...	337
பாரதியார் கண்ட அரசியல் ...	343
சித்திரக் குறும்பன் ...	350
வைத்தியம்! ...	354
கிராம அபிவிருத்தி ...	357
காந்தியடிகளார் ...	367
இதய வாணிபன் ...	372

விஷயங்கள்		பக்கங்கள்
இன்ப வாழ்வு	..	377
எங்களிடை குறள்	...	387
படக் காட்சிகள்	...	391
வாழ்கின்றார்கள்?	...	395
வாழ்க்கையும் கலையும்	...	399
கமலாவின் காதல்	...	404
தாயுள்ளம்!	...	407
கோட்டை பிடிபட்டது!	...	409
கோலங்கள்!	...	418
"கடவுளின் வேண்டுகோள்"	...	427
என் கடிதம்	...	430
கொடுமையின் ஓவியம்!	...	434
ஆதிமந்தி போல......!	...	437
புரட்சிப் பாதையும் அரசியல் மாற்றமும்	...	440
பாரி காதை	...	443
பிரிவு	...	448
ஜாதி அரும்பு	...	453
காற்றும் கவிஞனும்	...	456
புகார்	...	460
என்ன வேடிக்கை	...	464
சட்டத்தின் கண்ணீர்	...	465
மனம்போல் திருமணம்	...	486
அறிவளித்த அன்புத் தெய்வம்	...	490
விஷம்	...	498
கூறுதி பாண!	...	507
கந்ஸ் லேனு	...	509
கலையும் வாழ்வும்	...	516
கொலைகாரி!	...	519
நூலகத் தேவை	...	525
என் கதை	...	528
மடல்பாடிப் பெற்ற கதை!	...	531
பழமையும் புதுமையும்	...	535
அமரன்	...	546
பெண்களும் கல்வியும்	...	549
லீலை!	...	552
மேதை மார்க்ஸ்	...	558
யார் துரோகி...?	...	562
நூற் பட்டி	...	569

விஷயங்கள்		பக்கங்கள்
சூழ் வினை	...	573
நண்டுகளே, இது நியாயமா?	...	579
காதல் விளையாட்டு	...	581
வீண் பழி	...	589
கடவுள் வழிபாடு எது?	...	607
மனித ஜன்மம்	..	611
பெண்களின் வீரம்	...	614
எட்டுத்தொகை	...	617
காதல் இன்றேல்......!	...	621
நூற்பதிவு	...	626
காதல் பலி	...	628
இந்தியாவில் பொதுவுடைமை	...	631
ஜைன இராமாயணம்	...	634,698
ஆறுதல்	...	639
ஆற்றின கொல்லோ!	...	642
சனிக்கிழமை	...	645
அறியாமையின் அவதி	...	655
பூ விற்கிறதே!	...	667
திருமணம் நடைபெறுகின்றது	...	669
தியாகி	..	673
பிரஞ்சுப் புரட்சியின் உதயம்	...	677
காதல் பாதையில்......	...	685
நூலுணர்வு	...	694
புதிய சீனாவில் கல்விமுறை	...	702
பித்தனின் கடிதங்கள்	...	710

பவளத்தீவு அல்லது குடும்பசாபம்

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவருக்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும்.

2-பாகமும் விலை ரூபா 3-12-0.

"ஜீவா" தீட்டிய

எழுத்து ஓவியங்கள்

யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?

(விதவைப் பெண்ணொருத்தியின் உள்ளம் உருக்குங் கதை)

திருத்தமான இரண்டாம் பதிப்பு

'சாரதா வித்யாலயா' தலைவி சகோதரி ஆர். எஸ். சுப்புலட்சுமி, பி. ஏ., எல். டி., பண்டிதை அசலாம்பிகை ஆகியோர் சிறப்புரைகள் கொண்டது.

இக் கதையில் வரும் கதாநாயகி காமாட்சியின் சித்திரம் தமிழ்ச் சமூகத்தில் நிலவிவரும் வைதவ்யத்தின் சித்திர மாகும்.

விலை ரூ. 2-0-0.

காதலனா? காதகனா?

திருத்தமான இரண்டாம் பதிப்பு

கலாசாலை மகளிர் சிலரின் சீர்கெட்ட வாழ்க்கையும் போலி நவநாகரிகத்துக்கு அவர்கள் பலியாகி அடையும் கதியையும் இக் கற்பனைக் கதை படம் பிடித்துக் காட்டுகிறது.

இதன் விலை ரூ. 1—4—0.

இவ்வுலகைத் திரும்பிப்பாரேன்?

செல்வக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து சீமைப்படிப்பு படித்து நவநாகரிக வலையில் சிக்கிச் சீர்கேடுற்று வாழ்க்கையில் ஏற்பட்ட பல கஷ்ட நஷ்டங்களால் உலகையே வெறுத்துச் சென்ற ஒரு பெண்மணியின் சுய சரிதம் உள்ளத்தைக் கவரும் வகையில் வரையப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ. 1.

சீமாட்டி கார்த்தியாயினி

ருஷிய ஞானி லியோ டால்ஸ்டாய் எழுதிய "அன்னா காரினென்னா" என்னும் நவீனத்தைத் தமிழில் இனிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 14.

உயிரோவியம்

இதுகாறும் தமிழ் அன்னையின் திருமேனியிலேயே கிடையாத ஒரு எழில் வாய்ந்த ஆபரணம் என்றும், இதுவரை எந்த கதாசிரியராலும் காணாத முடிவு என்றும் ஒரு முறையல்ல; பலமுறை படித்தின்புற வேண்டிய கதை என்றும் அறிஞர்கள் இக் கதைச் சிறப்பைப் பாராட்டியிருக்கிறார்கள். இக் கதையில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பாத்திரமும் நம் கண்முன்னே நடமாடுவது போன்ற உணர்ச்சி படிப்போர்க்கு ஏற்படும்.

இதன் விலை ரூ. 1-8-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி	நந்தன ௵ ஆனி ௴ ௧௳	பகுதி
37	1952 ௵ ஜுன் ௴ 14௳	12

உள்ளுறை.

எண்.		பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	662
2.	நல்ல சட்டம் (தலையங்கம்)	663
3.	பூ விற்கிறதே!	667
4.	திருமணம் நடைபெறுகின்றது!	669
5.	தியாகி	673
6.	பிரஞ்சுப் புரட்சியின் உதயம்	677
7.	இறுதி முத்தம் (கவிதை)	683
8.	காதல் பாதையில்......	685
9.	நூறுணர்வு	694
10.	ஜைன இராமாயணம்	698
11.	புதிய சீனவில் கல்விமுறை	702
12.	சொன்னபடி செய்வாய் (கவிதை)	709
13.	பித்தனின் கடிதங்கள்	710
14.	பஞ்சாங்கம்	720

ஆனந்த போதினி

கடவுள் வணக்கம்

உடையாய்உன் அடியவர்க்கும் அவர்மேல் பூண்ட
    ஒண்மணியாங் கண்மணிக்கும் ஓங்கு சைவ
அடையாளம் என்னஒளிர் வெண்ணீற் றுக்கும் அன்பிலேன்
    அஞ்சாமல் அந்தோ அந்தோ
நடையாய உடல்முழுது(ம்) நாவாய் நின்று
    நவில்கின்றேன் என்பாவி நாவைச் சற்றும்
இடையாத கொடுந்தீயால் சுடினும் அன்றி
    என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (1)

கண்ணுதலை நின்னடியார் தமையு(ம்) நோக்கேன்
    கணமணிமா லைக்கெனினும் கனிந்து நில்லேன்
பண்ணுதல்சேர் திருநீற்றுக் கோலந் தன்னைப்
    பார்த்தேனும் அஞ்சுகிலேன் பயனி லாமே
நண்ணுதல்சேர் உடம்பெல்லா(ம்) நாவாம் நின்று
    நவில்கின்றேன் என்கொடிய நாவை அந்தோ
எண்ணுதல்சேர் கொடுந்தீயால் சுடினும் அன்றி
    என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (2)

வஞ்சமிலார் நெஞ்சகத்தே மருவு(ம்) முக்கண்
    மாமணியே உனைநினையேன் வாளா நாளைக்
கஞ்சமலர் முகத்தியர்க்கும் வாதில் தோன்றும்
    களிப்பினுக்கும் கழிக்கின்றேன் கடைய னேனை
நஞ்சமுணக் கொடுத்துமடித் திடினும் வாளால்
    நசிபுறவே துணித்திடினும் நலியத் தீயால்
எஞ்சலுறச் சுடினுமன்றி அந்தோ இன்னும்
    என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (3)

அருள்பழுக்கும் கற்பகமே அரசே முக்கண்
    ஆரமுதே நினைப்புகழேன அந்தோ வஞ்ச
மருள்பழுக்கு நெஞ்சகத்தேன் வாளா நாளை
    வீண்தமிட்டுக் கழிக்கின்றேன் மதியி லேனை
வெருள்பழுக்கும் கடுங்காட்டில் விடினும் ஆற்று
    வெள்ளத்தில் அடித்துஏக விடினும் பொல்லா
இருள்பழுக்கும் பிலஞ்சேர விடினும் அன்றி
    என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (4)

நல்ல சட்டம்

உணவு மக்களுக்கு முக்கியம் என்பது எல்லோரும் அறிந்ததொன்றும். ஆனால் சத்துள்ள உணவுகளைக் கொள்வதன் மூலம் ஏற்படும் நன்மைகளை, மேல் நாட்டார்களைப் போல் நாம் இன்னும் சரியாக உணராமலிருக்கிறோம். இதற்குக் காரணம், நம்முடைய அலட்சியமும், வாழ்க்கைத்தரப் பற்றாக் குறைவுமே என்பது விளங்கும். சத்துள்ள ஆகாரம் எவை என்பதைத் தெரிந்தும், இதனை நம்மனோரில், அநேகர் கைக்கொள்வதில்லை. இவர்களில் பெரும்பாலோர், சத்துள்ள உணவு கொள்ளக் கூடிய தகுதியான வாழ்க்கை நிலையுள்ளவர்கள்; வேறு பலர் 'வெந்ததைத் தின்றுவிட்டு, விதிவந்தால் சாவோம்' என்ற நிலைமையி லிருப்பவர்கள்.

இவர்கள் நினைத்தாலும்கூட, ஓரளவுக்குச் சத்துள்ள ஆகாரங்களைக் கொள்ள முடியும். ஆனால் பொதுமக்கள் எப்படி அறியாமைக்கும், மூடத்தனத்துக்கும் ஆளாகியிருக்கிறார்களோ, அவர்களைப் போலவே படித்தவர்களில் பெரும்பாலோர் அறியாமையுடையவர்களாய் இருப்பது கண்கூடு. அதுவும் உணவு விஷயத்தில் இவர்களது அறியாமையை நாம் மன்னிக்க முடியாது. மற்றவர்களுக்கு வழிகாட்டக்கூடிய இவர்களே இம்மாதிரி யிருந்தால், பொதுமக்கள், எம்மாதிரி இருப்பர் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

எவ்வளவுக் கெவ்வளவு மக்கள் சத்துள்ள ஆகாரங்களைச் சாப்பிட்டு, உடற்கட்டுடன் ஆரோக்கியமாக இருக்கிறார்களோ, அவ்வளவு நாட்டுக்கு நன்மைகள் உண்டு. நல்ல தேகபலமுள்ள மக்கள் ஒரு நாட்டுக்குச் சிறந்த செல்வமாவார்கள். நாட்டின் நல்வாழ்வையும், ஆரோக்கியத்தையும் முன்னிறுத்தியே மக்கள் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்று கோரப்படுகிறது. இதன் நோக்கம், மக்கள் வாழ்க்கைத்தர உயர்வு, அவர்களைக் கல்வி கற்றவர்களாகவும், தேகாரோக்கிய முள்ளவர்களாகவும் மாற்றுவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்பதாகும். இதன்மூலம் நாட்டில் மகிழ்ச்சியும் மனத்தெம்பும் இருந்து வரும் என்பது ஒரு தலை.

இந்தியா போன்ற நாடுகளில் மக்கள் உணவுத் துறையில் காட்டி வரும் அலட்சியம் எல்லோரும் தெரிந்ததொன்றும். இப்படியான அலட்சியத்துக்கு மக்கள் மட்டும் காரணமல்ல; அரசாங்கத்தின் பொறுப்புக் குறைவும்

முக்கிய காரணமாகும். அரசாங்கம் என்ற நல்ல பெயரைத் தாங்கி நிற்க விரும்பும், எந்தவொரு அரசாங்கமும், அந் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு அடிப்படையான கல்வியை வழங்கும் என்பது வெள்ளிடைமலை. அதனை நம் அரசாங்கம் சரிவரச் செய்யவில்லை என்பதை நாம் வருத்தத்தோடு குறிப்பிட வேண்டியதிருக்கிறது.

மக்கள் நல்வாழ்வுக்குச் சத்துள்ள ஆகாரம் மிக இன்றியமையாதது. ஆனால், இவ்வாகாரம் மக்கள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இதற்குப் பணத்தட்டுப்பாடு மட்டும் காரணமல்ல; நம்முடைய உணவு வியாபாரிகளும் முக்கிய காரணமாவர். இந்திய மக்கள்தாம் உலகிலேயே மிகச் சத்துக் குறைவான ஆகாரத்தைச் சாப்பிடுகிறவர்கள் என்று தெரிகிறது. சத்துக் குறைவான ஆகாரத்தில் இருக்கும் கொஞ்சத்தையும் கூட, உணவு வியாபாரிகள் அபகரித்துக்கொண்டு விடுகின்றனர் மக்களுடைய பணத்தைப் பறித்துக்கொண்டு இப்படிச் செய்வது கண்டு யாரும் வருந்தாமலிருக்க முடியாது. உலகிலேயே நாணயக் குறைவான வியாபார முறைகளைக் கையாளுவதில் இந்திய வியாபாரிகள் முன்னணியில் நிற்கின்றனர். நம்முடைய வியாபாரிகளது தவறான நடத்தையை நம் அமைச்சர்களில் பலர் அவ்வப்போது எடுத்துக்காட்டி வந்திருப்பதும் நம் கூற்றை மேலும் உறுதிப்படுத்துகிறது.

உணவுக் கடைகளில், மக்கள் சாப்பிடுகிற ஆகாரங்களில் உள்ள சிறு ஜீவசத்துக்கள்கூட, மக்களுக்குக் கிடைக்காது செய்வதில் நம் வியாபாரிகள் போதிய விழிப்போடு இருந்து வருகின்றனர். சிறிது தெளிவாகச் சொன்னால், கலப்பட உணவின் மூலம், மக்கள் பணத்தைச் சுரண்டுவதோடு, அவர்கள் தேக நலத்தையும் உறிஞ்சி வருகின்றனர், நம் வியாபாரிகள் என்று கூறலாம்.

சான்றாக, நெய்யில் கொழுப்புச் சத்து இருக்கிறது. பாலில், உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாததான 'புரோட்டின்' மிகுதியாக இருக்கிறது. ஆனால் அவ்விரண்டு சத்துக்களும் கிடைக்காதபடி, உணவு வியாபாரிகள் மோசடி செய்து வருவது தேற்றம். பாலில் எவ்வளவுக்குத் தண்ணீர் கலக்கமுடியுமோ அவ்வளவு தண்ணீரைப் பால் வியாபாரிகள் கலந்து விடுகின்றனர். அதேபோல் நெய்க்குப் பதிலாக, கலப்பட எண்ணெய்களை நெய் மாதிரி கொழுப்பாக்கி 'நெய்' என்ற பெயரால் விற்று வருவதும் பிரசித்தம். இதேபோல் பலகார, காப்பிக் கடைக்காரர்களும், உணவு விடுதிக்காரர்களும், அவரவர்களது

வியாபாரத்தில் செய்துவரும் செப்படி வித்தைகள் சொல்லாமலே விளங்கக்கூடும். முக்கியமாக இக்கடைகள் கலப்பட உணவுகளை விற்று வருவதில் பெயர் போனவைகள் என்பது தெரியும். ஆனால், இவர்கள் இக்கடைகளை வைத்து நடத்துவதற்கு, நகர சபைகளில் இருந்து பெறும் அனுமதி பத்திரங்களில், கடைகளைச் சுத்தமாக வைத்திருப்பதாகவும், கலப்பற்ற உணவுகளை மக்களுக்கு வழங்குவதாகவும் வாக்குறுதி வழங்கி, இவ்வனுமதியைப் பெறுகின்றனர். இதன்படி, இவர்கள் கடைகளைச் சுத்தமாக வைத்திருக்கிறார்களா என்பதையும், கலப்பட உணவு விற்கிறார்களா என்பதையும் அறிய தனி இன்ஸ்பெக்டர்கள் வேறு நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனாலும், இன்ஸ்பெக்டர்களை, இலஞ்சம் கொடுத்து உணவு வியாபாரிகள் விலைக்கு வாங்கி விடுகின்றனர். இது பன்னெடுங் காலமாய் இருந்து வரும் பழக்கம். சுதந்திர இந்தியாவிலும் இந்த நிலை நீடிப்பது, வெட்கக்கேடான செயலாகும்.

பாலில் தண்ணீரைக் கலப்பதோ, அன்றி நெய்யில் செயற்கைக் கொழுப்பைக் கலப்பதோ, நல்லெண்ணெய்க்குப் பதிலாக, கடலை எண்ணெய்களை உபயோகப்படுத்துவதோ கூடாது என்பது தெரியும். இப்படிச் செய்வது உணவில் நஞ்சைக் கலப்பதற்கொப்பாகும். இப்படிச் செய்கிறவர்களை, சமூக விரோதிகளாகப் பாவித்துக் கடும் தண்டனைக் கொடுப்பதும் தகும். ஆனால் இதுவரை அமலில் இருந்து வந்த உணவுச் சட்டத்தின் மூலம் வியாபாரிகளைக் கடுமையாகத் தண்டிக்க முடியாதபடி இருந்து வந்தது. இதனால் வியாபாரிகள் மக்களுடைய செங்குருதியில், போக்கு வரத்து நடத்தியதோடு, இதன்மூலம் வந்த இலாபத்தைக் கொண்டு, இடம்பக் கூத்தடித்தும் வரலானார்கள். இவ்வாறு இவர்களை விட்டுக் கொண்டிருப்பது, மக்களை நல்ல பாம்புகளோடு சேர்த்துவிட்டதற்கு ஒப்பாகும் என்பதை, இந்திய சுகாதார அமைச்சர் திருமதி அமிர்தகௌரி உணரலானார்கள்.

திருமதி அமிர்தகௌரி அவர்கள் விரைவில் இந்தியப் பாராளுமன்றத்தில், ஒரு புதிய சட்டம் கொண்டுவர விருக்கிறார்கள். இச் சட்டம் கலப்பட உணவுக்காரர்களைக் கடும் தண்டனைக்கு உள்ளாக்கும் விதத்தில் இருக்கும் என்று தெரிகிறது. ஆதலினால், நமது அமைச்சரின் இப் புதிய சட்டத்தை நாம் மனமுவந்து வரவேற்கிறோம்.

சந்தா நேயர்களுக்கு

முன் அறிக்கை

நமது “ஆனந்தபோதினி” மாதப் பத்திரிகைக்கு நாளது நந்தன வருஷம் ஆனி மாதத்தோடு முப்பத்தேழாம் ஆண்டு பூர்த்தியடைகிறது. ஆகவே, ஆடி மீ 1-தேதி (16-7-52) 38-வது ஆண்டு பிறக்கப்போகிறது. ‘ஆனந்தபோதினி’ தன் பருவத்திற்கேற்ற வளர்ச்சிபெற்றுக் காலவர்த்தமானத்துக்கு இயைந்த பற்பல சிறப்பியல்புகளுடன் விளங்கி வருவது வாசக நேயர்கள் அறிந்த தொன்றும். தமிழ்மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் ஒரு விழிப்பையும் எழுச்சியையும் அறிவையும் உண்டாக்கித் தக்க வழி காட்டுவதே ‘ஆனந்தபோதினி’யின் முதற் பெரும் நோக்கமாகும். 38-வது ஆண்டில் இன்னும் குறிப்பிடத் தக்க விசேஷ அம்சங்களுடன் கூடி விளங்கி ‘ஆனந்தபோதினி’ உங்களுக்குப் பெரு மகிழ்வை ஊட்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். தமிழ்மொழி, சமூகம், சமயம் ஆகியவைகளின் மறுமலர்ச்சிக்கான வகையில் பல கட்டுரைகளையும் சிறு கதைகளையும் தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் பலர் ‘ஆனந்தபோதினி’யில் எழுதி வருவார்களென்று அறிவிக்க விரும்புகிறோம்.

நாம் இறைவன் திருவருள் ஒன்றையே நம்பி, தமிழ் மக்களுக்கு நம்மாலான சேவையைச் செய்ய வேண்டுமென்ற ஒரு பெரும நோக்குடனேயே, குறைந்த சந்தா விகிதம் ஏற்படுத்தி நிறைந்த விஷயங்களைக் கொடுத்து ஒழுங்காக இந்த முப்பத்தேழு வருஷ காலமாக நடத்தி வந்திருக்கின்றோம. ஆதலால், “ஆனந்தபோதினி”யின் பால் அன்பு பூண்டு ஆதரித்துவரும் வாசக நேயர்கள் அனைவரும் 38-வது ஆண்டின் சந்தாத் தொகையை நாளது நந்தன ௵ ஆனி மீ 17-ந்தேதி (1-7-52)-க்குள் மணியார்டர் மூலமாகவோ, நேரிலோ எங்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டுகிறோம் சந்தாத் தொகையின் பொருட்டு வி. பி. அனுப்புவதால் தபால் செலவு 4½ அணா மணியார்டர் கமிஷன் இரண்டணா ஆக 6½ அணா அதிகமான செலவும் சஞ்சிகை வந்து சேர வீண கால தாமதமும் ஆகும். ஆகையால் எல்லா நேயர்களும் மேற் குறிப்பிட்ட தேதிக்குள் மணியார்டர் செய்து விடுவதுதான் நேயர் அவர்கட்கும நமக்கும் லாபமும் சௌகரியமும் ஆகும்.

மானேஜர்.

குறிப்பு:—முன் பணம் அனுப்புவோர் பழைய சந்தாதாரர்களாயிருந்தால் மணியார்டர் கூப்பனில் தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டுப் “புதிய ஆண்டிற்கு” என்று விவரம் எழுத வேண்டும். புதிய சந்தாதாரர்கள 38-வது ஆண்டுக்கு என்ற விவரம் எழுத வேண்டும.

பூ விற்கிறதே! ★

வேதி ★

மாலை நேரம். தென்றல் தவழ்ந்துகொண்டிருந்தது. கார்காலத்துச் சின்னமாக எங்கும் பசுமை விரிந்து கிடந்தது. காலையில் பிரிந்த கன்றுகளைக் காணும் ஆவலுடன் ஆனினம் வீட்டை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தன. சிற்றிலிழைத்து விளையாடும் சிறுமியர் மங்கைக்கு வழி விட்டொதுங்கி வேடிக்கை பார்த்து நின்றனர். ஆசைக் குழந்தைகள் விளையாட்டைக் கண்டு வியந்த வண்ணம் மகளிர் வாயிலில் நின்று தெருவுக்கு அழகூட்டிக் கொண்டிருந்தனர். வயதுப் பெண்கள் கூந்தலைப் பின்னிக்கொண்டே பூக்காரியின் வருகைக்காக வாயிலுக்கும் உள்ளுக்குமாக நடை பயின்று கொண்டிருந்தனர். பூ...வோ... பூ! மு...ல்...லை ..பூ...வாங்கலையோ......முல்லைப்பூ......என்ற ஒலியும் இழைந்து வந்தது தென்றலுடன் எங்கிருந்தோ.

தலைவி வாயிலுக்கு வருவதும் உள்ளுக்குப் போவதுமாக யாரையோ எதிர்பார்த்து நின்றாள். ஆம். உண்மையிலேயே அவள் எதிர்பார்த்தது, அவள் உள்ளங் கொள்ளை கொண்டவனைத்தான். பார்த்த கண்ணும் பூத்துப் போயிற்று. வரவேண்டிய ஆள் வருவதாகவே தெரியவில்லை. போனவேலை முடிந்துதானே அவன் திரும்பவேண்டும்! காத்துக் காத்துச் சலித்துப்போய் வீட்டினுள் சென்று கன்னத்தில் கை வைத்துச் சிந்தனையிலாழ்ந்து விட்டாள். அருகில் தோழி வந்து நின்றது கூடத் தெரியாத அளவுக்கு அவள் எண்ணக் கடலில் அமிழ்ந்து கிடந்தாள். மருட்சி, ஐயம, ஆவல், ஏக்கம், மகிழ்ச்சி, வருத்தம் ஆகிய அத்தனை உணர்வுகளும் அவள் வதனத்தில் வர்ண ஜாலம் காட்டிக் கறைந்து பறந்தன. எழுதிய ஓவியமாகிவிட்டாள் காவியக் கண்ணாள்.

அவள் உள்ளமும் உடலும் விம்மியடங்கியது. அதை நினைக்கும்போதே அவள் உள்ளம சிலிர்த்தது. தலைவன் பிரிதலுக்கு முதல்நாள், அந்தச் சேதியைக் கேட்டுவிட்டு அவள் பேசக்கூட மறந்துவிட்டாள். அத்தனை தூரம்போலும் பிரிவை எண்ணி. அவன் உள்ளங் குளிரப் பேசி, பேசவைத்து, போகவிருக்கும் எண்ணத்தைச் சொல்வதற்கே பெரும் பாடாய் போனது அவனுக்கு. துயரத்தால் துவண்டுபோன முத்தும் மாணிக்கமும் கலந்த அந்த மாலையைத் திருத்தி, நுதலும் புருவமும் தடவிக் கொடுத்து, ஆறுதல் கூறி என்றும் பிரியாதிருக்கும் பொருட்டுப் பொருள் தேடுவதற்கே இன்று பிரிகிறேன் என்ற சேதியைக் கூறி, அவளைச் சாந்தப் படுத்திய செயலை நினைக்க நினைக்க அவள் உள்ளம் ஏக்கம் கொண்டது. கார்காலம் வருமுன் வருகிறேன் என்று வாக்களித்துச் சென்ற அவன் வந்த பாடில்லை. அந்த எண்ணம் அவளை ஏதேதோ உலகிற்கு இழுத்துச் சென்றது. அதனாற்றான் அவள் அப்படி அசையாதிருந்தாள் போலும்.

தும்மல் கேட்டது. தலைவி எட்டிப் பார்த்துவிட்டுக் குனிந்து கொண்டாள். கண்கள் மட்டும் நீரைக் கொட்டின. உதடுகள் அசைந்தன. பேச முடியவில்லை அவளால், ஏக்கத்தின் விளைவாக. அதைக்கண்டு வருந்தி தோழியே பேச ஆரம்பித்தாள்.

"ஏனம்மா? எப்போது பார்த்தாலும் இப்படியே யிருந்தால் உடம்புதான் என்னவாகும்? அவர் வந்ததும் என்னையல்லவா குறைகூறுவார்!" வருத்தம் தொக்கி நின்றது அதில்.

"போதும், போதும்! நீயும்......அவரும்......! பொய்யே உங்கள் வாழ்வும் வழக்கமும். கார்.....!" அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. விம்மினாள்; வியர்த்தாள். அத்தனை துயரம்.

"இப்படி அவசரப்பட்டால் எப்படியம்மா? போனவேலை முடிந்துதானே வரவேண்டும்! முடிந்ததும் சொன்னபடி காலந் தாழ்த்தாது வந்து சேர்வார் வருந்தவேண்டாம்" தேற்றவேண்டி இரக்கத்துடன் சொன்னாள் தோழி.

"காலந் தாழ்த்தாது வருவாராமே! அவர் சொல்லிப்போன கார்காலந் தான் வந்துவிட்டதே. கர்ப்பிணிபோல் நகர்ந்து செல்லும் மேகமும் பசும்புற்றரையுங்கூட உனக்குத் தெரியவில்லையா?" ஏக்கமும் கோபமும் அதில் குழைந்து கிடந்தது.

"கார்மேகம் அல்லம்மா அது! அவர் வருகையை முன்னதாகச் சொல்ல வந்தது அவ்வளவுதான். முல்லைகூட இன்னும் அரும்பவில்லையே! அதுதான் கார்காலத்துச் சின்னம்"

இச்சமயம் இதமறியா பூக்காரி ஒருத்தி "பூ...வோ...பூ! முல்லைப் பூவோ......பூ......" என்று நீட்டி முழக்கிக்கொண்டு தெருவழியே நடந்தாள். இக்குரல் தோழியின் பொய்யை வெட்ட வெளிச்சமாக்கியது.

"பார்த்தாயா, முல்லை பூக்கவில்லையாமே முல்லை? அன்று ஏதேதோ பேசி, என்னை மயக்கி, நம்பச்செய்து கார்காலத்தில் வருகிறேன் என்று வாக்களித்துச் சென்றார் அந்தப் பொய்யர். அவரோ திரும்பி வந்தபாடில்லை. அவருக்கு ஏற்றாற்போல் நீயும் முல்லை அரும்பவில்லை என்கிறாய்! முல்லை அரும்பி, அதைப் பறித்து பூக்காரி விலைகூறிச் செல்கிறாள் தெருவழியே. போதும், போதும்! உங்கள் உறவு" ஏக்கமும் கோபமும் கொள்ள, முதன் முதலாக மேடையேறிப் பேசி இறங்கும் பேச்சாளன்போல், வார்த்தைகளைக் கொட்டி அடக்கினாள். அந்தத் தீராத ஆத்திரம் அவள் உதடுகள் அசைவதிலிருந்து தெரிந்தது பின்னும்.

தோழியோ களவும் கையுமாகப் பிடிப்பட்ட கள்ளன்போல் வாயடங்கிப் போனாள்.

"மருவந் தனத்து மணிமுத்த மாலை வகைவிடுத்துப்
புருவந் திருத்தி மதிநுதல் நீவிப் பொருள்வயிற்போய்ப்
பருவங் குறித்து வருமென் றுரைசொற் பழுதென்னவோ
தெருவந் தொறுந்தொறும் பூவிலை மாது திரிகின்றதே"

அம்பிகாபதி கோவை, 317.

திருமணம் நடைபெறுகின்றது!

கல்லாடன்

1

இடம்: மீனி என்ற தலைவியினது வீட்டின் முன்புறம்.

வேளை. மாலை வேளை.

இருப்போர்: மீனியின் தோழியான எயிற்றி, அவளது தாய்.

[மீனி, விடலை என்பவனை விரும்பிக் காதலித்தனள். இதனை அவ்வளவாக மீனியின் பெற்றோர் விரும்பமாட்டார்கள் என்று நினைத்த மீனி, தன் தோழியான எயிற்றி என்பவளது துணைகொண்டு ஓர் ஏற்பாடு செய்தனள். அதன்படி மீனியும் விடலையும் குறும்பூர் என்னும் சிற்றூர்க்கு ஒருவரும் அறியாவண்ணம் சென்று விடுகின்றனர். தன் மகளைக் காணாது வருத்தமுற்றனள் மீனியின் தாய். அது சமயம் வீட்டின் முன்புறத்தில் எயிற்றி உண்மையினைக் குறிப்பாகத் தன் தாய்க்கு உணர்த்தினள்.]

"எயிற்றி! உனக்குமா அவள் எதனையும் சொல்லி வைக்கவில்லை? உற்ற அன்புகொண்டு மீனியும் நீயும் எவ்வளவோ நெருங்கிப் பழகியும் பயன் என்ன? வீட்டின் பின்புறத்திலே கண்ணீரே கதியென்று எண்ணிக் காலையிலிருந்து கலக்கம் கொண்டு கிடக்கின்றனள் அவளது தாய்.........இனி எங்குதான் அவளைச் சென்று தேடுவது?"

"அம்மா! இனி இதனை நினைத்துத் தாங்களும் சேர்ந்து வருந்துவதில் என்ன பயன் காணப் போகின்றீர்கள்? தாங்களாகவே தேற்றிக் கொள்ளுங்கள்."

"மகளே, அவள் இப்படிச் செய்வாளென்று யாருக்குத் தெரியும்? அவள் ஒருவருடனும் சொல்லாமல் ஓடிவிட்ட செய்தி ஊரையே ஒன்றாக்கிவிட்டதே! தெருவில் போவார் வருவார் அத்தனைபேரும் இந்த வீட்டை வெறிச்சென்று பார்த்துவிட்டுச் செல்கின்றனரே! பலர் பல்லிளித்துப் பேசும் பரிதாப நிலைமைக்கு நம்மை விட்டுச் சென்று விட்டாளே!"

"அம்மா, ஊராரை நாம் நினைக்கக்கூடாது; அவர்களது பெண்களில் எவளாவது ஒருத்தி எவனுடனாவது ஓடிவிட்டிருந்தால் அப்பொழுது நாம் திகைத்திருக்க மாட்டோமா? கல் தடுக்கிக் கீழே விழுந்தவனைக் கண்டு சிரிப்பதுதானே உலகத்து இயற்கை?"

"மகளே, இதோபார் எத்தனைபேர் கேலிச்சிரிப்புடன் வேண்டுமென்றே நம் வீட்டுக்கெதிரில் உலவுகின்றார்கள். இந்த சமயத்தில் எதை எண்ணி நாம் வருந்துவது?"

"அம்மா, கவலைப்படாதீர்கள்; எப்படியும் அவள் சிறிது நாட்களில் அவருடன் திரும்பி விடுவாள்!"

"அதுவரை யார் யாருக்குத் தேர்தல் கூறுவது? அவளை அழைத்துச் சென்றவன் எவனென்றே தெரியவில்லையே! எந்த இடம் சென்றாளோ? வழியில் எவ்வளவு வருத்தம் கொண்டாளோ? சிறுவயது முதல் என்னைத் தன் அன்னையினும் நேசித்தவள் பிரிந்துசெல்ல எப்படித்தான் மனங்கொண்டாளோ?"

"ஏதாவது புதுவிதத் தைரியங் கொண்டிருக்கலாம்......!"

"என்ன தைரியமோ? அவன் யாரென்றே இன்னமும் தெரியவில்லையே! மகளே, உன்னிடமுமா இதை மறைத்து வந்தாள்?"

"அம்மா, ஒன்று சொல்ல மறந்து விட்டேன்; நேற்றிரவு முன்னேரத்தில் அவள் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்ததம்மா!"

"உன்னையும் எங்களையும் விட்டுச் செல்லப் போகின்றோமே என்று கவலைப்பட்டுப் பயந்திருப்பாள்; எத்தனை நாட்களாக அவள் இந்த ஏற்பாட்டைச் செய்து வந்தாளோ?"

"அம்மா, மாலை நேரங்களில் பலமுறை என்னை விட்டுத் தனியே ஓடிவிடுவாள்!"

"அதைக் காலையிலும் சொல்லினாய். மகளே, நினைவு படுத்திப்பார். எவனாவது எப்பொழுதாவது அவளுடன் இருந்திருக்கின்றானா? அதை எப்பொழுதாவது நீ பார்க்க முடிந்ததா?"

"அம்மா,......அப்படி......ஒருவரும் இருந்ததாகத் தெரியவில்லையே......அம்மா! இப்பொழுது நினைவிற்கு வருகின்றது!... விடலை இரண்டொரு தடவைகள அவளது பின்னால் சென்றிருக்கின்றான்......அம்மா! ஒருமுறை என்னையும் வந்து கெஞ்சிக் கொண்டாரம்மா அவர்!........."

"ஆ!......என்னவென்று கெஞ்சினான் மகளே! சொல்......"

"அவரைப்பற்றி மீனியிடம் சொல்லி வைக்கும்படி வேண்டினார்; நான் மறுத்தேன் முதலில்........"

"அப்படியா! மகளே! விடலையா? நான் செவிலியாக இருந்தும் குறிப்பறியாமற் போனேனே! முன்னமே அவன் அவளை விரும்பியது எங்களுக்கும் தெரியும், மீனியின் தாய் ஒவ்வாது இருந்து விட்டாள். மீனியும் அவனை விரும்பினாளென்று இப்பொழுதல்லவா தெரிகின்றது!"

"ஆம்; அம்மா! முதலில் நானும் உண்மையினை உரைக்க அச்சங்கொண்டேன். தாங்களாகவே தெரிந்து கொண்டீர்கள்......அம்மா எங்கோயோ பறையொலி கேட்பதுபோன்று தெரிகின்றது. ஊர்ந்து கவனித்துப் பாருங்கள்."

"ஆம், மகளே! அது குறும்பூர்த் திசையிலிருந்தல்லவா வருகின்றது! மகளே குறும்பூரில் அல்லவா விடலை இருக்கின்றான்... பக்கத்து ஊரிலேயே நம மகள்............"

"ஆம், அம்மா குறும்பூர்ப் பறையொலியே அது. பறையொலிகேட்கும் வரையில் பொறுத்திருந்து சொல்ல நினைத்தேன். அங்கு மீனியும் விடலையும இப்பொழுது திருமணம் செய்து கொள்வதாக ஏற்பாடு!"

"மகளே................"

[எயிற்றியை அப்படியே கட்டித் தழுவிக்கொண்டு வீட்டின் பின கட்டிற்கு அவள் ஓடுகின்றாள்.]

2

இடம்: அவ்வீட்டின் பின்புறம்.

வேளை: முன் கட்டத்து நேரமே.

இருப்போர்: நற்றாய், செவிலி.

[நற்றாய் மீனியின் தாய், எயிற்றியின தாயும் நெருங்கிப் பழகிய தோழிகள.]

"தோழி, வா........ஏதாவது செய்தி கிடைத்ததா?"

"செய்தி கிடைக்காமல் என்ன? நாம வயதில் முதியவர்களாக இருந்தும் நாமே நம் பங்கில் தவறி விட்டோம்."

"என்ன! நீ சொல்வது......"

"என்ன இருக்கின்றது இனி? எல்லாம் என் மகளும் அவனும் செயத திட்டங்களே! நாமே அதை உணரவில்லை:......இனி சென்றவளை நன்றாக வாழ்க' என்று வாழ்த்தத்தான் வேண்டும்.

"பின் நாம் அவளை வைதுகொண்டா இருக்கின்றோம்?"

"அவளை மட்டிலும் வாழ்த்திப் பயன் யாது? அவர்களையல்லவா நான் வாழ்த்தச் சொல்கிறேன்."

"தோழி, அவளை அழைத்துச் சென்றவன் எவனென்று இன்னமும் தெரியவில்லையே?"

"இனி எவனாக இருந்தால் நாம் என்ன செய்வது?........எங்கேயோ பறையொலி கேட்பது போன்று தெரிகின்றதே......"

'ஆம், தோழி! குறும்பூர்ப் பக்கமாக அவ்வொலி வருகின்றது; இது திருமணப பறையொலி போன்று தெரிகின்றதே"

"குறும்பூரிலா! ஒருவேளை விடலைக்குத் திருமணமா?........',

"தோழி, சுற்றி வளைத்து என் பேசப்பார்க்கின்றாய்! விளங்கிவிட்டது......மீனிக்கும் விடலைக்கும் திருமணம்!......அவர்கள் வாழ்க!"

"உண்மைதான் தாங்கள் கூறுவது, அம்மா *நல்லூர்க் கோசர் பேச்சு எபபொழுதாவது பொய்த்திருககின்றதா?"

"நல்ல கேள்வி! ஏன் அவர்கள் எப்பொழுதாவது உண்மையன்றி வேறு எதையாவது பேசியிருக்கின்றார்களா?"

"அவர்கள் பேச்சில் எவ்வளவு உண்மை உண்டோ அவ்வளவு உண்மை நம்மகள் விடலையோடு கொண்ட நட்பு!"

"அன்றே தவறி விட்டேன்...இதனை முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா?"

"தெரிந்தால் குறிப்பிட்டிருக்காமல் விடுவேனா? சிறிது நேரத்திற்கு முன்னல்லவா என் மகள் இதனை என்னிடம் சொன்னாள்.

"தோழி! மிக்க மகிழ்ச்சி கொண்டேன்! பழைய ஆல மரத்தின் கீழே உட்கார்ந்து சபை கூட்டி உண்மையே பேசி நீதி உரைக்கும் கோசர்களது பேச்சைப்போன்று மீளி விடலையோடு கொண்ட நட்பு உண்மையென்று உணர்ந்தேன்... .....அவர்கள் வாழ்க!"

"ஆம்! அம்மா, அதோ திருமணத்தின் அறிகுறியாகப் பறை ஒலிக்கின்றது! பணிலம் ஆர்க்கின்றது!. ......"

"நன்கு ஆர்க்கட்டும்! நன்கு ஒலிக்கட்டும்! அவர்கள் நன்கு வாழட்டும்!!.........வெளியே தேடிச் சென்ற என் தலைவரும் வந்தவுடனே அவருக்கு இதனைச் சொல்லி மகிழ்விக்கின்றேன். விடலையும் மீளியும் இங்கு திரும்பி வரும்பொழுதாவது நல்ல வரவேற்புக் களைச் செய்வோம். நாம அங்கு இப்பொழுது இல்லையென்றாலும் சிறப்புற நடக்கட்டும் அவர்கள் திருமணம்!"

• • • •

"பறைபடப் பணில(ம்) ஆர்ப்ப இறைகொள்பு
தொன்மூ(து) ஆலத்துப் பொதியில் தோன்றிய
நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி ஆய்கழல்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே."

—(குறுந்தொகை 15)

* நல்லூர்க் கோசர் என்பவர்கள் பழங்காலத்து நீதிபதிகள். இவர்கள் ஆலமரத்தின் கீழ் சபை கூட்டி நீதி வழங்குவர். உண்மையே பேசுவர். பிற்காலத்தில் அரிச்சந்திரன் உண்மைக்காக புராணக் கதைகளில் சிறந்த உதாரணமாகக் கூறப்பட்டதுபோல, சங்ககாலத்தில் இவர்கள் உண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வந்தனர்.

தியாகி ★

சி. சிங்காரம்

★

உலக ஜீவராசிகளுக்கு தன் ஒளி பிழம்புகளைக் கொடுத்து அலுத்துக் களைப்புற்றிருந்த கதிரவன் ஓய்வெடுத்துக் கொள்ளும் பொருட்டு மேல்வானத்தின் மலை முகட்டின் உச்சியைத் தழுவிக் கொண்டிருந்தான். உழவர்கள் ஏர் கலப்பைகளுடன் தங்கள் வீட்டை நோக்கி விரைந்து சென்றனர். அவர்களின் கஷ்டத்தைக் கண்ணுற்ற வெய்யோன் கண் கலங்கி அதை வெளிப்படுத்த தன் செஞ்சுடர்களைச் சிந்திக் கொண்டிருந்தான். உழவர்கள் தங்கள் களைப்பை மறைக்கத் தெம்மாங்கு பாடிக் கொண்டே சென்றனர். பறந்து வந்த பறவைகள் அடித்த இறக்கைகளின் சப்தம் அவர்கள் பாட்டிற்குக் கடம் அடிப்பது போன்றிருந்தது. பொன்னியில் சுழித்தோடிய புது வெள்ளம் மேட்டிலிருந்து மடுவிற்கு இறங்கும்போது உண்டான ஒலி அவர்கள் பாட்டிற்கு பிடில் வாசிப்பது போன்றிருந்தன. இவைகளையெல்லாம் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தன இரு உருவங்கள். "விர்" என வீசிய வசந்தகாலதென்றல் மந்தகாசமாக இருந்தது அவர்களுக்கு. காதல் சிம்மாசனத்தில் அமர்ந்து அரசு செலுத்திய அக்காதலர்களுக்கு ஆடி, அசைந்த மரங்கள் வெஞ்சாமரை வீசுவது போன்றிருந்தது. அத்தான் என்றாள் அவள். வீணகானத்தையும் விஞ்சியிருந்தது அந்தக் குரலின் இனிமை. தங்கரளிப்பூ போன்ற அவள் தாடையை ஒருமுறை தட்டியபடியே 'என்ன மரகதம்?' என்றான் அவன் 'மறக்க மாட்டீர்களே அத்தான்?' என்றாள். 'மரகதம், மீன் நீரை மறந்து தரையில் வசித்தால் அதன் நிலை என்னாகுமோ! அதே நிலைதான் நான் உன்னை மறந்து இவ்வுலகில் வாழ்வது. அப்படியே அத்தான்! என்ற கூறியவாறே படுக்கையை விட்டு எழுந்திருந்தாள் மரகதம். சுற்றுமுற்றும் பார்த்தாள். கண்களை அகல விரித்துப் பார்த்தாள். ஏற்றிய விளக்கு ஏற்றியபடியே இருந்தது. திறந்த பெட்டி திறந்தபடியே இருந்தது. ஒரு கணம் அவள் கண்கள் அந்த பெட்டியை ஊடுருவி நோக்கின. அப்பெட்டியில் அழகாக அருமையாக பின்னிய துண்டு ஒன்று இருந்தது. பாலுவிற்காக பின்னிய துண்டுதான் அது. இமைக்காது அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்ததும் அவள் கண்கள் நீரைச் சொரிய ஆரம்பித்தன. அவளுடைய கன்னங்கள் செக்கர் வானம்போல் சிவந்தன. அவளுடைய கடந்த கால நினைவுகளும் அவளுடைய இதயக் கடலில் குமிழியிட்டு தோன்றத்தொடங்கின.

பாலு, சோமு, மரகதம் மூவரும் பால்யத்தில் ஒன்றாக ஓடி, ஆடி விளையாடியவர்கள், படிப்பிலும் விளையாட்டிலும் மிகச் சிறந்திருந்தான் பாலு. பாலுவினிடத்தில் மரகதத்திற்கு அளவுகடந்த பிரியம் உண்டாயிற்று. பாலுவும் மரகதத்தினிடம் எல்லையில்லா அன்பு வைத்திருந்தான். நாளடைவில் அவர்களுடைய அன்பு காதலாக மாறியது. மண மலரை மக்கள் விரும்புவது இயற்கையல்லவா? அறிவுமணம் வீசிய பாலுவின் வாழ்வு மலரை மரகதம் சூடிக்கொள்ள ஆசைகொண்டதில் தப்பல்லவே! அடிக்கடி இவ்வுலகை விட்டு அவர்கள் காதல் உலகில்தான் சஞ்சரித்துக்கொண்டிருப்பார்கள். அப்படியிருக்குங்கால்..........பாலு திடீரென்று பிழைப்பை நாடி கொழும்பு போகவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்து முடித்துவிட்டான். 'மரகதம், கொழும்பு போய்வருகிறேன்' என்றான் பாலு. 'மறந்துவிடா

தீர்கள் அத்தான்' என்றாள் மரகதம். 'மரகதம், உன் உருவம் என் இதயத்தில் குடிகொண்டு பிரதிபிம்பமாக என் கண் முன் ஊசலாடும் போது எப்படி நான் மறக்க முடியும்? மரகதம்' என்றான். 'சரி போய் வாருங்கள் அத்தான்' என்று அன்புடன் விடைகொடுத் தனுப்பினாள். அன்று பிரிந்தவர்கள் தான் அவர்கள். கொழும்புக்கு போன பாலுவும் இன்றும் திரும்பவில்லை.

பெற்றோர்களைச் சிறுவயதிலே இழந்துவிட்ட மரகதம் அவளுடைய மூத்த மாமாவின் ஆதரவில் வளர்ந்து வந்தாள். இமை கண்ணைக் காப்பதுபோல் அவளைக் கருத்தாக கவனித்து வந்தார். காளைப்பருவம் அடைந்த சோமுவிற்கு கன்னிப் பருவம் எய்தி ஆண்டுகள் மூன்று தாண்டிய மரகதத்தையே கல்யாணம் செய்து முடித்து விடவேண்டும என்று தீர்மானித்திருந்தார். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் வெகு துரிதமாக நடத்தினார். சோமு அவள் மாமாவின் ஒரே மகன். தனக்கும் சோமுவிற்கும் கல்யாணம் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டாள் மரகதம். காதலித்த பாலுவின் நிலை என்னாவது? இதுபோன்ற பல எண்ணங்களால் தாக்குண்டு தவித்துக் கொண்டிருந்தாள்.

சோமு மரகதத்தை தன் உள்ளக் கோயிலில் வைத்து பூஜை செய்தான். மரகதத்தின் கண்ணைக் கவரும் இளமை கொழிக்கும் வனப்பு. அமர்ந்த நடை ஒய்யார நகையிலே அரும்பும் முல்லைப் பல்வரிசையின் அழகு. தங்கத்தால் வார்க்கப்பட்ட பொன்மேனி. அவளுடைய அழகிலே லயித்துப்போய் அவனுடைய மனதையே அவளிடத்தில் பறிகொடுத்திருந்தான். அவளை யன்றி யாரையும் மணந்து கொள்வதில்லை என்ற திட்டமான முடிவுக்கும் வந்து விட்டான். மரகதத்திற்கும் தனக்கும் திருமணம் என்ற செயதிகேட்டு ஆனந்தத்தால் துள்ளியது அவன் மனம். ஆனால், இதற்குமுன் அவள் முகத்தில் தாண்டவமாடிய மகிழ்ச்சி குன்றிப்போய் வருத்த சாயல்களே அவளது முகத்தில் படந்திருந்தன. காரணம்? இது அவனையே அவன் கேட்டுக்கொண்ட கேள்வி. அவனுக்கு விளங்காத புதிராகவே இருந்தது.

அன்று கும்மிருட்டு. அந்த மையிருட்டில் ஏதோ ஒரு உருவம்' எங்கோ செல்வதை மின்னலின் உதவியால் பார்த்து விட்டான் சோமு. அந்த உருவம் பெண் உருவம்தான் என்று ஊகித்துக் கொண்டான். அந்த பெண் உருவம் எங்கே இந்த இருட்டில் செல்லுகின்றது என்று அறிய ஆசை கொண்ட அவன் மனம், அதை விடாது பின் தொடர்ந்தான். கரைபுரண்டோடும் காவிரியை நோக்கித்தான் சென்று கொண்டிருநதது. காவிரியை அடைந்ததும் அதன் அருகில் வந்து நின்றாள் அவள். சோமு அருகிலுள்ள மரத்தின மறைவில் நின்று ஒளிந்து நடக்கும் சம்பவங்களை உன்னிப் பாய்க் கவனித்தான்.

'தூயகாதலை துண்டிக்கும் இக்காதகர்கள் உலகிலிருந்து செல்ல எனக்கு விடை கொடு' என்று கூறியபடியே தாவணியை எடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு அதில் விழ இருந்த அவளைத் தடுத்துக் காப்பாற்றினான் சோமு, சோமுவிற்கு அவள் மரகதம் தான் என்று தெரியவந்தது. 'என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய்? மரகதம்?' என்றான். என்ன மரகதம் பெசாமலிருக்கிறாய்?

என்றான் பேசவேண்டும் என்றுதான் வாய் எடுத்தாள். ஆனால் வார்த்தைகள் வெளிவர மறுத்துவிட்டன. ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டு பாலுவை.....பாலுவை...என்றுதான் அவ வாய் சொலல முடிந்தது. விஷயம் என்னவென்று புரிந்துகொண்டு விட்டான் சோமு. இதற்காகவா மரகதம் உயிர்விடத் தயாரானாய்?' என்றான். 'சரி, வா போகலாம் என்று கூறிவிட்டு அழைத்துச் சென்றான். அப்பொழுது கீழ்வானத்தில் உதயமாக மறைந்திருந்த சந்திரன் மீண்டும் தன் சுந்தரமான ஒளியோடு வெளிக் கிளம்பினான். மரகதத்தின் உள்ளத்தில் படர்ந்திருந்த கவலையின் இருள் அகன்று களிப்பின் ஒளி வீசத் தொடங்கியது.

வீட்டை அடைந்த சோமுவிற்கு அன்றிரவு உறக்கமே குடி கொள்ளவில்லை. பிடிவாதக்காரர் அவனது தந்தை. அவர் செய்த முடிவை மாற்றவே முடியாது என்ற எண்ணங்களில் விழுந்த அவன் மனம் சிவந்தி வலையில் விழுந்த ஈப்போல் தவித்தது. கடைசியில் தான் இறப்பது என்ற முடிவிற்கு வந்தான்.

மறுநாள் காலை மகனைக் காணாத அவனது தந்தை அவன் படுக்கும் அறையில் போய் பார்த்தார். அங்கே கண்ணுக்கு தெரியும்படி வைக்கப்பட்டிருந்தது ஒரு துண்டுக் காகிதம். அதைப் பார்த்ததும் அவருடைய கரங்கள் அதை எடுக்க விரைந்தன. அதற்குள் அவர் இதயம் என்னமோ! ஏதோ, என்ற எண்ணத்தால் படபடத்தது. அதைப் பிரித்துப் படித்துப் பார்த்தார்.

அன்புள்ள அப்பாவுக்கு,

மரகதத்தை எனக்கு மணமுடிக்க தீர்மானித்திருக்கிறீர்கள். நானும் அவளையன்றி வேறு யாரையும் மணப்பதில்லை என்ற முடிவில் உள்ளவன். ஆனால் மரகதம் பாலுவை காதலிக்கிறாள். பாலுவும் மரகதத்தையே காதலித்திருக்கின்றான். காதலில் ஒருமித்து ஒன்றுபட்ட இரு உள்ளங்களை பிரிப்பது மகா துரோகம். அப்படி பிரித்தால் முடிவில் சோகம்தான் தழைத்தோங்கி நிற்கும் தாங்கள் செய்த முடிவையும் மாற்ற மாட்டீர்கள் என்ற குணமும் தெரியும். தங்களுடைய விருப்பத்திற்கிணங்க மரகதத்தை நான் மணந்து கொண்டால், மூன்று ஜீவன்களின் வாழ்வும் பாழ்பட்டுப் போவது திண்ணம். அதனால் நான் ஒருவன் இறக்க வேண்டியது அவசியம், இரு ஜீவன்கள் சந்தோஷமுடன் வாழ்க்கை நடத்த. நான் இறக்கும் இந்தக் கடைசி தருணத்தில் தங்களிடம் மகன் என்ற காரணத்தால் வேண்டுவது ஒரு கோரிக்கை மரகதத்தைப் பாலுவிற்கே திருமணம் செய்து அவள் வாழ்வின் வளப்பம் கண்டு பூரிப்புக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தங்களுடைய பெயரும் என் பெயரும் நிலைத்து நிற்கும். இத்தக் கடிகதத்தைப் பார்க்கும்போது என் உடல் காவிரியில் மிதக்கும்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
சோமு.

படித்து முடித்த அவன் தந்தை வெட்டுண்ட மரம் விழுவது போல ஐயோ என்றலறியடித்து தரையில் விழுந்தார். அவருடைய குடும்பமோ விவரிக்க இயலாத துன்பத்தில் சிக்குண்டு தவித்தது.

தன் பொருட்டுத் தான் சோமு உயிர் விட்டான் என்று அறிந்த மரகதத்திற்கு சொல்ல முடியாத வேதனை. அவளது உள்ளம் இதற்குள் அடிக்கடி அவரல்லவா ஒப்பற்ற மாபெரும் தியாகி என்று புகழ்ந்தது.

காலம் உருண்டோடியது. அவரது மனப்புண்ணும் காலதேவனால் சிறிது, சிறிதாக ஆறத்தொடங்கியது. மரகதத்திற்கு இனிமேலாவது திருமணம் செய்துவிட வேண்டுமென்று முடிவுசெய்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் வெகு துரிதமாக நடத்தினர். கல்யாணத்திற்கு நாளும் குறிப்பிட்டாய் விட்டது. பாலுவிற்கும் ஒரு வாரத்திற்குள் புறப்பட்டு வரும்படி தந்தி கொடுத்தாய் விட்டது.

பாலுவிற்கும் மரகதத்திற்கும் நல்ல சுபதினத்தில் திருமணம் நடந்தது. தங்களின் வாழ்வின் நலனுக்காக உயிர்விட்ட சோமுவின் படத்தின் முன் இருவரும் நின்று அவனது தியாகத்தைப் புகழ்ந்து வணங்கினர். சோமுவே மாபெரும் தியாகி என்று முணுமுணுத்தது அவர்கள் வாய்.

"ஆனந்த போதினி"

(மாதப் பத்திரிகை)

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி உள்பட இந்தியா, சிலோன்	ரூ. 2—0—0
வருடம் 1-க்கு வெளிநாடுகளுக்குச் சந்தா	ரூ. 3—0—0
நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை	ரூ. 0—8—0
சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை	ரூ. 0—4—0
ஜீவிய சந்தா	ரூ. 30-0-0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

எப்பொழுது சேர்ந்தாலும் ஆடி மீ முதல் கணக்கு வைக்கப்பட்டு சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால் பெட்டி நெ. 167, சென்னை.

பிரஞ்சுப் புரட்சியின் உதயம்

க. சிவநேசன் பி. ஏ.

★

கி. பி. ஆயிரத்து எழுநூற்றி எண்பத்தொன்பதாம் ஆண்டு ஜூலை மாதம் பதினாறாம் தேதி. காலை வேளை. பாரிஸ் மாநகரத்தில் முக்கியமாக வீதிகளெங்கும் ஒரே மக்கட் கூட்டம். கடலலைபோல் மக்கள் பொங்கி யெழுகின்றனர். குமுறுகின்றனர். அவர்களுடைய கூக்குரல் வானையே பிளக்கின்றது! எள் போட்டால் எள் விழாது. அவ்வளவு நெருக்கம், பாரிஸ் மாநகரத்தில் வசித்து வந்த அவ்வளவு மக்களும் தெருக்களில் குழுமியிருந்தனர் என்றால், ஆச்சரியமில்லை. பெரிய திருவிழா ஏதாவது நடந்தால் எவ்வளவு கூட்டம் நெருக்கித் தள்ளிக்கொண்டிருக்குமோ அவ்வளவு கூட்டம் கூடியிருந்தது. ஏதாவது திருவிழாவோ அல்லது வேறெதாவது புரட்சியோ? பதினாறாம் லூயி என்ற அரசன் மேரி அண்டாய்னெட் என்ற தன் மனைவியுடன் பிரஞ்சு நாட்டை ஆண்டுவந்த அப்போது மடை திறந்தாற்போன்று பொங்கியெழும்பிய இம்மானிடத் தொகுதியின் உற்சாகந்தான் என்ன? ஏனிப்படி அலைமோதி வீசுகின்றனர்? அவர்கள் அப்போது போட்ட கூக்குரலில் உலகமே செவிடாய் விடுமென்றாலும்; வெர்செய்ல்ஸ் (Versailles) மாநகரில் கானகத்தில் வேட்டையாடியும், உண்டுறங்கியும், அண்டாய்னெட்டுடன் இன்ப அரசு செலுத்தி வந்த லூயி அரசனுக்கு இந்தக் கூட்டத்தின் கூக்குரல் செவியில் நுழையாதது மிக ஆச்சரியந்தான்! ஆயினும் வெளித்தோற்றத்திற்கு கலக்கமற்று இன்பமாய்ப் பேசி நெஞ்சத்துள்ளே குமுறும் மனிதர் போன்று அன்று பிரஞ்சு அரசாட்சியில் மறைவாக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் காரியங்கள் நடந்துகொண்டிருந்தன! காலச்சக்கரத்தில் பிரஞ்சு ஆட்சி நிலைமாறி, 'என்று கவிழ்ந்து விடுமோ' என்று ஐயுறும் வண்ணம் பதினாறாம் லூயி காலத்தில் அமைந்திருந்ததெனில் மிகையில்லை. காலா காலமாக குறிப்பிட்ட அரசர்களின் கீழ் அல்லது அவர்களின் கொடுங்கோலாட்சியின் கீழ் துன்புற்று வந்த பல்லாயிர மக்களும், பதினாறாம் லூயி காலத்தில் விடுதலைப் பாதையை நோக்கி முன்னேறும் தூரமும் வெகுவாகக் குறைந்து விட்டதென்று உலகுக்கு அறிவிக்கவே அன்று அக்கூட்டம் நிலைதடுமாறி குழுமியிருந்ததெனில் மிகையாகாது!

இறக, அன்று ஜூலை பதினாலாம் தேதி விடியற்காலை சுமார் ஐந்துமணி யிருக்கும். பிரஞ்சுத் தளபதிகளில் ஒருவரான பெசன்வால் தன் பாசறையில் அரைத்தூக்கத்தில் இருந்தபோது திடீரென கம்பீரமும், கோபமும் நிறைந்த பார்வையையுடைய ஒரு உருவம் மனோவேகத்தில் கீழ்க்கண்ட வார்த்தைகளைப் பேசி மறைந்தது. "இன்று எழும் மக்கட் திரளை எதிர்ப்பது வீணான காரியம்! குருதி சொரிந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை." அத் தளபதிக்கு முழு ஆற்றலிருந்தும் அவ்வுருவத்தைக் கைது

செய்யாதது மிகமிக ஆச்சரியம். அந்த உருவம் யார் என்பதைப் பற்றிப் பெசன்வால் எவருக்கும் அறிவிக்கவேயில்லை.

சுமார் ஒன்பதுமணி யிருக்கும். பாரிஸ் மாநகரில் நிலை தடுமாறி கூக்குரலிட்டுக் கொண்டிருந்த அத்தனை பேரும் போர்வீரர்களின் களிப்பிடத்தை (Hotel des in valides) நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தனர். பெரிய மதிற்சுவரையும், திண்மையான சுவர்களையும் கொண்ட பிரம்மாண்டமான மாளிகையில் நிறையத் துப்பாக்கிகள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்று மக்கட்கு எந்த விதமோ தெரிந்ததுதான் அவர்களுடைய அந்த ஆர்ப்பாட்டத்துக்குக் காரணம். தேசியப் படைகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தன. அவ்விடத்தை யடைந்ததும் அக்கூட்டத்தினருக்குத் தலைகால் புரியவில்லை. அப்பிரம்மாண்டமான மாளிகையைத் தகர்ப்பதற்கு அல்லது அதனுள்ளே நுழைவதற்குத் தங்களால் ஆனவற்றை யெல்லாம் செய்து பார்த்தனர். வயது முதிர்ந்த சாமப்ரூயல் (நிர்வாகஸ்தர்) அவர்களிடம் தூதுவிட்டும் ஒன்றும் பலிக்கவில்லையாதலால், சிறிது யோசனை செய்து அம்மாளிகையின் கதவுகளையே திறந்துவிட்டார். வெளியில் குமுறிக்கொண்டிருந்த அத்தனை பேரும் உள்ளே நுழைந்தனர்; பாய்ந்தனர். மூலைமுடுக்கு ஒன்றும் விடவில்லை. எல்லாவற்றையும் பாய்ந்து பற்றிக்கொள்கின்றனர். ஒரே நெருக்கம். நோஞ்சல் பேர்வழி மூச்சுத்திணறி இறந்துபோய் விடுவான். மிகுந்த பசிகொண்ட ஒரு சிங்கம் இரையைத் தேடிக் கண்ணால் கண்டதும் எப்படிப் பாய்ந்து சென்று பற்றிக் கிழித்து நாசஞ்செய்து தன் பசியைத் தீர்த்துக் கொள்ளுமோ அதைப்போன்றிருந்தது அப்போதைய நிலைமை. ஐந்தாறு நிமிடங்களில் காட்சியே மாறிற்று! சுமார் இருபத்தெட்டாயிரம் துப்பாக்கிகளும் அங்கு குழுமியிருந்த மக்கட் படைகளின் தோள்கள்மீது அமர்ந்து அந்தக் கட்டடத்தின் அதிகாரிகளைக் கண்டு களிநடனம் புரிந்தன.

அடுத்த கணம் அங்கு குழுமியிருந்தவர்கள் அனைவருடைய உள்ளங்களும், கையும் பாஸ்டெயில் சிறைக்கோட்டையை நோக்கியிருந்தன. தளபதி பெசன்வால் செய்வதறியாது அத்திரளைக் கண்டு விழித்துக்கொண்டிருந்தான். பல்லாண்டுகளாகப் பெரிய பெரிய குற்றங்களுக்காகத் தண்டனை யனுபவிப்போரின் சிறைப்பீடமாக இருந்த அம்மா பெரும் கோட்டை பிரஞ்சு ஆட்சியின் சர்வாதிகாரச் சின்னமாகக் கருதப்பட்டு வந்தது. அக்கோட்டையின் மதில்களோ ஒன்பது அடி பருமனுமிருந்தன. போதுமான தேர்ச்சி பெற்ற வீரர்களும், போதுமான வெடிமருந்துகளும் இருந்தன. ஆனால் அந்தோ! ஒரே ஒரு நாளைக்கு மட்டும் போதுமான உணவே இருந்தது. காலை ஒன்பது மணியிலிருந்து அக்கோட்டையைச் சுற்றிப் பெருங்கூட்டம் திமிறிக் கொண்டிருந்தது. கோட்டையின் மேற்பார்வையாளரோ (டிலானே) அரசரின் உத்தரவைக் கைப்பிடிப்பதா அல்லது பாரிஸ் நகராண்மைக் கழகத்திற்குக் கீழ்ப் பணிவதா என்று புரியாது விழித்துக் கொண்டிருந்தார். அடிக்கொருதரம் மக்கள் அக்கோட்டையைத் திறக்குமாறு தூதுவிட்டு,பகல் உச்சி நேரத்தில் வெற்றிபெற்றனர். துரியோ (Thuriot) என்பவன் டிலானேவைக் கண்டு மக்களின் வேண்டுகோளை உரைக்கின்றான். ஆனால் டிலானேவோ சரணடைவதைவிட, அவ்விடத்தையே டைனமைட் வைத்துத் தகர்த்து விடுவதாக உரைக்கின்றான். தூரியோ கோட்டை மதில்மீது ஏறி நின்று டிலானேவுக்கு மக்கட் குழுவைக் காட்டிவிட்டு, ஒன்றுக்கும் இடங்கொடுக்காத அவனை விட்டு வெளியே வரும்போது, வேறொரு தூதுக்குழு உள்ளே செல்ல முயற்சிக்கின்றது. அவர்களைத் தடுத்தும் பயனில்லை. டிலானே அவர்களைச் சுடுமாறு உத்தரவு கொடுக்க, கோட்டை வாசற் கதவு சங்கிலிகளினால் மூடப்படுகிறது. வெடிச்சத்தம் கேட்கிறது. மக்களின் நெஞ்சம் கொதிக்கின்றது. ஆத்திரம் பொங்கி வழிந்து அவர்களின் நெஞ்சை அடைத்துக் கொள்ள தங்கள் துப்பாக்கிகளினால் சுடுகின்றனர். அவ்விடம் முழுவதும் ஓரே கலவரப் பிரதேசமாக மாறிப் போயிற்று. சுருங்கச் சொல்லின், பாரிஸ் மக்கள் பாஸ்டெயில் கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டனர்!

காலா காலமாய் பிரஞ்சு நாட்டில் அரசர்களின் சர்வாதிகாரம் விளங்கி வந்தது. பொது மக்களிட மிருந்து பெற்ற வரிப் பணத்தைக் கண்டவாறு செலவழிக்க முற்பட்டனர். தங்கள் கடமைகளை மறந்து, சுயநலத்தையே கருதி தீய வழிகளில் இறங்க முற்பட்ட அவர்களை எவராலும் நல்வழியில் திருப்ப முடியாதிருந்தது. இப்படிப் பல வருடங்கள் கழிய, பின்னர் ஆலயங்களில் இருந்த மதக் குருக்களின் ஆதிக்கம் சில நூறு வருடங்கள் வலுப் பெற்றிருந்தது. அரசர்கள் மதக்குருக்களுக்கு முழு உரிமையும் அளித்து அவர்களுக்கு அடங்கியிருந்த காலமும் உண்டு. அவர்களால் தங்கள் குடிகளை யிழந்த அரசர்களும் அநேகம் என்பதை நாம் நினைக்க வேண்டும். இங்ஙனம் சில வருடங்கள் மதக் குருக்கள் ஆதிக்கம் பெற்றிருக்க முடியரசுடன் பின்னும் நிலைகுலையலாயிற்று. போலிக் கொள்கைகளும், தீயச் செயல்களும் நிறைந்திருந்த காலத்தை நோக்கி ஆண்டுகள் பறந்தன. உலகின் சிருட்டிக் கர்த்தாவான ஆதிக்கடவுளின் அந்தமிலாமையையும் மறந்து, மனதுக் குகந்தவாறு ஒவ்வொருவரும் நடக்க ஆரம்பித்தனரென்பதில் ஐயமில்லை. இந்த நிலையில் பணம்பெற்றிருந்த பிரபுக்கள் ஆணவத்தால் தங்கள் நிலைமையும் மறந்து ஏழைகளை மிகவும் துன்புறுத்தி வரலாயினர். சகல உரிமைகளும் பெற்றிருந்த அவர்கள் ஏழைகளும், நடுத்தர வகுப்பினரும் பஞ்சம், பட்டினி இவைகளால் நலிந்துபோக, தாங்கள் மட்டும் அரச போகத்தில் வாழ்ந்து வந்தனர். ஒரு காலத்தில் மக்கள் தங்களுள் ஒருவனைத் தேர்ந்தெடுத்து அவனை நன்கு அலங்கரித்து தங்கள் யாவருக்கும் தலைவனாக நியமித்துப் பின் அவனுக்கே தங்களை அடிமை யாக்கிக்கொண்ட காலமும்

இருந்ததென்பது உண்மை. அங்ஙனம் நியமிக்கப்பட்ட அரசன் அல்லது தலைவன் (அவர்களை ஆளும் திறமையுடையவன்) அவர்களை ஆளாமல், போரில் ஈடுபட்டிருப்பதாக மக்கள் நினைக்க, நாகரிகப் பெண்ணழகிகளுடன் உல்லாசமாக இருக்க, அந்நாரி மணிகளே நாட்டை சகல உரிமைகளுடன் ஆண்டு வந்தனரென்பதும் உண்மை. இப்படி பதினைந்தாம் லூயி காலத்தில் உச்ச நிலையை யடைந்த இவ்வாட்சி பதினாறாம் லூயி காலத்தில் அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. முடியரசை யொழித்து குடியரசை யேற்படுத்தும் முயற்சியில் மக்கள் அடைந்திருந்த முதற்படியை நாம் முன்னே கண்டோம். அதைத் தொடர்வோம்.

பாஸ்டெயில் கோட்டையைச் சுற்றிப் போடப்பட்டிருந்த முற்றுகை எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் போடப்படாததாயிருந்ததெனில் மிகையாகாது. அங்கு குழுமியிருந்தவர்களின் எண்ணமெல்லாம் அந்தக் கோட்டைக்குள் எப்படி நுழைந்து அதைக் கைப்பற்றுவது என்ற நிலையிலிருந்தது. அப்போது லூயி தோர்னே என்ற ஒரு வண்டி புனைவோன் (Cart wright) தன்னைச் சுற்றிச் சிறு சிறு நெருப்புக் குண்டுகள் பறந்து வருவதையும் பொருட் படுத்தாது, கோட்டையின் முதல் கதவுப் பாலத்தின் (Draw Bridge) சங்கிலியைத் தன்னால் முடிந்த மட்டும் ஒரு சுத்தியலால் கொண்டு ஓங்கி அடிக்க முற்பட்டான். அவன் அவ்வாறு அடித்தது வானத்திலிருந்து பாதாளம் வரை சம்மட்டி கொண்டு அடிப்பது போன்றிருந்தது. திடீரென்று சங்கிலி யறுந்துபோக, பிரம்மாண்டமான கதவும் இடிமுழக்கத்துடன், தடாலென்று கீழே சாய்ந்தது. வெற்றி! வெற்றி!! வெற்றி! ஆனால், வெற்றியில் ஒரு சிறு பகுதியையே யடைந்தனர் மக்கள். இன்னும் அக்கோட்டையின் மற்ற எட்டு மதிற் சுவர்களையும், பீரங்கித் துளைகளையும் கடந்து செல்வதென்பது ஆகாத காரியமாக வல்லவா இருக்கிறது? அடுத்த கதவின் திறப்புச் சங்கிலியும் கோட்டைக்கு உட்புறமாக இருந்ததால், மக்களின் முயற்சி வீணாய்ப் போகலாயிற்று.

அக் கோட்டையினுள் சுற்றிப் பார்க்க வேண்டுமானால், பெரிய தாழ்வாரம், அநேக காரியாலயங்கள், மதிற் கதவுகள், பாலங்கள், எட்டுக் கோபுரங்கள் இவைகளை யெல்லாம் கடந்து செல்ல வேண்டும். இத்தகைய இடத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த முற்றுகை எந்தக்காலத்திலும் நிகழாததாயிருந்தது. ஒவ்வொருவனும் தனக்குத்தானே தலைவனாக இருந்தான். சிலர் கடைச்சட இருந்த சிறு சிறு வெடிக் குண்டுகளை வெறுங்கையிலேயே தூக்கிக் கொண்டு நகராண்மைக் கழகத்திற்கு ஓடினர். பெரிய அதிகாரிகள் யாவரும் தங்கள் தலை வெளியே காட்டாமல் அடங்கி யொடுங்கிக் கிடந்தனர். ஆனால் பாரிஸ்மா நகரில், முக்கியமாகக் கோட்டையினருகே மக்கட் கூட்டம், அடுப்பில் கொதிக்கும் குழம்பு போலும், சூறைக் காற்றிலகப்பட்ட பஞ்சைப்போலவும் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தனர். கருங்கச்

சொல்லின் அவர்களின் உள்ளங்கள் அவர்களிடம் இல்லையென்றே கூறல் வேண்டும்.

கண்டவர்களெல்லாம் சிறு சிறு போர்க் கருவிகளைக் கொண்டு வந்து அக் கோட்டையைத் தகர்க்க முயற்சித்துக் கொண்டிருந்தனர். ஒருவன் சயாம் மன்னரின் பழைய பீரங்கி யொன்றை எங்கிருந்தோ கொண்டு வந்து தன்னால் ஆனமட்டும் அதை இயக்கிக் கொண்டிருந்தான். மக்கள் மூலை முடுக்குகள் எங்கிருந்தும் தங்கள் துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் உள்ளேயிருந்த போர் வீரர்களோ குப்புறப்படுத்து பீரங்கித் துளைகள் வழியாகச் சுட்டனர். வெளியே மக்கள் ஆத்திரங் கொண்டு அக்கோட்டையின் பலவித அறைகளைக் கொளுத்த ஆரம்பித்தனர். ஒருவன் அக்கோட்டையின வெடிமருந்துக் கிடங்கையே கொளுத்த ஆரம்பித்ததும், மற்றொருவன் அதைத் தடுத்து விட்டான். ஒருவன் அங்கிருந்த ஓர் பெண்ணைக் கண்டு அவள் தான் டிலானேயின் மகள் என்று நினைத்து அவளையே உயிரோடு எரிக்க முயற்சித்தான். ஆனால் வேறொருவன் அவளைக் காப்பாற்றினான். அங்கிருந்த வைக்கோற் போர்கள் எரிக்கப்பட்டன. அதனால் அந்த மண்டலம் முழுதும் புகையால் சூழ, அங்கிருந்த மக்களே மூச்சுத் திணற ஆரம்பித்தனர். எப்படி அவைகள் எரிந்தனவோ அதே தன்மையில் மக்களின் உள்ளங்கள் எரிந்து கொண்டிருந்தன. அங்கு அன்று ஏற்பட்ட சத்தம் முடிவுக் காலத்தை நெருங்கிய பூமி வெடித்துச் சிதறுவது போலிருந்தது.

ஒரே கோரமான காட்சி, காணச் சகிக்கவில்லை. உள்ளிருந்த போர் வீரர்கள் சுட்டதினால் பலர் இறந்து குருதிவெள்ளம் ஓடலாயிற்று. காயமுற்றவர் அநேகர் இறக்குந் தருவாயில் உள்ளவர்களும், "உயிர் உள்ள வரைக்கும் போராடி வெற்றி பெறுங்கள்," என்று முழங்கிவிட்டு உயிர் துறந்தனர். "நகராண்மைக் கழகத்திலிருந்து மூன்று தூதுவர்கள் வந்து கோட்டைக் கதவினருகே நின்று கொடியை உயரத்தூக்கி அசைத்தும் பயனில்லை. முரசுகள் கொட்டியும் பயனில்லை. சிலர் பீரங்கித் துளைகளையே நாசம் செய்ய முயற்சித்தும் முடியவில்லை. ஒருவன் 'பாஸ்பரஸையும் டர்பன்டைன் எண்ணெய்யையும் கலந்து அந்தக் கோட்டைமேல் சொரிந்து எரித்து விடலாமென்று யோசனை கூறினான்.

அந்தக் கோட்டையில் உள்ள பெரிய கடிகாரம் ஒன்று ஐந்துமணி அடிக்கிறது. மாலை வேளை. உள்ளே சிறையில் அடைபட்டுக் கிடந்த கைதிகளின் செவியில் வெளியில் ஏற்பட்ட சபதம் காற்றில் கலந்து வந்து மெதுவாக ஒலித்தது. அவர்களுக்கு வெளியே என்ன நடக்கிறதென்றே தெரியாது. இப்படி நிலைமை யிருக்க, நாம் கோட்டைத் தலைவன் டிலானே என்ன செய்கிறானென்று பார்ப்போம். கலவரம் ஏற்பட்டது முதல்

அவன் வெடி மருந்துக்கு வெகு அருகிலேயே அமர்ந்து எப்போது அதற்கு வெடி வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்க, ஒரு கணத்தில் உள்ளே நுழைந்த தூதுவர்கள் போராடுவதையும் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் அப்போது இருந்த நிலைமையைக் கவனிக்கும்போது, மதில்மேலுள்ள பூனை போலவே யிருந்தது. ஒரு கணம் கிடங்குக்கு தீ வைத்துவிடலாமென்று நினைக்கின்றான். மறுகணம் வெளியே பாரிஸ் நகர மக்கள் போடும் கூக்குரலைக் கேட்டு பயங்கி இருக்கிறான். பாவம்! இன்னும் சிறிது நேரத்தில் அவனும், அந்தக் கோட்டையும் அதன் உள்ளே இருந்தவரும் அடைய வேண்டிய கதியையும் அவன் அறியாமல் அமர்ந்திருந்த காட்சிதான் என்ன காட்சி! காலக் கடிகாரம் மட்டும் அதன் வேலையைத் துரிதமாகச் செய்து கொண்டே யிருந்தது. அங்கே நடப்பதைப்பற்றி அதற்குக் கவலையே இல்லை.

சட்! அதோ பாருங்கள்! சோர்ந்துபோன கோட்டைக் காவலர்கள் தங்கள் துப்பாக்கி முனைகளை உள்ளே திருப்பிக் கொண்டனர். உடனே தங்கள் கைக்குட்டைகளை யெல்லாம் கொண்டு ஒரு பெண்கொடியைத் தூக்கிக் காண்பிக்கின்றனர். உள்ளே முரசுகள் ஒலிக்கும் சப்தம் மெல்லக் கேட்கிறது. இழுப்புப் பாலத்தில் உள்ள ஒரு சிறிய துவாரம் திறக்கப்படுகிறது. ஹேசர் மெய் லார்ட் என்பவன் கோட்டைக் கதவுக்கும் தான் நிற்குமிடத்திற்கும் இடையே அகழியைத் தாண்ட ஒரு குறுகிய பலகையைப் போட்டு அதன்மீது நடந்து செல்கின்றான். கீழே விழுந்துவிடாமல் பத்திரமாக நடந்து போய் அந்தத் துவாரத்தின் மூலம் காவலாளன் கொடுத்த ஒரு கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டு வந்து மக்களிடம் கொடுக்கிறான். ஆ! என்ன! 'சரணாகதி!' எல்லோருக்கும் மன்னிப்பு, விடுதலை, மக்கள் அதையும் நம்பவில்லை. திடீரென்று கோட்டைக் கதவு கீழே சாய்கின்றது. மெய்லார்ட் அதைக் கீழே பூட்டி விடுகிறான். வெளியில் நின்றிருந்த கூட்டம் உள்ளே குபுகுபுவென்று பாய்கின்றது. பாஸ்டெயில் கோட்டை விழுந்தது. வெற்றி! வெற்றி! வெற்றி! பிரஞ்சு மக்கள் சுதந்திரச் சூரியனை நோக்கிச் செல்லும் பாதையே திறந்துக் கொண்டது! குடியரசு அவர்களை எதிர்கொண்டழைத்தது!! பிரஞ்சுப் புரட்சியும் உதயமாயிற்று!!!

(கார்லைல் என்பார் எழுதிய 'பிரஞ்சுப் புரட்சி'யை ஆதாரமாகக் கொண்டது).

இறுதி முத்தம்

கவிமணித்தாசன்

★

அவன்:—

பள்ளியில் பாடம் கேட்கும் உள்ளமுன் உருவம் தேடித்
துள்ளிடும் போதில் என்னைத் திணறிட வைக்கும் உந்தன்
அள்ளிடும் கள்ளப் பார்வை அழகினைக் காணும் ஆசான்
உன்னொடும் உள்ளத் துணர்வை உணராது உலகில் காதல்
தெள்ளிய உண்மைப் பாதை முன்நிறைத் தெருவென் றெண்ணிக்
கிள்ளிடும் போதில் எந்தன் குருதியி னோட்டம் குன்றும்!
மெள்ளவுன் பெயரைச் சொன்னால் மேனியும் விம்மும் கண்ணே!
உள்ளத்து உயிரோ வியமே! ஊணுடை உறக்கம் இல்லேன்!

அவள்:—

இளமையில் கூடித் திரிந்து இன்பமா யாடிப் பாடிப்
பழகினோம் பாவும் இசையும் பைந்தமிழ்த் தமிழே யன்ன;
கழனியில் எச்சிற் கன்னல் கொடுத்தஎன் கன்னம் கன்னத்
துளவிய காங்கள் மீண்டும் உனைத்தொடத் துடிக்குது மெய்யே!
புலவனின் இதயம் பெற்றிக்கீகவிகளிற் புகுதற் போல,
உனத்தினிற் காதற் புணர்வால் ஈருடல் ஒருயி ரானோம்;
நலமின்றி நாளும் வாடும், பூங்கொடி துணையாய்த் தேடும்,
அலரிசை வண்டும், கொம்பாய், ஆகிநீ வாரா யன்பா?

அவன்:—

பஞ்சணைப் பரத்தைய ரின்பம் மிஞ்சிடப் பாரில் துன்பம்
எஞ்சிடும் ஈனர் வாழ்வில், இயற்கையின் காதல் வாழ்வு
அஞ்சிடும்; அவர்கள் வாழும், அவனியில் வாழ்ந்தும் வாழார்
நெஞ்சினில் ஈரமு மற்று, நீதியைக் கொல்லக் கற்று,
கொஞ்சமும் கூறிவின்றிக் கொள்கையைச் சுயநல மாக்கி
விஞ்சிடும் சாதிநு லங்கள் விளைத்திடும் வீண்சமூ கத்தார்,
பஞ்சாங்கம் பார்ப்பரே யன்றி, உள்ளத்தைப் பாரார் நாட்டில்,
வஞ்சியே! நீயும் நானும், வாழ்ந்திடல் அரிதரி தேகாண்!

அவள்:—

செங்கதிர் சேரும் சோலை, தென்றலான் சாரும் மாலை, [மின்னில்,
திங்களின் பொன்னொளி தன்னில், செய்மையின் தாரகை
புங்கையின் நிழலிற் பாவை; செங்கைகள் குழலிற் பூவைத்
தங்கிடச் செய்யும் காலை, தையலென் மையல் தணியச்
செங்கனிவா யிதழினில் முத்தத் துணையிதழ் கூட்டியன் நறவு,
அங்கணைக் கொங்கை அலற, அணைத்துநீர் குடிக்கும் ஞான்று,
மங்கையென் மனதில் தோன்றி, மறைந்தன ஓராயிர மின்பம்!
பங்கமில் எண்ணக் கோட்டை படிமிசைப் படிவதெந் நாளோ?

வேறு

அவன்:—

அன்றொருநாள் ஆதவனும் அர்புவியை அம்புவிக்கு
ஆளாக்கி வைத்துவிட்டு அடிவானை முத்தமிட்டுச்
சென்றிடுமவ் வேளைதனில் சோலைதனி லென்னுடனே,
செல்லமே நீ வெல்லமெனச் சொன்னமொழி மறப்பனோநான்!

'உன்றனையே மணந்திடுவேன், என்றனையே கொன்றாலும்
உயிருனையே வாடிவந்து கூடிவிடும் உன்னுடலில்'
என்றனையே இன்றேன்நீ நாணேங்க இளம் விதவை
என்றுலகம் பல்லிளிக்க ஏமாந்தாய், ஏனடி சொல்?

அவள்:—

பெண்ணொருத்தி எண்ணமதைப் பெற்றோரிடம் மற்றோரிடம்
பேசுதற்கும் பிறப்புரிமை பெறுவதற்கும் இல்லையிலை!
கண்ணனைய காதலினைச் சாதலினால் கண்டுமிந்நாள்,
காரியத்தில் காட்டவஞ்சும் சுயநலப்பேய்ச் சமூகத்திலே,
உண்ணத்தொழில் பண்ணாத ஒருதாக னெனைப் பார்த்து,
இளம் புரவி தனைக்கிழட்டு வண்டியிலே பூட்டிவிட்ட,
என்கதையைத் தந்தைதனின் வைதீகத் தையினிவரும்
எந்தனுயிர்த் தமிழ்நாடும் ஏடும்சொலிச் சிரிக்குமத் தான்!

அவன்:—

கடல்கடந்து போய்வருங்கால் காதலியுன் திருவுருவைக்
கண்டேனடி! கவினுறுமாய்! ஓவியனாய்! அந்தியிலே,
கடலலையில், இளங்கதிரில், நீலவானில், நிலவுதனில்
கள்வெறிகொள் மணத்தென்றலில், கண்சிமிட்டும் தாரகையில்!
புடமிட்ட பொற்றகவிதைத் தமிழ்ச்சித்திரம் புனைந்தெழுதிப்
பூரித்தேன்! புவனமதில்; ஈடில்லாப் பூவையுன்
உடம்புதனைப் பிரித்தனரேன் உயிருனையே பிரிக்கவில்லை!
உனையிந்த நிலையிலேனும் உறுத்தரிடைக் கண்டேனடி!

அவள்:—

வந்தவர்கள் வாழ்ந்திருக்கப் பிறந்தவர்கள் பிறநாட்டில்
வாழுமான மற்றுச்செல வகைசெய்த வைதீகம்,
அந்தமானுக் கடுத்த நாட்டில், அத்தானுமை அனுப்பிவைத்து,
அருந்தமிழின் பண்பாட்டை, அழித்துளனை அமங்கலியாய்
நந்தமிழர், நாட்டினிலே நாதியற்று நிற்கவைக்கா;
ஞானமற்ற ஈனரிடை நானுயிரைத் தங்களுக்காய்ச்
சொந்தமாக்கி வைத்திருந்தேன்; தொட்டணைத்து ஏற்றிடுங்கள்
தூயகாதல் சாட்சியிதோ! துளிவிடம்நம் மிருவர்க்குமே!

அவனும்—அவளும்:—

ஏழ்மையெனும் இருட்டினிலே, இன்னலுற்றோம் இன்பமில்லை!
உயர்வடைய எண்ணியும் நாம் பொருமையதால் வீழ்ச்சியுற்றோம்
தாழ்வுஎனும் சாதிபேதச் சாக்காட்டில் தள்ளிவிட்டார்,
சண்டாளர் சதியிருந்தும், தமிழ்வாழ்வு சற்றுகண்டோம்!
வாழ்வுஎனும் வாரியிடை அன்புவன்ன முடைந்து பட்டோம்!
வைதீக நச்சரவம் தீண்டியதால் சக்தியற்றோம்,
ஏழ்பிறப்பும் நமைப்பிணைக்கும் இன்னமுதாம் விடமருந்தி,
ஈருடலும் ஒருயிராய் அணைந்துமுத்த மிட்டிடுவோம்!

காதல் பாதையில்......

கங்காதேவி

★

வளைந்து கிடந்த மாமரக்கிளையில் மெல்லச் சாய்ந்து கொண்டிருந்த ராதா வெறும் வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். கிணற்றடியில் துணி துவைத்துக் கொண்டிருந்த அவள் தங்கை ரமணி தற்செயலாய் திரும்பிப் பார்த்தாள். அக்காவின் வெறித்த பார்வை அவளுக்கு வியப்பை அளித்தது. அவள் கவனத்தைத் திருப்ப எண்ணி, "அக்கா, அக்கா!" என்று மெல்லிய குரலில் அழைத்தாள் ரமணி.

கனவு கண்டு விழித்தவள் போலிருந்த ராதா, "என்ன?" என்று கேட்டு தங்கையின் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

"அக்கா, நம்ப போன வருஷம் புதுசா ஒரு ரோஜாச் செடி வைச்சோமில்ல; அது இன்னிக்கு பூத்திருக்கே பாத்தியா?" என்று ஆவலுடன் கேட்டாள் அவள்.

"உன் ரோஜாப் பூவைக் கொண்டுபோய் உடைப்பில் போடு," என்று வெறுப்புடன் கூறிவிட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள் ராதா.

"போ அக்கா! உனக்கு எதைக் கண்டாலும் எரிச்சல் தான். இப்பல்லாம் நீ பேசறதும், பார்க்கறதும் எனக்குப் பிடிக்கவேயில்லே." என்றாள் ரமணி கோபமாக.

"பிடிக்காட்டிப் பேசவேண்டாம் போ.

ராதா மறுபடியும் மோன நிலையில் ஆழ்ந்து விட்டாள்.

"இந்த அக்காவுக்கு என்ன தான் வந்திருக்கும்; வரவரப் பயித்தியம் மாதிரியே ஆயிட்டுதே!" என்று யோசித்தபடியே தன் வேலையில் ஈடுபட்டாள் ரமணி.

ராதாவுக்கும் வேதனை தான். "பாவம், ரமணி குழந்தை தானே; அவள் என்னத்தைக் கண்டாள். எனது நிலைமை அறியாது என்னைக் கோபிக்கிறாள் அவள். மலரும் மணமும் தான் என் வாழ்க்கையில் மதிப்பற்றுவிட்டதே! இதை அவள் உணரும் வகையில் உரைக்க எனக்குத் தெரியவில்லையே; இதற்கென்ன செய்வது? ஐயோ! ஓர் ஆண்டு முன் என் வாழ்க்கை இருந்த உன்னத நிலை! அவை யெல்லாம் உண்மை அல்லது வெறும் பகற்கனவா? எனது வாழ்க்கை ஒரு நாளைக்கு வரண்ட பாலைவனம் ஆகமாறி விடுமென்று என்றேனும் நான் கனவிலேனும் கருதியதுண்டா? அவள் மீண்டும், மீண்டும் யோசித்தாள். அவளுடைய துயரச்சுமை யெல்லாம் கண்ணீராக வெளிப்பட்டுக் கரைந்தது.

2

அப்பொழுது இனிய மணத்துடன் தவழ்ந்து வந்து கொண்டிருந்த தென்றலின் ஊடே சிகரெட்டின் வாசனையும் சேர்ந்து

வந்தது. "என்ன ஆச்சரியம் இது! சிகரெட்டின் வாசனை வருகிறதே! அவரைத் தவிர சிகரெட் குடிப்பவர்கள் இங்கு யார் இருக்கிறார்கள்? அவர்கூட இந்தப் பழக்கத்தை விட்டுப் பலநாள் ஆகிறதே" என்று எண்ணியபடியே திரும்பிப் பார்த்தாள் ராதா. அவ்வளவு தான்! அவள் இதயம் வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

அவள் நினைத்தது சரியாயிற்று. அவளுக்கு எதிரில்—சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்தான் ராமு. அது ராமு தான்! இதில் சந்தேகமேயில்லை. கம்பீரமான தோற்றம்; மலர்ந்த முகம்; சிரிக்கும் கண்கள். எதிரில் நிற்பவன் இத்தனைக்கும் உரியவனான ராமுதான். ஆனால் இன்று அவன் தோற்றத்தில் சிறிதளவு மாறுதல். அந்த அழகிய முகத்தில் வெறுப்பின் சாயல். அவனுடைய பார்ந்த நெற்றியில் வேதனையின் கோடுகள், சிந்தனையின் அடியினால் தாக்குண்ட ராதா சிறிது நேரம் சென்று உணர்வு பெற்றாள்.

ராமு என்ன செய்கிறான் என்று கடைக்கண்ணால் கவனித்த அவள், அவன் அப்பொழுதும் அசையாமல் தன்னையே உற்றுப் பார்ப்பதைக் கண்டு கூச்சமுற்றாள். அப்பப்பா! அந்தப் பார்வையின் கூர்மைதான் என்ன! அவளால் அதைத் தாங்கக்கூட வில்லை. அடுத்த நிமிடம் வீடு நோக்கி விரைந்தாள் அவள்.

அது வரையிலும் இருவரையும் ரமணி கவனிக்கவே யில்லை. அவள் பாட்டுக்குத் தன் வேலையிலேயே ஈடுபட்டிருந்தாள். அதைக் கவனித்த ராமுவும் வந்த சுவடு தெரியாமல் தன் வீடு திரும்பினான்.

வீட்டினுள் சென்ற ராதா படுக்கையில் போய் விழுந்தாள். ராமுவின் சந்திப்பினால் அவளுக்கு ஏற்பட்ட படபடப்பு இன்னும் அடங்கியபாடில்லை. அவளுடைய சிந்தனை மட்டும் தட்டிவிட்ட இயந்திரம்போல் தடதட வென்று பின் நோக்கி ஓடியது.

3

ராதாவும், ராமுவும் பக்கத்து வீட்டினர். இருவர் வீட்டுக் கொல்லையும் அடைப் பொன்றுமின்றி ஒன்றாய்க் கிடந்தது. ராதாவின் தந்தை அந்த வீட்டைப் புதிதாய் வாங்கினார். அவர்கள் முதல், முதல் குடிவந்தபோது அவளுக்கு அந்த வீடு பிடிக்கவே யில்லை.

"கிராமத்திலிருந்த நம்முடைய வீடு எவ்வளவு பெரியது! நம்முடைய தோட்டம் தான் எத்தனை அழகாகவும், அகலமாகவும் இருக்கும்! அதை விட்டு விட்டு டவுனில் வந்து ஏன் தான இந்தச் சின்ன வீட்டை வாங்கித் தொலைத்தார்களோ?" என்று வருந்தினாள் அவள்.

குருமூர்த்தி உடையாருக்குக் கிராமத்தில் சொற்ப நிலமும், ஒரு பெரிய வீடும் இருந்தது. சொந்தத்தில் மளிகைக் கடை வேறு வைத்திருந்தார். திறமை போறுமையால் கடையில் நஷ்டம் ஏற்பட்டு கடை கலைக்கப்பட்டது. அத்துடன் நிலமும்போய் விட்டது. உடனே உடையார் பிழைக்கும் வழி தேடி நகரத்துக்கு வர வேண்டியதாயிற்று. பிள்ளைகளை வேறு படிக்க வைக்க வேண்டியிருந்ததால் கிராமத்தி லிருந்த தம் வீட்டை விற்று விட்டு, நகரத்தில் சிறிய வீடாக வாங்கிக் கொண்டு குடியேறினர்.

அவர்கள் குடிவந்த சில தினங்களில் அடுத்த வீட்டினருடன் அதிக நட்புக்கொண்டு விட்டனர். ராமுவின் தந்தை சுப்பையா பிள்ளையும், ராதாவின் தந்தை குருமூர்த்தி உடையாரும் விட்டாலும் பிரியாத நண்பர்களாயினர்.

அவர்கள் மனைவிமார்களும் அப்படியே. குழந்தைகளோ பெரியவர்களை தூக்கியடித்தனர் தோழமையினால்.

ராமு அப்பொழுது சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 'இன்டர்மீடியேட்' முதல் வருடம் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு இரண்டு தம்பிகள். கடைக்குட்டி பையனான பாலுவுக்கு இரண்டு வயது. அவனுக்கும் ராதாவுக்கும் பிராண சிநேகிதம். எந்நேரமும் அவனைத் தூக்கி வைத்துக் கொண்டு விளையாடுவது அவளுக்குக் குஷியான பொழுதுபோக்காய் இருந்தது.

அன்றும் அப்படித்தான் கொல்லையில், பாலுவும் ராதாவும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது எங்கிருந்தோ ஒரு பூனைக்குட்டி ஓடி வந்தது.

"தம்பி, தம்பி! பூனைக்குட்டி பாத்தியாடா?" என்று உற்சாகமாய்க் கூவினாள் ராதா.

விடுமுறையில் ஊருக்கு வந்திருந்த ராமு தோட்டத்தைப் பார்ப்பதற்காக வந்தான். அங்கு விளையாடிக் கொண்டிருந்த அற்புத அழகி ராதாவையும், தம்பி பாலுவையும் கண்ட அவன் மறைவாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ராதா பூனைக்குட்டி பாத்தியாடா? என்று கத்தியதும், "எங்கடா தம்பி பூனைக்குட்டி?" என்று கேட்டுக் கொண்டே எட்டிப் பார்த்தான் ராமு.

முன்பின் தெரியாத இளைஞன் ஒருவன் தன் எதிரில் வந்து, நிற்பதைக் கண்டதும் அவளுக்கு வெட்கமாயிருந்தது. "பாலு நான் போறேன்; நீ வாரியா? வல்லியா?" என்று கேட்டுக் கொண்டே வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்தாள் அவள்.

4

காலையில் பால் வாங்கும் நிமித்தம் ராமுவின் வீட்டிற்குச் சென்றாள் ராதா. தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்த அவளைப் புன்னகையுடன் வரவேற்றாள் ராமுவின் அன்னை அம்மணி அம்மாள்.

"ஏன ராதா, என்ன ரெண்டு நாளாய் உன்னைக் கண்ணிலேயே காணோம்?" என்று கேட்டாள் அம்மணி அம்மாள்.

"வீட்டிலே ரொம்ப வேலை இருந்தது; அதுதான் வல்லே" என்று மொழிந்த ராதாவின் கண்கள சுற்றுமுற்றும் ஆராய்ந்தன.

"யார் அம்மா அங்கே வந்திருக்கிறது?" என்று கேட்டுக் கொண்டே அறைக்குள்ளிருந்து வந்த ராமு, ராதாவைப் பார்த்து லேசாக நகைத்தான், அவள் நாணத்துடன் வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

"அடுத்த வீட்டுப்பெண்; புதுசா அந்த வீட்டை வாங்கிகிட்டு வந்திருக்காங்க, நம் பாலுவுக்கு ராதாவைக் கண்டால் உயிர்தான்", என்று விவரித்தாள் அம்மாள்.

"ஓகோ அப்படியா?" என்று கேட்ட ராமு அவளை உற்றுப் பார்த்தான்.

பாலைக் கையில் எடுத்துக் கொண்ட ராதா "ஆசாமி பலே ஆளு தான் என்று நினைத்துக் கொண்டே அங்கிருந்து கிளம்பினாள். அன்று முதல் ராதாவுக்கு எங்கு நோக்கினும் இன்பமயமாயிருந்தது. எந்த வீட்டைக்கண்டு எரிச்சலுற்றாளோ அந்த வீடே இப்பொழுது இன்பபுரியாக மாறிற்று. அதற்குக் காரணம் ராமுதான் என்று நாம் சொல்லவும் வேண்டுமா?

மறுநாள் காலை கொல்லையில் பூப்பறிக்கச் சென்றாள். ராதா கிளுவை மரத்தின் உயரமான கிளையொன்றில் படர்ந்திருந்த மல்லிகைக் கொடியில் பூக்கள் கொத்துக் கொத்தாய் பூத்திருப்பதைக்கண்ட அவள் அதை வளைத்துப் பறிக்க முயன்றாள். அவள் எவ்வளவு முயன்றும் அந்தக்கிளை அவள் கைக்கு எட்டவேயில்லை.

"சனியன், சனியன்! கழுத்துதான் போவுதேயொழிய கைக்கு எட்ட மாட்டேங்குதே," என்று அலுத்துக்கொண்டாள் அவள். அவ்வமயம் பின்புறம் காலடிச் சப்தம் கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அங்கு ராமு வருவதைக் கண்டதும் அவள் மெய் சிலிர்த்தது; மனம் துடித்தது. அங்கிருந்து போய் விடுவதா? வேண்டாமா? என்று அவள் யோசித்து முடிக்கு முன்பாக அவள் அருகில் வந்து விட்டான், அவன்.

"ராதா!"

....

"ராதா பூ உனக்கு எட்டவில்லை போலிருக்கே; நான் பறித்துத் தரட்டுமா?"

"உம்"

அவன் அந்த உயர்ந்த கிளையை ஒரே தாவில் வளைத்துப் பிடித்துக் கொண்டான். அவள் சிரித்தாள்!

"அலக்கு வேண்டாம் போலிருக்கே!"

"என்ன ராதா! என்னை ஏணி மரம் என்று தீர்மானித்து விட்டாயா?"

"சே, சே அப்படிச் சொல்வேனா? நீங்கள் கொஞ்சம் உயரம்; அவ்வளவு தான்."

"ஓகோ; சரிதான்!"

பூப்பறித்து முடிந்தது. "உங்களுக்கு என்னால் சிரமம்." என்றாள் ராதா.

"பரவாயில்லை ராதா; இதென்ன பெரிய காரியம்."

அத்துடன பிரிந்தனர் அன்று. நாளுக்கு நாள் அவர்கள் நட்பு வளர்பிறையென வளர்ந்தது.

5

கிணற்று மேடையில் உட்கார்ந்து மலர் தொடுத்துக் கொண்டிருந்த ராதா, மிதந்து வரும் தென்றலில் கலந்து வரும் சிகரெட்டின் மணத்தைக் கண்டு ராமு வருகிறான் என்று தெரிந்து கொண்டாள்.

"ராதா! 'லீவ்' இன்னும் இரண்டு நாள் தான்; அதன்பின் நான் காலேஜுக்குக் கிளம்ப வேண்டியது தான்." என்று கூறிய படியே அவள் அருகில் வந்து அமர்ந்து கொண்டான் அவன்.

"மறுபடியும் எப்பொழுது வருவீர்கள் ராமு?" என்று கேட்டாள் ராதா.

"இதென்ன கேள்வி! இனிமேல் கோடை விடுமுறைக்குத் தான்."

"அதிருக்கட்டும் ராமு! இந்தப் புகை பிடிக்கும் வழக்கத்தை எங்கே கற்றீர்கள்? எப்ப பார்த்தாலும் சிகரெட்டும் கையும் தானா? எனககு சகிக்க முடியவில்லை; தலைவலி எடுக்கிறது." என்று முகத்தைச் சுளித்துக் கொண்டாள் அவள்.

"எல்லாம் காலேஜ் பழக்கம்தான் ராதா" என்று சிரித்தான் அவன்.

"ஓயாமல் புகை பிடித்தால் உடம்புக்காகாது ராமு; விட்டுத் தொலையுங்கள் இந்தக் கெட்ட பழக்கத்தை."

"உத்தரவுப்படியே!"

அவன் கையிலிருந்த சிகரெட்டப்பாவைத் தூரவீசி எறிந்தான்.

"இனிமேல் எப்பவும் தேடமாட்டீர்களே?"

"ஊகூம்."

"தியாகம் பெரிதுதான். சிரமமிருக்குமென்பது நினைவிருக்கட்டும்."

"இது கிடக்கு சின்ன விஷயம்; ராதா! உனக்காக நான் எத்தகைய துன்பத்தையும் தாங்குவேன்; எத்தனை தியாகம் வேண்டுமானாலும் செய்வேன், இது உறுதி!"

"அதைத்தான் பார்க்கப் போகிறேன்; நம் கலியாண விஷயத்தில் ராமு உங்கள் பெற்றோரிடம் சொன்னீர்களா? நம் காதலைப்பற்றி..."

"நான்தான் அப்பவே சொன்னேனே ராதா; கோடை விடுமுறையில்தான் இதைப்பற்றிப் பேச வேண்டும். இப்பொழுது

கான் வரட்டுமா? நேரமாயிற்று." குஷியாகச் சீட்டியடித்துக் கொண்டே எழுந்து சென்றான் அவன்.

6

ராமு ஊருக்குப் போய்விட்டான். ராதாவுக்கு நிமிடம் ஓர் யுகமாகி விட்டது. தன் வாழ்க்கை இன்பமெல்லாம் அவன் வாரிக்கொண்டு போய்விட்டதுபோல் தோன்றியது அவளுக்கு. அவனுடைய விடுமுறை தினத்தை ஒவ்வொரு நாளும் ஓயாமல் கணக்கிட்டுக் கொண்டிருந்தது அவள் மனம்.

"ராதே உனக்குக் கோபமாகாதடி" என்று அவன் அடிக்கடி விளையாட்டாகப் பாடும் பாட்டைத் திரும்ப முணுமுணுத்தது அவள் வாய்.

"ராமு! இன்றைக்கு நீ கட்டாயம் வந்துவிடுவேன்னு ராதா சொல்லிக்கிட்டிருந்தா; அப்படியே வந்துட்டியே நீயும்." என்று அம்மணி அம்மாள் அப்போதுதான் வந்த மைந்தனிடம் கூறினார்.

"ராதாவுக்கு ஜோஸ்யம் தெரியுமா என்ன? என்று சிரித்துக் கொண்டே வினவிய ராமு அடுத்த வினாடியே கொல்லைப் பக்கம் விரைந்தான். மாமரத்தின் கீழ் மலர்க் கொடியென நின்றிருந்த ராதா, ராமு வந்ததைக் கண்டதும் ஆவல் பொங்க அருகே ஓடினாள். சூழ் நிலைமறந்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் உரையாடினர் இருவரும்.

அப்பொழுது அங்குவந்த சுப்பையா பிள்ளைக்கு தூக்கி வாரிப்போட்டது, அவர்கள் அருகருகே அமர்ந்து உரையாடும் காட்சி!

"ஏய் ராமு! என்னடா செய்கிறே அங்கே? இங்கே வா சீக்கிரம்" என்று ஒரு அதட்டல் போட்டுவிட்டு உள்ளே போனார் அவர். ராதா மின்னலென மறைந்துவிட்டாள். தந்தையைத் தொடர்ந்த ராமு, "ஏன் கூப்பிட்டீர்கள்?" என்று கேட்டான்.

"ஏண்டா ராமு, அந்தச் சின்ன சாதிக்குட்டியோட போய் கண்ணுபின்னுன்னு பேசிக்கிட்டிருக்கியே என்ன? நாலுபேர் பார்த்தா சிரிக்கமாட்டாங்க?" என்று உறுமினார் பிள்ளை.

"ஏன் அப்பா சிரிக்கிறாங்க? நான் அவளைக் காதலிக்கிறேன்; அவளைத்தான் கல்யாணம் செய்துக்கப் போறேன்" என்று கூறிய ராமு நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டான்.

"ரொம்ப அழகாருக்கடா நீ பேசறது; நம்முடைய சாதி என்ன? குலம் என்ன? அந்தக் குட்டியைக் கட்டிக்கணும்னு எந்தப் புத்தியிலே நீ சொல்றியோ எனக்கு அதுபுரியல்லியே?" என்று எரிச்சலுடன் கூறினார் அவர்.

"அப்பா! நீங்கள் பேசுவது மட்டும் நல்லாருக்கா? ஊரெல்லாம் உங்களுக்கு என்ன பெயர்? சீர்திருத்த வீரர்! பகுத்தறிவு வாதி! பரந்த நோக்கங்கொண்டவர் என்றுதானே? உங்கள் உயர்ந்த நோக்கமெல்லாம் மேடைப் பேச்சோடு சரியா? சொந்

துக்கும் சம்பந்தமே கிடையாதா?" என்று கொதிப்புடன் கூறினான் ராமு.

"டேய்! நிறுத்து உன் அதிகப்பிரசங்கத்தை இந்த வீடு என்னுடையது; சொத்தெல்லாம் நான் சொந்தமாக சம்பாதித்தது. என் சொல்லுக்கு அடங்கிறதாக இருந்தால் நீ இங்கே இருக்கலாம்; மீறி நடந்தாயோ உனக்கு இங்கு வேலை கிடையாது! தெரியுமா? ஜாக்கிரதை!" என்று சீறிய சுப்பையாபிள்ளை அங்கிருந்து எழுந்தார்.

7

"என் தந்தை இப்படிப்பட்டவர் என்று நான் எண்ணவேயில்லை ராதா! சே, மனிதர்கள் தான் எவ்வளவு மோசமானவர்கள்!" என்று அவளிடம் வருத்தத்துடன் உரைத்தான் ராமு.

"அவரைச் சொல்லி என்ன உபயோகம் ராமு! நான் செய்த பாபம் அப்படி. உங்க அம்மா வேறு எங்களிடம் பெரிதாய் சண்டைக்கு வந்துவிட்டார்கள். "கதியற்று வந்த உங்களுக்கு அப்போட உதவி செய்தோமே; அதுக்கு இந்த உபகாரத்தைச் செய்தீர்கள் போலிருக்கு. எங்கேயோ கிடந்து வந்த இந்தக் குட்டியைப் பெத்த பெண்மாதிரி வைச்சு நடத்துனேல்ல; அதுக்குத்தான் என் பிள்ளையைச் சொக்குப் பொடிபோட்டு மயக்கி குட்டிச்சுவர் பண்ணிப்பிட்டாயே." என்று அவர்கள் பேசிய பேச்சை நினைத்தாலே பயமாயிருக்கு! அதைக்கேட்டு எங்க அப்பா அம்மாவுக்கு வேறே ரொம்ப அவமானமாய்ப்போச்சு. அவர்கள் ரெண்டுபேரும் என்னை, திட்டு திட்டுன்னு திட்டி "இனிமே அந்தப் பிள்ள முகத்திலே முழிச்சே உன்னை வெட்டிப் போட்டுடுவோம்"ன்னு சொல்றாங்க, ராமு! இனிமேல் என்னை நீங்கள் நினைக்கவேண்டாம்; மறந்து விடுங்கள்" என்று நீர் வழியும் கண்களுடன் கூறினாள் ராதா.

"அதெப்படி முடியும் ராதா? இந்தச் ஜென்மத்தில் நான் உன்னை மறப்பதென்பது நடக்காத காரியம். நீ பேசாமல் என்னுடன் வந்துவிடு; நாம் ஒருவர் கண்ணிற் படாமல் மலேயாவுக்கோ அல்லது பர்மாவுக்கோ போய்விடலாம். உழைத்துச் சம்பாதிக்க என் உடலில் உரமிருக்கிறது; ஒருவர் தயவு நமக்கெதற்கு?" என்றான் ராமு.

அதைக்கேட்ட ராதாவுக்கு ஒரே குழப்பமாயிருந்தது. "ராமு சொல்வது சரியே; அவர் இல்லையானால், என் வாழ்விலும் இன்பமில்லை. ஆனால் அதற்காக அவருடன் கண்காணாத இடத்துக்கு ஓடுவதா? ஐயோ! அது எத்தனை கேவலம்! அதுமட்டுமா? இவர் எப்பவும் நம்மை வைத்துக் காப்பாற்றுவார் என்பது என்ன நிச்சயம்? இன்று இளமைத் துடிப்பில் இப்படிச் சொல்கிறார்; நாளை வறுமை வடைய நேர்ந்து என்னை வெறுத்து நசுக்கிவிட்டாரென்றால் என் கதி என்ன? எல்லோரும் என்னை எள்ளி ஒதுக்குவார்கள்" என்று ஓடியது அவள் சிந்தனை.

"எனக்கு அவ்வளவு துணிவு இடையாது ராமு; உங்களுடன் நான் வரமுடியாது" என்றாள் அவள்.

அன்பின் எழுச்சியில் அவள் கைகளை மெதுவாகப் பற்றிய அவன் "ராதா! நீ சொல்வது உண்மைதானா? வேறு வழியே யில்லை எனபதை எண்ணிப் பார்க்கவில்லையா நீ? என்று கேட்டான் நெஞ்சம் தடுதடுக்க.

'உண்மைதான் ராமு; என்னுடைய பெற்றோருக்குக் கெட்ட பெயர் உண்டு பண்ணிவிட்டு, உங்களுடன் வந்துவிட என்னால் முடியவே முடியாது." என்று உறுதியாக மொழிந்த அவள், அவனிட மிருந்து தன் கரங்களை மெல்ல விடுவித்துக்கொண்டாள்.

"ராதா, நீ இவ்வளவு கோழையாயிருப்பாயென்று நான் நினைக்கவேயில்லை. என்னிடம் உனக்கு நம்பிக்கையில்லையென்று தான் நினைக்கிறேன். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். உன்மேல் நான் கொண்ட அன்பு அழிவற்றது; அது ஒருபோதும் மாறாது. இப்பிறவியில் உன்னைத் தவிர, வேறொரு பெண்ணையும் நான் கண்ணால்கூடப் பார்க்கமாட்டேன், இதைமட்டும் ஞாபகம் வைத்துக்கொள்." என்று கூறிய அவன் அங்கிருந்து விர்ரென சென்று மறைந்தான.

8

நாள் பல நகர்ந்தது. குருமூர்த்தி உடையார் பெண்ணுக்கு வரன் தேடுவதில் முனைந்தார். மிகமிக பிரயாசைப்பட்டு ஒரு வயோதிக வரனைப் பிடித்து வந்தார் அவர். அந்த வரன் விஷயத்தில் அவருக்கு திருப்தியளித்தது அவர் செல்வர் என்ற ஒரு செய்தியே! ராதாவின் அன்னைக்கு மட்டும் இது வருத்தத்தைக் கொடுத்தது.

"நம்முடைய குபேர செல்வத்துக்கு மகாராஜாவா வரவேண்டுமென்று ஆசைப்பட்டா முடியுமா?" என்று அவள் வாயை அடைத்துவிட்டார் அவள் கணவன்.

ராதாமட்டும் பற்றற்ற துறவியைப்போலிருந்தாள். எதற்கும் அவள் வாய் திறக்கவேயில்லை.

அவள் கலியாணத்தன்று அவ்வூரைவிட்டுச் சென்றவன் தான் ராமு. அதன்பிறகு அவனை யாரும் காணவில்லை.

ராதாவின் கணவன் மணமான இரண்டு மாதத்திற்கெல்லாம் இம்மண்ணுலகை விட்டு மறைந்துவிட்டான். திரண்ட செல்வத்துடன் திரும்பவும் பெற்றோரை வந்தடைந்தாள் ராதா, வேண்டிய செல்வமிருந்தும் அவள் வேதனைக்குக் குறைவில்லை.

"ஐயோ ராமு! நீங்கள் எங்கு போனீர்களோ? பாவி என்னை உங்களுக்கு நினைவு இருக்குமோ என்னவோ? அன்று உங்களுடன் வந்தால் இன்னலடைய வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் இன்று எனக்கு எல்லாம் இருந்தும் இன்பமா அடைகிறேன்? இல்லை! இல்லவே இல்லை! ஆம்! அன்றே உங்களுடன் நான் வந்

திருந்தால்......!" என்று எண்ணி ஏங்குவதுதான் தினம் அவள் வேலை.

"பாக்கியம்! அந்தப் பக்கத்து வீட்டுப் பையன் ராமு காணாம போயிட்டானல; அவன் திரும்பி வந்துட்டானாமே!" என்று பரபரப்புடன் கூறியவண்ணம் உள்ளே வந்தார் ராதாவின் தந்தை குருமூர்த்தி உடையார்.

அவருடைய இந்தப் பேச்சு ராதாவின் சிந்தனைக் கட்டத்திற்குச் 'சடன் பிரேக்' ஆகியது.

"வந்துட்டுதா அந்தப் பிள்ளை? இனிமேலுக்கு அந்த சனங்கள் வாய் சும்மாவா இருக்கும்; அந்தப் பையன் தொலைந்ததும் போதும் நமப பெண்ணையல்லவா அவர்கள் கரித்துக்கொட்டினார்கள்! என்று நிம்மதி யடைந்தவள்போல் கூறிவிட்டு உள்ளே போனாள் பாக்கியத்தம்மாள்.

9

நீர் இழுத்துக்கொண்டிருந்த ராதாவின் நெஞ்சில் நினைவலைகள் மோதின, "ராமு வந்துவிட்டார்! நம்பமுடியாத உண்மை இது. அவருக்கும் எனக்கும் இடையில் இப்பொழுது எவ்வளவு தூரம்! அவர் முன்போல என்னைப் பார்க்க வருவாரா? ஒருவேளை வந்தால்......! அவர் மறுபடியும் புகை பிடிக்க ஆரம்பித்து விட்டார் போலிருக்கு. வெறுப்படைந்த மனிதன் வேண்டாத செயல்களைத்தான் நாடுகிறான்...! அப்பொழுது அவரை நான் உரிமையுடன் கண்டித்தேன்; ஆனால் இப்பொழுது...!" அச்சமயம் அங்கு சரசரவென்று ராமு வருவதைக் கண்டதும் அவள் உடல் முழுவதும் வெடவெடவென்று நடுங்கியது; கை நழுவிக் கிணற்றில் விழுந்தது வாளி.

"ராதா!"

....

"ராதா, பேசமாட்டாயா ராதா?"

அவள் பேசவில்லை; வாயடைத்துப் போய் நின்றாள்.

"உனக்கா ராதா விதவைக் கோலம்? காணச் சகிக்கவில்லையே!" என இரக்கத்துடன் கூறினான் ராமு.

"நான் வந்த வழி இது." என்று விம்மினாள் ராதா.

"வந்த வழியாவது; போன வழியாவது? எல்லாம் நாமாகச் செய்து கொள்வதுதான். இப்பக்கூட ஒன்றும் மோசமில்லை; நீ மட்டும் சம்மதித்தால்......!"

"நான் சம்மதித்தால் என்ன ராமு?" என்று ஆவலுடன் கேட்டாள் அவள்.

"சம்மதித்தால் இப்பொழுதுகூட உன்னை மறுமணம்செய்து கொள்ள நான் தயார்; என்ன சொல்கிறாய் ராதா?" என்று கெஞ்சும் குரலில் கேட்டான் அவன். அந்த வார்த்தை ராதாவின் வெந்த உடலுக்கு இன்ப மழைபோல் குளிர்ச்சியைத் தந்

நூலுணர்வு ★

வேநி

★

பாரசீகச் சந்தையில் அன்று பரபரப்பு. ஆண்டுக்கொரு முறை கூடும் சந்தையின் கடைசிநாள். ஆடவர்—பெண்டிர்; சிறுவர்—முதியோர்; அரசன்—ஆண்டி; கற்றவர்—கல்லாதார்—அனைவரும் அந்த மேடையைச் சுற்றி மொய்த்துக் கிடந்தனர். ஆவலும் ஆச்சரியமும் அனைவரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன.

ஏலக்கடைக்காரன் அழகிய புத்தகமொன்றை எடுத்து விலை கூறத் தொடங்கினான். கண்ணைக் கவரும் மணி மணியான எழுத்துக்கள் கருத்தை ஈர்க்கும் காவியத் தொகுதி. காவியத்தின் ஓரங்களில், உள்ள முருக்கும் ஓவியங்கள் பக்கத்திற்குப் பக்கம். அழகான தையல். கையடக்கமான கட்டமைப்பு. அத்தகைய நூலுக்குக் கிராக்கி குறைவாகவா இருக்க முடியும்!

"இருபது பொற்காசுகள்."

"முப்பது."

"அறுபது" ஏழ்மையே உருவெடுத்தது போன்ற ஒருவனின் கேள்வி.

"இருநூறு" கோமான் ஒருவனின் சொல்.

"முந்நூறு" ஏழை தொடர்ந்தான்,

"அறுநூறு" கோமான் கோபத்தோடு கூறினான்.

கற்றவர் தவிர, மற்றவர் அகன்றனர், மற்றைய பொருள்களைக் காணுவதற்காக. கற்றவரும் இந்த வேடிக்கையைப் பார்க்கவே நின்றனர்.

"எழுநூறு" ஏழையின் குரல் திரும்பவும் கேட்டது.

ந்தது. படபடக்கும் கண்களுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

"ராமு நடக்குமா இது? அன்று நான் கன்னியாயிருந்த போதே கடுகடுத்த உங்கள் தந்தை, இன்று விதவையான என்னை மருமகள் என்றால் வேம்பென வெறுக்க மாட்டாரா? என்று கேட்டாள் ராதா.

"எனக்கு யாரைப்பற்றியும் கவலையில்லை ராதா! நீ மாத்திரம் அப்பா, அம்மா வென்று ஏதாவது சொன்னால் நான் முன்போல் கப்பலுக்குப் போய் விடுகிறேன். இப்பக்கூட நான் ஏன் வந்தேன் தெரியுமா? நம்மூரிலிருந்து போன மாதம் என் நண்பன் ஒருவன் அங்கு வந்தான். அவன் மூலம் நீ விதவையான விஷயத்தைக் கேட்டதும் என்னால் பொறுக்க முடியவில்லை. அதனால்தான் வந்தேன் என் தந்தை இப்பொழுதும் சம்மதிக்கா விட்டால், நான் முன்போலவே அங்கே போய் விடலாம்." என்றான் ராமு.

"ஆயிரம் பொற்காசுகள்" கோமான் அலட்சியத்தோடு சொன்னான். பொன்னும் புத்தகமும் இடம் மாறின. கோமான் அந்த கோவாணண்டியை ஏறிட்டுப் பார்த்தான். அவனோ ஆவலும் ஆசசரிமு மிகுந்த விழிகளோடு கோமானை நெருங்கி, அந்த நூலை ஒருமுறை படித்துவிட்டுத் தருவதாகக் கேட்டான்.

"வேண்டுமானால், இரண்டு நாட்கள் கழித்து அதை இனாமாகவே உனக்குக் கொடுத்து விடுகிறேன்" என்றான் கோமான்.

"அப்படியெனில் இதை இவ்வாறு கேட்டு, விலையை உயர்த்திக்கூட இருக்கமாட்டேனே! கருத்து மிகுந்த காவியமது. அதனாற்றான் கேட்டேன்" என்றான் அந்த ஏழைப்புலவன்.

"நாளை பாரசீக அரசர் 'ஷா' என் வீட்டுக்கு விஜயம் செய்கிறார். அப்போது அலங்காரமாக வைத்திருக்கும் புத்தக அலமாரியில் காலியாயிருக்கும் ஒரு சிறு பகுதியை நிரப்புவதற்காகத்தான் இதை வாங்கினேன். பொன் முலாமிட்ட அந்தக் கையடக்கமான நூல் அந்த இடத்தில் எடுப்பாயிருக்கும். அவ்வளவுதான்," என்று புன்னகையோடு சொற்களை உதிர்த்து விட்டுப் போனான்.

புலவனோ அவன் போன திக்கையே பார்த்துக்கொண்டிருந்தான். இரண்டுநாளில் நூல் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுக்குப் புத்துணர் ஊட்டியது. அவ்வளவு புத்தகப் பைத்தியம்—புத்தகப்புழு—நூலுணர்வு.

* * * *

பாரசீகத்தில் பத்தாம் நூற்றாண்டில் நடந்த இந்தச் சிறு நிகழ்ச்சி 'நூலுணர்வு' கொண்டாரின் உண்மை உள்ளக் கிடக்கையை தெற்றென விளக்குகிறது. ஏழைப் புலவனோ கோமானுடன் போட்டி யிட்டான். புத்தகம் பெறுவதற்காகப் பணக்காரனோ வீடு, தோட்டம் துரவு போன்ற செல்வத்தின் ஒரு பகுதியாகவே கொண்டான். ஏன் இந்த வேறுபாடு? 'நூலுணர்வு' என்றால் பொருள்தான் என்ன?

பழக்கம்—ஒரு விசித்திரமான சக்தி. அறிந்தோ, அறியாமலோ, விரும்பியோ, விரும்பாமலோ ஒருமுறை பற்றிக் கொண்டால் பின் அதை மாற்றுவது அல்லது நீக்குவது என்பது தொல்லையான சங்கதி. அதனாலேயே 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழி கூட வாழ்ந்து வர முடிகிறது. அதிலும் நன்றாய் வேயப்படாத கூரைவீட்டில் வெயிலும் மழையும் விரும்பாத விருந்தாடியாய் நுழைவதுபோல, பண்படாத மக்களுள்ளத்தில் தீயப் பழக்கங்கள் விரைவில் இடங்கொண்டு விடும். கள்ளியும் கற்றாழையும் கரம்பு நிலத்தில் கூட கட்டிக் காப்பவரின்றித் தானே வளர்கின்றன. சம்பா நெல் விளைய வேண்டுமானால் தான் பண்பட்ட நிலமும், நீரும், பாதுகாப்பும் மிக மிகத் தேவை.

மக்கள் வாழ்வில் காப்பிப் பழக்கம், பொடிப்பழக்கம், புகையிலைப் பழக்கம், புகைப்பழக்கம், மதுப்பழக்கம் போன்ற இன்ன

பிற தீய பழக்கங்கள் சர்வ சாதாரணமாகக் காண முடிகிறது. இத்தகைய முறைகள் தவறெனத் தெரிந்தும் நீடித்து வாழ்ந்து வருகின்றன. இதையே பெருமையாகக் கூறித் திரிவார் நிலை இரங்கத் தக்கதாகும்.

அதேபோது கல்வி கற்றல், கடனறிந்தொழுதல், மன்பதையுணர்வு போன்ற நற்பண்புகள் குறைந்த அளவே நிலவுகின்றன. அதனினும் அறிவும் பயனும் தரும் 'நூலுணர்வு' அல்லது நூற்பழக்கம். நம் மக்களிடையே அருகியே தென்படுகிறது. இங்கு படித்தவர்களோ மிகக் குறைவு. அவர்களும் படித்து முடித்து வாழ்வுத் துறையில் இறங்கியபின்பு, படிப்பது வேலையற்ற தன்மை அல்லது வீண் என்ற எண்ணம் கொள்வது தவறானதாகும்.

'கற்கை நன்றே, கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே' என்னும் நாட்டில்—'கைக்கழுத காவியத்தோடிருத்தல்' என்னும் பூமியில்—கல்விக்குத் தலைவி சரசுவதி எனக் கொண்டு ஆண்டாண்டு தோறும் அதற்காக விழாவரும் தென்னாட்டில்- இங்ஙனம் கல்விக் குறையும், நூலுணர்வின்மையும் இருக்கக் காரணந்தான் என்ன?

நம் முன்னோர்கள் தேடி வைத்த அறிவுச் செல்வமாம் பல நூற்களும் அதன் உரைகளும் கடற்கோளாலும் இன்னபிற இயற்கை அழிவுகளாலும் மறைந்தொழிந்தன. சங்க காலத்திற்குப் பின் நாட்டில் நிகழ்ந்த பற்பல அரசியல் மாறுபாடுகள் அதை மிகுதியாக்கின. அடுத்து அறியாமை மிக்க மக்கள் ஆடிப்பெருக்குப் போன்ற நாட்களில் கழிவுப் பொருட்களை ஒழிக்கிறோம் என்று அனலிலும் புனலிலுமிட்டு வீணாக்கி விட்டனர். அதைத் தொடர்ந்து மதப் போட்டிகள் காரணமாக அனல்வாதம் புனல்வாதம் என்ற பேரால் பலப்பல பண்பு மிக்க நூல்கள் பாழாக்கப்பட்டன. இதற்கெல்லாம் மேலாக சமுதாய அமைப்பே பெரும்பாலான மக்களைப் படிக்காதவர்களாக-படிக்க முடியாதவர்களாக—ஆக்கி விட்டது. மக்கள் அறிவை முடமாக்கி விட்டது. அந்நிய ஆங்கில ஆட்சி அதற்குத் துணை புரிந்தது.

காலமும் கருத்தும் போட்டியிட்டு வளரும் காலமிது. சிக்கிமுக்கிக் கற்களால் தீயுண்டாக்கும் காலத்திலிருந்து பொத்தானைத் தொட்டதும் இரவைப் பகலாக்கும் விந்தை விளக்கைப் பயன்படுத்தும் அளவுக்கு நாம் வளர்ந்திருக்கிறோம். அறிவியற் துறை தந்த பரிசாம் காகிதம், அச்சுயந்திர முறை, மை முதலியன கொண்டு இயந்திரங்களால், கை கொடுக்கும் நேரத்தில் கணக்கற்ற நூற்கள் தயாராகும் நிலையிலிருக்கிறோம்.

ஆனால், இதை நாம் முழுதும் பயன்படுத்தி வாழ்கிறோம் என்று சொல்வதற்கில்லை. இன்னும் நம் இல்லங்களில் குழாய் மின்விளக்குக் கருகில் குத்துவிளக்கை வைத்து வணங்கித்தா—

வருகிறோம். பழமைப்பிடி இன்னும் நீங்காதிருக்கிறது, நம் நாட்டில். இந்த நிலை—சமுதாய அமைப்பு முறை மாறவேண்டும்—மாற்றியாகவேண்டும். அதற்கு கல்வியறிவு இன்றியமையாதது. அதற்காக கற்ற கல்வி, நின்று பயன்தர 'நூலுணர்வு' மிக மிகத் தேவைப்படுகிறது. நூலுணர்வில்லாதவன படித்தும் பதர். இத்தகைய நூலுணர்வு மக்களிடையே உண்டி, உடை உறையுள் போன்று ஒன்றிவிட வேண்டிய தொன்றாம்; அப்பொழுதுதான் முன்னது மூன்றையும் சரிவரப் பயன் படுத்திக் கொள்ள முடியும்.

நூலுணர்வு என்றவுடன் நூல்களை, பணங் கொடுத்துப் பெற்று, அழகான அலமாரிகளில உறையிட்டு அடுக்கி வைத்துக்கொள்வது என்ற எண்ணங் கூடாது. லட்சம் ரூபாய்கள் வைத்திருப்பவனை விட கோடி வைத்திருப்பவன் பணக்காரன் என்று சொல்வது ஒத்துக்கொள்ளலாம், பணத்தைப் பொருத்த வரையில் ஆனால் அதே சமயம் ஐந்நூறு நூற்கள் வைத்திருப்பவனைவிட ஆயிரம் நூற்கள் வைத்திருப்பவன் அறிவாளி என்றோ, நூலுணர்வு மிக்கவன் என்றோ சொல்வதற்கில்லை. நூலுணர்வு மிக்கவனாய் நூற்களைக் கற்று, தான் வளர்ந்து, தன் நாட்டை வளர்த்து, மக்கட் குலம் வளர பாடுபடும் தன்மை கொண்டுதான், ஒருவனை அறிவாளி என்று நிதானிக்க முடியும். அஃதில்லாது நூற்களைச் சேர்த்து மட்டும் வைத்திருப்பின் பாரசீகக் கோமான கொண்ட எண்ணமபோல் தோட்டம், துரவு என்ற செல்வத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுமாயின்—அது பயன தாராதது மட்டுமல்ல, தவறானது மாகும். தவறு மட்டுமல்ல, படிக்கும் மற்றவர்களைத் தடுத்து நிறுத்தும் குற்றமுமாகும்.

நூலுணர்வு—கொள்ள வேண்டியவைகளில் ஒன்று வீட்டிலும் நிலவ வேண்டியவைகளில் ஒன்று. இவ்வுணர்வு கொண்டு, நமபிற் சந்ததியார் நல்ல முறையில் வாழ்வதற்காக—அவர்கள் அம்முறையில் இயங்க—நூலுணர்வு கொள்ள ஆவன செய்ய வேண்டும். ஆரமபப் பள்ளிகளிலேயே சிறுவர் நூலகங்கள், படிப்பகங்கள், சொற்போர் மன்றங்கள் முதலியன நிறுவி இளமையிலேயே இவ்வுணர்வு பெறுமாறு செய்யவேண்டும். பெரியவர்கள் கற்றகல்வி மங்காதிருக்க, மாறாகப் பொங்கி வளந்தர நூலுணர்வு மாறாது வாழப்பழக வேண்டும். அங்ஙனம் நடைபெற, பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும், உள்ளே மட்டுமல்லாது நாடெங்கும நூலகங்கள், நூற்கழகங்கள் கண்டு நாடு உயர நல்ல பணி புரியவேண்டும். அத்துறையில் ஈடுபட்டுழைக்கும் நூலகத்தார்கள் வருவாரை எதிர்கொண்டழைத்து வேண்டுவன கூறி, விரும்பியன ஈந்து எல்லார்க்கும் எல்லாமென் றிருப்பதான இடமாக்கவேண்டும் இந்த வையத்தை.

ஜைன இராமாயணம்

வி. சாரங்கபாணி

[1888-ம் ஆண்டில் "தியாசபிஸ்ட்" என்ற சிறந்த ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த "ஜைன ராமாயணம்" என்ற கட்டுரைத் தொடரை, மொழிபெயர்பாளர், உரியவர்களிடம் அனுமதி பெற்றுத் தமிழாக்கித் தந்திருக்கிறார்.]

வானர தீப வரலாறு

இது இங்ஙனமாக வானர தீபத்தின் வம்சம் எப்படி விளங்கிற்று என்பதை நாம் சிறிது கவனிப்போம். வித்யாதர வம்சத்தவனான புஷ்போத்திரன் என்பவன் இரத்தினபுரியை ஆண்டுவந்தான். அந்தப் புஷ்போத்திரன் மேற் கூறப்பட்ட ஸ்ரீ காந்தன் மகள் தேவி என்பாளைத் தன்னுடைய மகன் பத்மோதரனுக்கு மன்றல் செயக் கேட்டான். அவன் வேண்டுகோள ஸ்ரீ காந்தனால் மறுக்கப்பட்டதினால், அவன் ஸ்ரீ காந்தன் மேல் மிகக் கோபமுற்றவனாகி மிக்க பகைமையோடு, பழிவாங்கும் சமயத்தை எதிர்நோக்கிக்கொண் டிருந்தான்.

இது காலை புஷ்போத்திரனின் மகள் பத்மா மங்கைப் பருவமுற்றவளாய்த் தன்மேல் அதிக காதல் கொண்டுள்ளாள் எனபதனை அறிந்த ஸ்ரீ காந்தன் தன் வான ஊர்தி ஏறி புஷ்போத்திரன் நகர் சென்று தன் காதற்கனியைக் கண்டு அவளை ஒருவரும் அறியாவண்ணம் தன் வான ஊர்தியிலேற்றித் தன் நகரதிற்குக் கடத்திச் சென்றான். இந்தச் சம்பவம் ஏற்கனவே மிகக் கோபமுற்றுப் பழிவாங்கும் சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டுள்ள, புஷ்போத்திரனுக்கு எரியும் நெருப்பில் எண்ணெய் விட்டதுபோல், அவ்வெண்ணத்தை அதிகரிக்கச் செய்தது. எனவே அவன் எவ்வண்ணமாயினும் ஸ்ரீ காந்தனை ஒழித்துவிட வேண்டுமெனும் நோக்கத்தோடு அவன் நகரினை நோக்கிப் போர்க்கோலங் கொண்டு சென்றான். இதுசமயம் ஸ்ரீ காந்தனின் மருமகன் கார்த்திக வேலன் குறுக்கிட்டுப் புஷ்போத்திரனின் கோபத்தைச் சாந்தப்படுத்தித் தன் மாமனார் ஸ்ரீ காந்தனுக்கும் புஷ்போத்திரனுக்கும் இடையில் சமாதானம் நிலவச் செயதான். இதற்குப் பிறகு புஷ்போத்திரனும் ஸ்ரீ காந்தனும நேசமிக்கவர்களாக இருந்தனர். புஷ்போத்திரன், ஸ்ரீகாந்தன் தன மகளை மணஞ்செய்து கொண்டதினால் தன் நாட்டினைக்கூட அவனுக்கே முடிசூட்டி வைத்தான். ஸ்ரீ காந்தன் கிஷ்கிந்தா என்னும நகரத்தைத் தன் தலைநகராக்கி வானரத்தீபத்தை அரசாண்டிருந்தான். அவனுக்கு வஜ்ரகண்டனென்ற ஒரு மகன் பிறந்தான். வஜ்ரகண்டனுக்குப் பிறகு ததிரதன்—என்ற அவன மகன் ஆட்சி செலுத்தி வந்தான்.

இங்ஙனமாக, வானரத்தீபத்திற்கு ததிரதனும் ராக்ஷச தீபத்திற்கு ததிகேசனும் அரசர்களாக வீற்றிருந்தனர்.

இராக்ஷச தீபத்தின் அரசனான ததிகேசனுக்கு வாழ்க்கைத் துணையாய்ப், பட்டத்து ராணியாய் உள்ளவளான ஸ்ரீ சந்திரா,

ஒருநாள் தன் கணவனுடன் ஒரு உல்லாச யாத்திரை சென்று
வர விழைந்தாள். பட்டத்து ராணி விழைவு ததிகேசனால் ஏற்
றுக்கொள்ளப்படவே அவனும் அவளும் உல்லாசமாக யாத்திரை
கிளம்பினார்கள் வானரத் தீபத்திற்கு; அவன் ததிகேசன்
இயற்கை தன் கைவண்ணத்தை முழுவதும் காட்டியுள்ளதும்,
மலையை அடுத்ததும் அருகே சிற்றாறும் தெளிந்த நீர் சலசலென
ஒலித்து ஓடுவதும், பலவித மலர்கள் பூத்துக் கண்களுக்கு விருந்
தளிக்கத் தக்கதுமான ஓர் அழகிய இடத்திற்கு அழைத்துச்
சென்று, அவளுடன் பொழுது போக்கிக் கொண்டுள்ள நேரத்
தில், திடீரென ஓர் குரங்கு அரசியின் மீது பாய்ந்து அவள்
உடலையும் முகத்தையும் நகங்களால் கீறிவிட்டது. இந்த ஓரிரு
விநாடி சம்பவத்தால் கோபமுற்ற அரசன் அக்கணமே தன்
உடைவாளால் அக் குரங்கை வெட்டி வீழ்த்தினான்.

வெட்டிய வாளை வீசிவிட்டு அரசன் நிலைகுலைந்த அரசியின்
நடுக்கத்தையும் பயத்தையும் போக்கத் தேறுதல் மொழிகள்
கூறியபின் திடீரென்று உண்டாகிய சினத்தினால் குரங்கை
வெட்டி வீழ்த்திவிட்டோமே என்று மிகவும் வருத்தமடைந்தான்.
இவ்வண்ணமாக இவன் வருத்தத்தோடு மனைவியிடம் குரங்கின்
முடிவைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறபோது, அவ்விடத்
திற்குத் தற்செயலாக ஓர் துறவி வந்தனர். அரசன், துறவியை
வணங்கித் தாங்கள் அவ்விடத்துற்றதையும் அங்கு அரசிக்கு
குரங்கினால் நேர்ந்த துன்பத்தையும், அதனால் கோபமேற்பட்டுத்
தான் அதைக் கொன்றதையும், அதன்பின் அதன் முடிவிற்காகத்
தான் வருந்துவதையும் அவரிடம் கூற அவர் அவை யாவையும்
செவி மடுத்து அரசனுக்கு ஆறுதல் கூறி உலகத்தின் நிலையா
மையையும், காமவெகுளி மயக்கத்தின் தீமைகளையும் கூறி அங்
கிருந்து சென்றுவிட்டார். இவை யாவற்றையும் கேட்ட அரசன்
ஆழ்ந்து சிந்தித்துத் தன் அரசவை அடைந்து அக்கணமே தன்
முடி துறந்து தன் மகன் சுகேசனுக்கு ராக்ஷச தீபத்தைப்பட்டஞ்
சூட்டித் தான் ஒரு துறவியாகி வனஞ் சேர்ந்தான்.

ஏறக்குறைய இதுபோன்றதொரு நிகழ்ச்சி ததிரதனுக்கும்
நேர அதனால் அவனும் தன் வானரத் தீபத்தின் மணிமுடியைத்
துறந்து தன் ஆட்சியைத் தன் மகன் கிஷ்கிந்தனுக் கீந்து
தானும் ஓர் துறவியானான்.

இவ்வண்ணம் ராக்ஷஸ தீபத்திற்கு சுகேசனும், வானரத்
தீபத்திற்குக் கிஷ்கிந்தனும் அரசர்களாக இருந்தகாலன்று ஒரு
சம்பவம் மிகவும் துக்ககரமாக நிகழ்ந்தது.

அதாவது, ஆதித்யபுர நகரிலே அதனுடைய அரசனான
ராஜா மந்திரமாலி தன் மகள் ஸ்ரீ மாலாவுக்கு ஓர் சுயம்வரம்
ஏற்படுத்தினான். சுயம்வரத்திற்குப் பல நாட்டு மன்னர்களும்,
இளவரசர்களும் வந்திருந்தனர். அவர்களிலே வானரத்தீபத்தின்
அரசனாகிய கிஷ்கிந்தனை இளவரசி ஸ்ரீ மாலா வரித்து அவன்
திண்தோளினுக்கு மாலை சூட்டினாள். ஆங்கு அமர்ந்திருந்த
மற்ற நாட்டு அரசர்களினும் ரத்னபுரியின் அரசன் அசினவேக

னுக்கு, இதைக் கண்டதும் அதிக சீற்றம் பொங்கி, அவனுடன் மிகக் கடுமையான போர் துவக்கி அதில் வானரத்தீப அரசன் கிஷ்கிந்தனைத் தோல்வியடையச் செய்து அவன் அரசினைக் கைப்பற்றிக்கொண்டான். எனவே ரத்தினபுரியின் அரசன் அசினவேகன் தன் நாட்டுக்கு மட்டுமின்றி வானரத்தீபத்திற்கும் அரசனாகி விடவே அதை அடுத்துள்ள ராக்ஷச தீபத்தின் அரசனான சுகேசன் மிகவும் கோழை நெஞ்சினனானபடியினால் அந்தப் பயமுறுத்தலுக்கே அஞ்சி, அவனும் தன் நாட்டைவிட்டு வெளியேறினான்.

இவ்வண்ணமாக, வானரத் தீபத்தின் அரசனான கிஷ்கிந்தனும், ராக்ஷச தீபத்தின் அரசனான சுகேசனும் தங்கள் தங்கள் நாட்டிலிருந்து வெளியேறித் தங்கள் குடும்பத்தோடு, பாதாள லங்கையில் மறைந்து வசிக்க நேரிட்டது. இவர்கள் இவ்வண்ணம் மறைந்து வசித்துக் கொண்டிருக்கும் காலத்தில் ராக்ஷச தீபத்தின அரசனான சுகேசனுக்கு அவன் மனைவி இந்திராணி மூலமாக மாலி, சுமாலி, மாலியவந்தன் எனும் மூன்று புதல்வர்கள் பிறந்தனர். வானரத் தீபத்தின் அரசனான கிஷ்கிந்தனுக்கு அவன் மனைவி ஸ்ரீமாலாவின் மூலமாக ஆதித்யார்ஜசு, ருக்ஷ ராஜசு எனும் இரண்டு புதல்வர்கள் பிறந்தனர்.

1. இராவணன் பிறப்பு

இனி ராக்ஷச தீபத்திலிருந்து வெளியேற்றப்பட்டு பாதாள லங்கையில் மறைந்து வசித்து வரும் ராக்ஷச வம்சத்தைப் பற்றிக் கவனிப்போம்.

சுகேசனின் மைந்தர்களில் மூத்தவனான மாலி மிகுந்த பராக்கிரமசாலி. எனவே அவன் தன் தகப்பனாரிடமிருந்து மேல் இலங்கையை இரத்தினபுரி அரசனான அசினவேகன் கைப்பற்ற, அதனால் வேறொருவன் இப்போது ஆண்டு வருகிறான் என்பதைக் கேள்வியுற்றுக் கடுஞ்சினங்கொண்டு; படைதிரட்டி அவன்மேல் படை எடுத்துப் போர் செய்து இரத்தம் ஆறாய்ப் பெருகி ஓட வெற்றி கண்டு அந்நாட்டினுக்கு அரசனானான். இதனோடு மாலி திருப்தி அடையாதவனாய் ரத்னபுரி அரசன்மீது தன் வஞ்சத்தை அடியோடு தீர்த்துக்கொள்ள விழைந்து இரத்தினபுரியையும் கைப்பற்ற வேண்டுமென விரும்பினான்.

இதுகாலை இரத்தினபுரியில் இந்திரன் என்பவன் அரசாண்டு கொண்டிருந்தான். இவன் பிறந்ததும் இவனுக்கு இப்பெயர் இடப்பட்டதும் மிக விசித்திரமானதாகும். அதாவது இந்த அரசனின் தாய் சித்ரசுந்தரி என்பவள் ஒரு தேவதையின் தூண்டுதலால் தேவ இந்திரனுடன் கூடுவதற்கு விழைந்து மிக்க மோகதாபம் உற்று வருந்தினாள். அவளுடைய அந்நிலைக்குரிய காரணத்தை அறிந்த அவள் கணவன் உடனே தேவ இந்திரன் போன்று வேடம்பூண்டு தன் மனைவியின் காமவிகாரத்தைத் தணித்தனன். இதன் பயனாகப் பிறந்த தன் மகனுக்கு இந்திரன் எனப் பெயர் சூட்டினான். இவன் வளர்ந்து இரத்தின

புரிக்கு அரசன் ஆகும் நிலை அடைந்த உடனே, இந்தப் பெயர் தனக்கு உள்ளதோடு திருப்தி அடையாமல் தன் ஏவலாளர், படை, ஆயுதம், ஊர்தி முதலிய யாவும் தேவ இந்திரனுக்குரிய பெயர்களாலேயே வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு அவன் தன் நகரத்தையே தேவலோகம் எனப்படும்படி ஆண்டிருந்தான்.

இத்தருணத்திலேதான் ராக்ஷஸ தீபத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சுகேசனின் மைந்தன் மாலி இவனுடன் போர் செய்து இரத்தின புரியைக் கைப்பற்ற வேண்டுமென நினைத்தான். எனவே ஒரு பலமான போர் மூண்டது. இந்தப் போரிலே மாலியின் சேனைகள் அடியோடு தோற்கடிக்கப்பட்டனர். மாலி யுத்த களத்திலேயே உயிர் நீத்தான். இந்திரன் பூரண வெற்றியடைந்தவனாய், முன்னால் போர் செய்து மாலி பெற்ற லங்கையைக் கைப்பற்றி அதைத் தன் நண்பனும், விஸ்ராவசுக்கும் சங்கேசவிற்கும் பிறந்தவனுமான விஸ்ராவணனுக்குப் பட்டம் கட்டினான்.

எனவே யுத்தகளத்தில் உயிர் நீத்த மாலியின் இரு சகோதரர்களான சுமாலியும், மாலியவந்தனும் கீழ் லங்கைக்கு முன் போலவே சென்று துறவிகளாகிவிட்டனர். சுமாலி எப்படியாவது ராக்ஷச வம்சத்தை லங்கையில் நிலைநாட்ட வேண்டுமெனும் எண்ணம் கொண்டிருந்தபடியால் அவ்விடத்திலேயே "வியோமபிந்து"வின் மகளான "கேசியை" மணந்து அவள் மூலமாக மூன்று புதல்வர்களையும் ஒரு பெண் மகவையும் ஈன்றனன். சுமாலியின் சாமான இடங்கினுள் தன் மூதாதையருக்கு சன்மானமாக அளிக்கப்பட்டதும், ஒருவராலும் தூக்க முடியாததும், பாம்புகளால் காக்கப்பெற்றதுமான ஒரு நவரத்ன மாலை இருந்தது. ஆயினும் ரத்ன சிரவஸ் எனும் சுமாலியின் மூத்த மகன் சிறுவனாக இருந்தபோதே அந்த நவரத்ன மாலையைப் பூமாலையைக் கையில் எடுத்து அணிந்துகொள்வதுபோன்று எளிதாக எடுத்துத் தன் கழுத்தில் அணிந்துகொண்டான். இத்தகைய மகத்தான செயலைக் கண்ட அவன் தகப்பனார் மிகவும் ஆச்சர்யப்பட்டதோடு, அவன் அந்த நவரத்ன மாலையை, கழுத்தில் அணிந்துகொண்டிருக்கும்போது அவனுடைய முகம் ஒன்பது மணிகளிலும் பிரதிபலிக்க அதனால் மிக மகிழ்ச்சி பொங்கி அவன் முகத்துடன் பத்தாக ஆகின்றதினால் அவனை அன்போடு தசமுகா என அழைத்தனர். அதனால் அவன் தசமுகன் என்றே வழங்கப்பட்டான். அவனுடைய இரண்டாவது மகன பானு கர்ணன அல்லது கும்பகர்ணன் என்றும், மூன்றாவது மகன் விபீஷணன் என்றும், மகள் சந்திரநகை அல்லது சூர்ப்பநகை என்றும் அழைக்கப்பட்டனர்.

இந்தச் சுமாலியின் நான்கு புதல்வர்களும் இராக்ஷச வம்சத்திலேயே மிகப் பலம் பெற்றவர்களாயும் பதினாறரை தனு உயரமுள்ளவர்களாயுமிருந்தனர்.

இந்தத் தசமுகனே ராவணன் என [illegible]ப்பெற்றான். இவனுக்கு இப்பெயர் எப்படிவந்த[illegible]ய்த அரிய செயல்கள் யாவை என்றும் [illegible]லாம்.

புதிய சீனாவில் கல்வி முறை

மூலம் : கீன்-டன்-யூ ★ தமிழாக்கம் : பகவதி ஜயராமன்

இன்று சீனாவில் கல்வி என்று சொன்னால் அது மக்களுடைய கல்வியைத்தான் குறிக்கும்; அதாவது மக்களுக்குத் தொண்டு புரியும் கல்வி என்னலாம். தற்சமயம் சீன மக்களை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். உழைக்கும் வகுப்பு, குடியானவ வகுப்பு, துணை இன்ப வகுப்பு, நாட்டு இன்ப வகுப்பு இவையே அப் பிரிவுகள். இப் பிரிவுகளுக்குத் தொண்டு புரியும் முறையைக் கற்பிப்பதே சீனாவின் இன்றையக் கல்வி முறையாகும்.

ஆனால், தற்போதைக்கு, சீனாவின் கல்விமுறைக் கொள்கை உழைககும் வகுப்புக்கும், குடியானவ வகுப்புக்கும் தொண்டு புரிவதாகவே அமைந்துள்ளது; பொதுவாக மக்களுக்குத் தொண்டு புரிவதாக அது இன்னும் அமையவில்லை. இது இன்றைய சீனச் சூழ்நிலையின் விளைவு என்ன வேண்டும்.

முதலாவதாக, "மக்கள் குடியரசுத் தனி மதிகாரத்தின் அடிப்படை உழைக்கும் வகுப்புக்கும், குடியான வகுப்புக்கும், நகரத்துணை இன்ப வகுப்புகளும் இடையே உள்ள நேசவுறவே யாகும்; இன்றும் நன்ருகச் சொன்னால் உழைப்பாளர்க்கும், குடியானவர்க்கும் ஏற்பட்டிருக்கும் நேசவுறவே என்னலாம். ஏனெனில், சீனாவின் மக்கள் தொகையில் இவர்கள் நூற்றுக்கு எண்பதிலிருநது தொண்ணூறு வரை அடங்கி யிருக்கிறார்கள். இந்த இரண்டு வகுப்புகள் தாம் தனி மாதிக்கத்தையும், குமின்டாங் எதிர்ப்புரட்சிக் கும்பலையும் தூக்கி யெறிவதில் முதன்மையானவையாக இருந்திருக்கின்றன. சீனப் புதிய குடியரசு சமவுடைமைக் குடியரசாக மாறவேண்டுவதும் இவ்விரண்டு வகுபபுகளின் நேசவுறவைப் பொறுத்தே இருக்கிறது" (மக்கள் குடியரசுத் தனி யதிகாரம்—மோ. சே. துங்) "உழைப்பு வகுப்பு, குடியானவ வகுப்பு, படிப்பு வகுப்பு, மற்றத்துணை இன்ப வகுப்பு ஆகிய இந்த வகுப்புகளின் அடிப்படைச் சக்தியின் மீதே சீனாவின் தலைவிதி பொருந்தி யிருக்கிறது" (புதிய குடியரசு—மோ-சே-துங்.)

இரண்டாவதாக, "மேற்சொன்ன நான்கு வகுப்பு மக்களிலே உழைப்பாளர், குடியானவர், போர் வீரர்—இவர்களே மிகவும் முக்கியமானவர்கள்; ஏனென்ருல், துணை இன்ப வகுப்பினர் மிகவும சிறுபான்மையினரே ஆவர். மேலும், இவர்களுக்குப் புரட்சியிலுள்ள ஆர்வமும் முன்னவர்களை விட மிகக் குறைந்தது; ஆனால், இவர்கள உழைப்பாளர், குடியானவர், போர் வீரர்—ஆகியவர்களைவிட பண்பாட்டில் நல்ல பயிற்சி பெற்றவர்கள்" (ஏனன் இலக்கிய மாநாட்டுப் பேச்சுகள் மோ-சே-துங்) நாட்டு இனப வகு[illegible] இன்னும் சிறுபான்மையர் ஆவர்; இவர்களுக்குப் [illegible] ஆர்வம் எல்லோரையும் விடக்

குறைந்தது என்னவேண்டும்; ஆனால், பண்பாட்டில் இவர்கள் மேன்மையான பயிற்சி பெற்றவர்கள. பழைய சீனாவில், கல்வி என்பது தாழ்த்தும் வகுப்பின் கையிலும், சுரண்டும் வகுப்பின் கையிலும் இருந்தது; தொழில் புரியும் வகுப்புக்கு அக் கல்வி முறையில் இடமே இல்லை.

1949 அக்டோபர் மாதத்தில், மக்கள் குடியரசுத் தனியதிகாரிகள் சீனாவை நிலநாயகர் ஆதிக்கத்திலிருந்தும், முதலாளிகள் ஆதிக்கத்திலிருந்தும் மாற்றி யமைத்தனர். இம்மாறுதலுக்கேற்ப, இந்நாட்டுக் கல்விமுறையும் உழைப்பாளர்க்கும், குடியானவர்க்கும் தொண்டு புரியும் வகையில் மக்கள் கல்விமுறையாக மாற வேண்டுவதும் அவசியந்தானே?

தற்சமயம் சீனாவில், கல்வி என்பது எந்த வகையிலும் அந்நாட்டின் அடிப்படை நிலைமையோடு பொருந்தி யிருக்கிறது என்று கூற முடியாது. சில படித்த மக்களுக்காக அமைந்திருக்கும் ஒய்வு நேரப் பள்ளிகளும், மாரிக்கால்லப் பள்ளிகளும் தவிர, அங்கே தொழிலாளர்க்கும், குடியானவர்க்கும் கல்வியிலும் பண்பாட்டிலும் பயிற்சிபெற நிலைத்த போதுமான வசதிகள் இனனும் ஏற்படவில்லை. தற்போது சீனாவில் 220-பல்கலைக் கழகங்களும், தொழில் நுட்பக் கல்லூரிகளும், 3960-நடுத்தரப் பள்ளிகளும், 2,12,890 துவக்கப்பள்ளிகளும் உள்ளன. பழைய விடுதலை ஆன வட்டாரங்களில் உள்ள நடுத்தர துவக்கப்பள்ளிகள் சிலவறறில் தாம், குடியானவர் குழந்தைகளும் முதன்மையாகக் கல்வி பயில்கின்றனர்; ஆனால் மொத்தத்தில் மற்ற இடங்களில் படிக்கும் பிள்ளைகள் யாவரும் நடுத்தரக் குடியானவர், நகரத்துணை இன்ப வகுபபினர், செல்வம் மிக்க குடும்பங்கள்—இவ்வகையினரைச் சார்ந்தவராகவே காணப்படுகின்றனர். தொழிலாளர், குடியானவர். அவர் தம் மக்கள்—இவர்கள், கல்வியறிவு பெறுவதற்கு உண்மையில் வாய்ப்பே இல்லை. இந்நிலையை மாற்றவும், கல்விமுறையை உண்மையாகவே குடியாட்சி முறையாக ஆக்கவும், தொழிலாளர் குடியானவரின் அரசியல் பண்பாட்டு நிலைகளை உயர்த்தவும் சீனா மிகுதியும் பாடுபட்டு வருகிறது; ஆனால், இச் செய்கை காலங்கடந்து துவக்கப்பட்டதாகவே தோன்றுகிறது.

இதிலிருந்து சீனக்கல்வி முறை குடியானவர்க்கும் தொழிலாளர்க்கும் தொண்டு புரிவதுபோல மற்றக் குடியரசு வகுப்புகளுக்குப் புரியவில்லை என்று பொருள் படுமா? அப்படி அல்ல. உண்மையில் சீனாவில் துணை இன்ப வகுப்பினருடைய மக்களும், நாட்டு இன்ப வகுப்பினரின் மக்களும் பேரளவில் பல பள்ளிகளில் பயில்கின்றனர். இந்நிலையை அரசாங்கத்தார் தடுப்பதற்குப் பதிலாக வரவேற்கிறார்கள்.

சீனாவின் பொதுத் திட்டத்தில் (Common Programme) "சீன மக்கள் குடியரசின் பண்பாடும் கல்வி முறையும் புதிய குடியாட்சியை ஒட்டி யிருகவேண்டும்; அவை நாட்டுப்பான்மையும்,

விஞ்ஞான நோக்கும், பொதுமக்கள் தொடர்பும் பெற்றிருக்க வேண்டும்" என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

சீனநாட்டின் கல்விமுறை நாட்டுப்பான்மையோடு பொருந்தியிருக்கவேண்டும் என்று சொன்னால், அது தன் முழுவலிமையோடும் தனியாக்க வாதிகளின் வலுத் தாக்குதலை எதிர்க்க வேண்டும் என்பதுதான் பொருள்; அது சீனாவின் சுதந்திரத்தைக் காப்பதாகலின், சீன மக்களை ஒற்றுமைப் படுத்துவதாகவும், அவர்களை அடிமைத் தளையிலிருந்து விடுவிப்பதாகவும் இருக்கவேண்டும்; அது அமெரிக்கத் தனியாதிக்கம் கொஞ்ச நஞ்சம் விட்டுச் சென்ற பொய்த் தோற்றங்களை அடியோடு களைந் தெறிவதாக விளங்கவேண்டும்; "தனிப்பட்டவர் சுதந்தரம்" என்ற மாயவார்த்தையின் மூலம் சீனர்களின் நாட்டுக்குச் செய்த கொடுமைகள் யாவற்றையும் வெளிப்படுத்துவதாகத் திகழ வேண்டும்; கண்ணை மூடிக்கொண்டு "மேறகத்திய பண்பாடு" என்ற முதலாளித்துவப் பண்பாட்டைப் போற்றும் இழிதகைமையை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கவேண்டும்.

சீனக் கல்வியாளர்கள் தம் மக்களிடத்தில் இயன்ற வரையில் புரட்சி வழிப்பட்ட நாட்டுப்பற்றை வளரச் செய்ய பாடுபடுகிறார்கள்; அவர்கள் தம் சிறந்த நாட்டை முழு மனத்துடன் போற்றுமாறு தம் மக்களுக்குப் புகட்டுகிறார்கள்; வீரமும், விடா முயற்சியும், சக்தியும் வாய்ந்த தம் சொந்த மக்களை நேசிக்கவும், மக்கள் விடுதலைச் சேனையை (People's Liberation Army) ஊக்கவும் அவர்கள் தம் மக்களிடத்தில் வேண்டுகிறார்கள்; சீனப் பொதுவுடைமைக் கட்சியை வாழ்த்தவும், சீனாவின் தனிப்பெருந் தலைவர் மோ-சே-துங் அவர்களின் போதனைகளைப் பின்பற்றவும் அவர்கள் மக்களிடையே அறிவுரை கூறுகிறார்கள்.

இந்த நேரத்தில் சீனாவின் கல்விமுறை குறுகிய மனம் படைத்த நாட்டுப்பற்றைத் தீவிரமாக எதிர்ப்பதாகவும் அமைந்திருக்கிறது. புதியநாட்டுப் பற்றோடு உலகநாட்டுப் பான்மை சீனர்களிடையே வளரவும், சோவியத் கூட்டரசுடனும் மற்ற உலகநாட்டுத் தோழர்களான மக்கள் குடியரசுகளுடனும் People's Democracies) நட்புப் பூணவும், அந்நாட்டுக் கல்விமுறை கற்றுக் கொடுக்கிறது. குடியேற்ற நாடுகளிலும் (colonies), அரைக்குடியேற்ற நாடுகளிலும் வளர்ந்து வரும் நாட்டு விடுதலை இயக்கங்களுக்குத் தம் ஆதரவையும் பரிவையும் காட்டவும், உலகம் முழுவதிலும் இன்று தலைகாட்டிக் கொண்டிருக்கும் போர் வெறியாகளை (warmongers) எதிர்க்கவும் அது வழிகாட்டுகிறது; நிலைத்த அமைதியையும், உலகப் பாதுகாப்பையும் நாடுவதில் சுறுசுறுப்பான பங்கு கொள்ளவும், நாட்டுத் தன் மதிப்பைக் குலைக்கும் நோக்கத்தையும் இனனும் விடுதலையாகாத சிறுநாடுகளை ஒடுக்கும் பான்மையையும் தீமானமாக எதிர்க்கவும் அது பழக்குகிறது.

குடியானவர்க்கும் தொழிலாளர்க்கும் தொண்டு புரியும் நோக்கத்தோடு அமைந்திருக்கும் இக் கல்விமுறை முழுவதுமாக

விஞ்ஞான அடிப்படையைப் பெற முயல்கிறது. இந் நோக்கத்தைச் சீனக்குடியரசுத் தலைவர் மோ-சே-துங் 'நம் கல்விமுறை நிலநாயகம், மூடநம்பிக்கை — இவற்றை அழிப்பதாகவும், உண்மையில் வாய்மை காண்பதாகவும், வெளிப்படை உண்மையையும் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள உறவையும் ஆதரிப்பதாகவும் இருக்கவேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார். தற்சமயம் சீன அரசாங்கக் கல்வித்துறை மார்க்ஸிய-லெனினியத்திலுள்ள (Marxism-Leninism) உலக உண்மைகளைப் பரப்பவும், வெட்டி வேதாந்தத்தையும் மூட நம்பிக்கையையும் ஒழிக்கவும் அதிகக் கவலை யெடுத்துக்கொண் டிருக்கிறது; சீனக் கல்வி முறையில் இயற்கை விஞ்ஞானத்தை (Natural Science)ப் புகுத்த இது மிகுந்த அக்கறை காட்டுகிறது.

சீனாவின் புதிய கல்விமுறை பொதுமக்களோடு உண்மையான நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. சீனக் கல்வியாளர்கள் இக்கல்விமுறையின் உட்கூறுகளை குடியானவரும் தொழிலாளரும் நன்கு புரிந்துகொள்ளும் வண்ணம் உருவங்களின் மூலம் வெளிப்படுத்த முனைந்துள்ளனர்; இப்படிச் செய்வதனால் சீனக் கல்விமுறை குடியானவர், தொழிலாளர்—ஆகியோரின் வாழ்க்கையினின்றும் போராட்டங்களினின்றும் பிரிந்து செல்லாமல், அவற்றோடு ஒன்றி நிற்கும் என்பது அவர் தம் கருத்து. இதற்கிடையே, சீன எழுத்துக்களைத் தக்க விதத்தில் சீர்திருத்துவதற்கான ஏற்பாடுகள் அங்கே நடந்து வருகின்றன; இச் சீர்திருத்தம் குடியானவர்க்கும் பேரளவு பயனுடையதாயிருக்கும் என்று நம்பப்படுகிறது.

சீனக் கல்வியாளர்கள், இத்தகைய கல்வி முறையைப் புகுத்து முன்பு இதற்காகச் செய்யவேண்டிய வசதிகள் பற்றியும், இதற்காக நடக்க நேரிடும் இடுக்கண்கள் பற்றியும் எண்ணமிட்டு வருகின்றனர். மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் (People's Political Cansultative Conference) மூலமும், மக்கள் நடுவிட ஆட்சியின் (Central People's Government) மூலமும்-தலைவர் மோ-சே-துங் வெளியிட்டிருக்கும் கல்விக் கொள்கைகள் அவர்களுக்கு நல்ல வழிகாட்டிகளாக இருக்கின்றன. இரண்டாவதாக, சீனப் பொதுவுடைமைக் கட்சி கடந்த இருபதாண்டுகளாக நடத்திய புரட்சிப் போராட்டத்தின் மூலம் அவர்கள் ஏறக்குறைய போதுமான அளவு குடியானவத் தொழிலாளர்-கல்வி முறையில் அநுபவம் பெற்றிருக்கின்றனர். மூன்றாவதாக, அவர்களுக்குப் பண்பாட்டின் மீது இருக்கும் கூர்த்த ஆர்வமும், தற்சமயம் மக்களிடையே அவர்களுக்குச் சார்பாக வளர்ந்து வரும் மனப்பான்மையும், குடியானவர்-தொழிலாளர் வகுப்பிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் மேம்பட்ட ஆதரவும்—அவர் தம் வேலைக்குத் துணை நிலையாக இருக்கின்றன. நான்காவதாக. அவர்கள் இவ்வகையில் சோவியத் கூட்டரசின் அநுபவங்களை முன்மாதிரியாகக் கொள்கின்றனர்.

இருந்தாலும், அவர்களுக்கு இத் துறையில் இன்னும் எவ்வளவோ இடையூறுகள் குறுக்கிடுகின்றன. போதுமான நிதிப் பெருக்கும், ஆசிரியர் குழுவும், இத்துறையில் நல்ல அநுபவமும் அவர்களுக்கு மிகுதியும் தேவையாயிருக்கிறது. என்றாலும், சீனாவின் பொருளாதார, அரசியல் நிலைமைகள் சீர்ப்பட்டால், தாம் இவ்விடையூறுகளை விரைவில் கடந்து விடலாம் என்று அவர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

குடியானவர்க்கும் தொழிலாளர்க்கும் தொண்டு புரியும் வகையில சீனக்கல்விமுறை எப்படி வகுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம்.

அங்கே, முதலாவதாக, குடியானவத் தொழிலாளர் குடும்ப வழியினர் தாம் புதிய சீனாவின் முதுகெலும்பும், அழியாச் சொத்தும் ஆவர் என்று அங்கு உறுதியாகக் கருதப்படுகிறது. இதுவரை இவர்கள், தனியாதிக்க வாதிகளை ஒழிக்கும் கடும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததால், இவர்கள் சரியான கல்வி பெற வழியில்லை. ஆகையால், இப்போது இவர்கள் பண்பாட்டுக் கல்வியும், விஞ்ஞானக் கல்வியும் பெற துரிதமான நடவடிக்கைகள் அங்கு எடுத்துக்கொள்ளப் படுகின்றன. அங்கு, மக்கள் விடுதலைச் சேனை, நாளடைவில் நாட்டுப் பாதுகாப்புச் சேனையாக மாறிக்கொண்டு வருவதால், இதில் சேர்ந்துள்ள எல்லா அலுவலாளரும் போர் வீரரும் மிக உயர்ந்த அரசியல்—பண்பாட்டு—விஞ்ஞானக் கல்வியைப் பெற வேண்டியவர்கள் ஆகிறார்கள்.

இரண்டாவதாக, தொழிலாளர்க்கான ஓய்வு நேரக் கல்வி முறை அங்கே நாடெங்கும் ஏற்பட்டு வருகின்றன. 1927-ஆம் ஆண்டில் புரட்சிப் போரில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு, உழைக்கும் வகுப்பின் நிலைக்களமான சீனப் பொதுவுடைமைக் கட்சி தன் அலுவல் முறைக் காரியாலயத்தைக் கிராமப் புறத்துக்கு மாற்றிக்கொண்டது. 1949-ல் சீனாவின் முக்கிய நகரங்கள் விடுவிக்கப்படும் வரை, சீனப் பொதுவுடைமைக் கட்சி இருபத்திரண்டு ஆண்டுக் காலமாகத் தன் உழைப்பு வகுப்பினின்று பூகோள முறைப்படி பிரிந்திருக்கவேண்டியிருந்தது. புரட்சி நிலைகள் பலவற்றில் உழைப்பாளர் பலர் பலவகை உதவிகள் புரிந்தனர் என்றாலும், அவர்கள் அதே நேரத்தில் தம் கல்வியறிவையும் பெருக்கிக்கொள்ள இயலவில்லை; இதற்குக் காரணம் அப்போது நிலவியிருந்த தனியாதிக்கவாதிகளின் கட்டுப்பாடுகளும், குயூமின்டாங் எதிர்ப்புரட்சிக் காரர்களின் அடக்குமுறைகளுமே என்னவேண்டும்.

விடுதலை வேலை தொடங்கிய காலத்தில், பழைய விடுவிக்கப்பட்ட வட்டாரங்களில் இருந்த குடியானவர் நகரத் தொழிலாளரை விடப் புரட்சியிலும் பயிர்த்தொழில் சீர்திருத்தத்திலும் நன்கு பண்பட்டிருந்தனர்.

இதனால், அங்கே, குடியானவரின் முன்னேற்ற வேலை கொஞ்சம் காலந் தாழ்த்தப்படுகிறது. இக்காலத் தாழ்ப்பினால் குடி

யானவர் முன்னேற்றம் தகைக்கப்படுவதாகப் பொருளில்லை; இவர்களோடு தொழிலாளரும் இணைந்து செல்லவே இங்ஙனம் செய்யப்படுகிறது. இத் தறுவாயை அங்கே தொழிலாளரும், பொதுவுடைமைக்கட்சியும் நன்கு பயன்படுத்திக் கொள்ளுகின்றனர்; மக்கள் கல்வியில் அக்கறை கொண்ட பலரும் இதற்கு உதவி புரிகின்றனர். இதுவன்றி, சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமையில், வாணிகக் கழகங்களும கல்வி முறைத் தொண்டர்களும் தெளிவான திட்டம் ஒன்றை வகுத்துக்கொண்டு தொழிலாளர்க்கான ஓய்வு நேரக் கல்விமுறையைப் படிப்படியாகவும், நெறிப்படையாகவும் புகுத்தி வளரச் செய்கின்றனர். ஏறக்குறைய பல பகுதிகளிலுள்ள ஐந்து நூறாயிரம் தொழிலாளர் இன்று ஓய்வுநேரக் கல்வி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கின்றனர்; இன்னும முயன்றால் இதனை அவர்கள் விரிவு படுத்தலாம்.

மூன்றாவதாக, குடியானவர்க்கென்று ஓய்வு நேரக் கல்வி முறை அங்கே தனியாக நிறுவப்பட்டிருக்கிறது. இதுதான் புதிய சீனாவில் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் பெரிய கல்வி முறைச் செயல் என்னலாம். பழைய விடுவிக்கப்பட்ட வட்டாரங்களில், பொதுவுடைமைக் கட்சி குடியானவர்க்குப் புகட்டும் கல்வியில் பெருத்த வெற்றிகள் கண்டுள்ளது.

பழைய விடுவிக்கப்பட்ட வட்டாரங்களில் புகட்டப்படும் குடியானவைக் கல்வியில் இன்னொரு முக்கியக் கூறு மாரிக்காலப் பள்ளி (Winter School) என்னவேண்டும். மாரிக் காலத்தில்தான் குடியானவர்க்கு நல்ல ஓய்வு கிடைக்கும்; அதுபோது அவர்கள் அறியாமையைப் போக்கவும், அரசியல் அறிவைப் புகட்டவும் பல வகுப்புகள் நடத்தப்படுகின்றன; இங்கே அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி அவர்களின் வாழ்க்கைப் போராட்டங்களோடும், தொழிற் போராட்டங்களோடும் இணைந்ததாக இருக்கிறது. இம் மாரிக்காலப் பள்ளி நிறுவப்பட்டவுடன் சீன அரசாங்கக் கல்வி அமைச்சு நாடெங்கும் மாரிக்காலப் பள்ளிகள் நிறுவுமாறு ஓர் ஆணை பிறப்பித்தது. இம் மாரிக்காலப் பள்ளிகளினால் ஏற்பட்ட பயனையும் அநுபவங்களையும் பற்றி ஆராயவும், ஆசிரியர் குழு பாடப்பொருள்கள்—முதலியவை குறித்து விவாதிக்கவும்—1950 இலையுதிர் காலத்தின்போது குடியானவர் தொழிலாளர் கல்வி மாநாடு ஒன்று நடக்கவிருக்கிறது.

நான்காவதாக, எழுதப் படிக்கத் தெரிந்தோர் சங்கம் என்ற ஒன்று அமைத்து நாடெங்கும் எழுதப் படிக்கத் தெரியாமையை நெறிப்படையாக (systematic)ப் போக்க அங்கே எத்தனங்கள் செய்யப்படுகின்றன. இது குறித்துத் தலைவர் மோ-சே-துங், "புதிய சீனாவை உருவாக்குவதற்கு, நம் மக்களில் நூற்றுக்கு எண்பது பேரைப் பீடிக்கும் எழுதப் படிக்கத் தெரியாமையைப் போக்குவதே அடிப்படை நிலையாகும்" என்று கூறியிருக்கிறார். புதிய சீனாவை உருவாக்க அம்மக்கள் ஏற்கனவே தொடங்கி விட்ட போதிலும், அவர்கள் இன்றும் இந்த அடிப்படை நிலையை அடையவில்லை.

இதற்கு அவர்கள் இப்போதே தேவையான பல முன்னேற்பாடுகளைச் செய்யத் துவங்கி யிருக்கின்றனர். இதன் விளைவாக எழுதப படிக்கத் தெரிந்தோர் சங்கத்தை ஓய்வு நேரப் பள்ளிகளோடும், மாரிக்காலப் பள்ளிகளோடும், படைப்பள்ளிகளோடும் சேர்த்திருக்கின்றனர். இதற்கான பரிசோதனை வேலைமை, அவர்கள் பயிர்த்தொழில் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிற வட்டாரங்களிலும், உற்பத்திச்சாலைகள் செவ்வையாக அமைக்கப்பட்டிருக்கிற வட்டாரங்களிலும் முதலில் நடத்துகின்றனர்.

ஐந்தாவதாக, குடியானவர்க்கும் தொழிலாளர்க்குமான குறுகிய கால இடைப்பள்ளிகள் (School-Term middle Schools) அங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தலைவர் மோ-சே-துங், "நம் அரசாங்கம் நம் மக்களில் பலருக்குப் பல திறப்பட்ட கல்வித் துறைகளில் பயிற்சி யளிக்க இப்போதிருந்தே ஒரு சரியான திட்ட மிட்டுக்கொண்டு முனையவேண்டும்" என்று உரைத்திருக்கிறார். இதன்படி பார்த்தால், இன்றும் சீனாவில் குடியானவரிடையேயும் தொழிலாளரிடையேயும் மிகச் சிறுபான்மையோர் தாம் அறிவாளராக விளங்குகின்றனர். இந்நிலை உருவாகும் புதிய சீனாவுக்கு உகந்ததல்லாததோடு, புதிய குடியரசு சமவுடைமைக் குடியரசு ஆவதற்கு முற்றும் இடையூறானதுமாகும் என்று அங்கே கருதப்படுகிறது. குடியானவத் தொழிலாள வகுப்பிலுள்ள பலருக்கு மார்க்ஸிய-லெனினீஸ அறிவைப்புகுத்தவும், பொது விஞ்ஞானத்தைப் புகட்டவும் இக் குறுகியகால இடைப்பள்ளிகள் அங்கே மிகுதியும் சார்புடையனவாக இருக்கின்றன. இங்ஙனம் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் விஞ்ஞானத்திலும், பண்பாட்டிலும் நல்ல பயிற்சி பெற்ற பின்னர், அம்மக்கள் மேற்கொண்டு தொழில் நுட்ப அறிவைப்பெற உயர்தரக் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்றனர். எனவே, அதற்கு ஆதாரமாயுள்ள குறுகிய காலப்பள்ளிகளைச் சேனையிலும், நாட்டின் பல இடங்களிலும் விரைவில் நிறுவ அங்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

ஆறாவதாக, எல்லாவகை பள்ளிகளிலும், குடியானவரும் தொழிலாளரும் அவர் தம் குழந்தைகளும் சென்று கற்க யாதொரு தடையும் ஏற்படாமல் அவர்கள் பார்த்துக்கொள்கின்றனர். அங்கே பல்கலைக் கழகப்படிப்பும் இளங் குடியானவத் தொழிலாள மாணவர்கள் சென்று படித்தற்குரிய அளவு எளிமையானதாக இருக்கின்றது. இத்தகைய கொள்கை சிலருக்குப் பிடிக்கவில்லை; அங்கே சில பழைய அறிவாளிகள், குடியானவத் தொழிலாள வகுப்பினர் மந்தமதியும், அநாகரிகமும், தகுதியின்மையும் உடையவர்கள் என்று நினைக்கின்றனர். ஆனால் உண்மையில், உயர்தரக் கல்விக்கு அவர்களே முற்றிலும் தகுதியானவர்களாக விளங்குகின்றனர்; ஏனெனில், அவர்கள் தாம் இன்றைய சீனாவின் முதுகெலும்பும், ஆதாரமுமாக இருப்பவர்கள்.

சீன அரசாங்கம் 'மக்கள் பல்கலைக் கழகம்' ஒன்றை நிறுவியிருக்கிறது. இப் பல்கலைக் கழகத்தில் எட்டுத் துணைக்களங்கள்

சொன்னபடி செய்வாய்

பாடலாசிரியர்:—நல்லைக்கவி—அ இளங்கோவன்

இசையாசிரியர்:—சங்கீத பூஷணம் ஜி. புத்திசிகாமணி பாகவதர்

★

இராகம்:—சாமா தாளம்:—ஆதி

எடுப்பு

சொன்னபடி செய்திடுவாய்—நல்லவர்
சொன்னபடி செய்திடுவாய்!

தொடுப்பு

பொன்னுரை யென்னவே புகழ்மிகு புலவர்கள்
மன்னுயிர் உய்ந்திட மாண்புமிக் கெய்திடச் சொன்

முடிப்பு

உலகெலாம் வாழத் தாம்வாழ் கின்ற
உத்தமர் புத்தியில் உதித்தெழுந் திட்ட
நலமிகு நூல்கள் நாளும் பயின்று
நன்னெறி யென்று நமக்கவர் காட்டிச் சொன்

சொந்தச் சிந்தனை துணையெனக் கொண்டால்
தொடர்ந்திடு தீமையும் நன்மையாய்த் தோன்றும்!
முந்தையர் நமக்கு முன்னனு பவித்து
முன்னறி வித்துள மூதுரை நூல்களில் சொன்

நல்லது கெட்டது நவிலும் நூலிலே
நல்லது சொல்லும் நன்னூல் பயில்க!
புல்லறி வாளர் புல்லுரை தள்ளி
நல்லறி வாளர் நல்லுரை கண்டு சொன்

Departments) உள்ளன. அவை பொருளாதாரம், பொருளாதார அமைப்புமுறை, நிதியியல், வரவுச்சீட்டு—கடன் பத்திரங்கள் (Credits & Loans), வாணிகம், கூட்டுறவு முறை, தொழிற்சாலை நிர்வாகம், அரசியல் சூழ்ச்சி (Diplomacy), சட்டம் என்பனவாம். இப் பல்கலைக் கழகப் படிப்புக் காலம் இரண்டாண்டுகளினின்று மூன்றாண்டுகள் வரை செல்கிறது. இது நிறுவிய முதல் ஆண்டில் 1400-மாணவர் சேர்ந்தனர். இம் மாணவரில் முக்கால் வாசியினர் குடியானவத் தொழிலாளர் வகுப்பினின்று வந்தோர்; இவர்களில் பலர் மூன்றாண்டுகளிலிருந்து எட்டாண்டுகள் வரை புரட்சி வேலையில் ஈடுபட்டோராகவாவது, மூன்றாண்டுகள் வரை தொழிலாளராக இருந்து நற்பெயர்பெற்றோராவது விளங்குகின்றனர்.

பித்தனின் கடிதங்கள்

"இலக்கியப் பித்தன்"

★

[கூட்டுக் கல்வி பற்றித் தன் கருத்தை எழுதும்படி நண்பன் கேட்டிருந்தான். அதற்குப் 'பித்தன்' எழுதிய பதிற் கடிதந் தானிது.]

பண்புசால் நண்ப,

1

'நாடாளவும், சட்டங்களியற்றவுமாகத் தேர்தலில் போட்டியிடவும், பட்டங்கள் பெற்றுப் பற்பல வேலைகளேற்கவுமான அளவு உரமூட்டியிருக்கும் பெண் கல்வி போற்றத் தக்கது; எனினும் இன்றைய பெண் கல்வியில் குறைகள் பலவுள. அவை களையப்பட்டு முன்னேற்றம் காணுதல் வேண்டும்' என்று எழுதியிருக்கிறாய். மேலும் பெண் கல்வியின் வளர்ச்சிக்குக் கூட்டுக் கல்வி இன்றியமையாதது என்பதற்கும் பல சான்றுகள் காட்டியிருக்கிறாய்.

உண்மைதான் நண்பா! 'உன் கருத்துப் பற்றி எழுது' என்று நீ கேட்டிருக்கிறாய். என் கருத்து உனக்குத் தெரியாதா என்ன! எத்தனை தடவை நாம் இருவரும் சேர்ந்து இந்தக் கருத்து பற்றி விவாதித்திருக்கிறோம்! அந்த நேரங்களிலெல்லாம் நீ என் 'எதிரி'யாக விருப்பாய். மிகப் பலமாக வல்லவா தாக்குவாய் நான் கூறுவதை! இன்று என் கருத்துக்கு நீ இணங்கியிருப்பது காண நான் மகிழ்கிறேன். 'எல்லாவற்றிற்கும் அனுபவம் வேண்டும்' என்று கூறுவர் பெரியோர். அச்சொல் உன்னிடத்து இப்போது உண்மையாயிற்று!

கூட்டுக் கல்வி பற்றிப் பேசுமுன் பெண்கல்வி இன்றியமையாதது என்பதுபற்றி நீ ஆராய்ந்திருக்கும் பொருள்கள் மிக அழகாகவிருக்கின்றன. அவைகளுக்கு மேலாக நான் என்ன கூறமுடியும்? தற்காலக் கல்வி பயிலலின் நோக்க மென்ன என்பதற்கு நீ விடையளித்திருக்கிறாயே அது நூற்றுக்கு நூறு உண்மை. ஆணாயினும், பெண்ணாயினும் இன்று அறிவிற்காகவே படிப்பவர்கள் மிகச் சிறிய அளவினர் தானே! படித்துப் பட்டம் பெற்று வேலையிலமர்ந்து வாழ்வோட்ட வழி காணத்தானே உயர்தரக் கல்வி வேண்டப்படுகிறது! 'பட்டம் பதவிக்காகப் பயிலல் வேண்டாம். அறிவையும் ஆராய்ச்சியையும் விருத்தி செய்யப் பயிலுங்கள்' என்று ஒரு 'மேதை' கூறியிருப்பதாக நீ எழுதியிருக்கிறாய். இந்தப் புத்திமதி உனக்கும் பொருந்துமா அல்லது நம் போன்ற ஏழை மாணவர்களுக்குத்தான் ஏற்குமா? நன்றாக யோசித்துப் பார். நம்மை மிகச் சிரமத்துடன் கற்க வைத்து நம் உதவியை நாடிக் கொண்டிருக்கும் பெற்றோர்க்கு 'அறிவிற்காகப் பயில்கிறேன்; பட்டம் பெற்று வேலை வாங்க அல்ல' என்று கூறினால் எப்படியடா இருக்கும்! வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய வசதிகள் கொண்டவன் பயிலலாமே அறிவிற்காக மட்டும்! ஆகவே, பெண்களும் படிப்பில் அக்கறை காட்டியிருப்பது அப்படிப்பட்ட வேலைகளிலமர்ந்து ஊதியம் பெறத்தானே என்று குறிப்பிடுகிறாய். ஆம்; அதில் சந்தேக மென்ன? ஆனால் நான் ஒன்று சொல்லுவேன் நண்பா! ஆண்கள் தொகையே அதிகமாகி வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும்போது, பெண்களும் படித்துவிட்டு வேலைக்கு வருவதென்றால் எத்தனை நெருக்கடி ஏற்

படும்! அதற்காகப் பெண்களே வேலைக்கு வ க்கூடாது என்று நான் கூறுவதாக எண்ணிவிடாதே!

பெண்கள் படிப்பது எதற்கு என்று கேட்டால் பண்பை வளர்க்கத்தான் என்று நான் சுருக்கமாகக் கூறுவேன். அறிவுக் கலைகளைத் தொட்டுப்பார்த்து ஆராய்ச்சி செய்வதற்குத் தான் என்று நீ கூறினால், உன் கூற்று இரண்டாவதிடந்தான் பெறும். பெண், சமூகத்தைக்கட்டும் சிற்பி; பல பழக்க வழக்கங்களைக் கற்பிக்கும் ஆசிரியை. சமூகத்தை உற்பத்தி செய்து செப்பனிட்டு நல்வழியிலாற்ற வேண்டிய தலையாய கடமைகள் பெற்றவள். அத்தகைய பெண்ணுக்குக் கல்வி மூலம் கடமை உணர்ச்சிகள் ஊட்டப்பட வேண்டும். ஆண் பெண் சிறார் அனைவரின் மனநிலை, பண்பு பண்பு ஆகியனவற்றை அறிய வழிகாட்டப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் கலை ஆராய்ச்சி, பிற இலக்கிய நோக்கம் இவற்றில் இறங்க வேண்டும். கலைக் கல்லூரிகளிற் பயிலும் எல்லா மாணவியருமா கலைச்சிற்பிகளாக, ஆராய்ச்சியாளர்களாக வந்து விடுகின்றனர்? அவ்வாறு வந்தாலும் மறுபடியும் அவர்கள் குடும்ப வாழ்க்கைப் பொறுப்புக்களை ஏற்க வேண்டித்தானே யிருக்கிறது! ஆகவே, எல்லாப் பெண்களுக்கும் 'பொதுவான கலை'யை உணர்த்தல் முதற்கடன். ஆராய்ச்சியில் திறன், அறிவு, ஊக்கம் வாய்ந்த பெண்மணிகள் அதன்பின் அத்தகைய ஆய்வுச் சாலைகளிற் சென்று பயிலட்டும்!

ஆனால் இன்றைய பெண்கல்வி எந்நிலையிலுள்ளது? நீ எழுதியுள்ளனவற்றைப் படித்துப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தேன். காரணம் 'கேலி'யெனக் கருதிவிடாதே. நீ அள்ளிக் கொட்டியிருக்கும் நகைச்சுவைதானடாப்பா! நண்பர் வழுதியும் பார்த்துவிட்டு நீண்ட நேரம் சிரிப்பொலியிற்கிடந்தார்! ஆம்; நீ கூறுவதுபோல இன்றைய கல்லூரிப்படிப்பு, உயர்தர வேலைகளுக்காக வாங்கப்படும் எளிய 'அனுமதிச் சீட்டு' மாதிரி தான் இருக்கிறது. (College study is like an easy passport to better jobs) நெற்கதிர் அறுவடை மாதிரி ஆண்டு தோறும் ஒவ்வொரு கல்லூரியும் பற்பல பட்டதாரிகளை அறுவடை செய்து கொண்டிருக்கிறது. அதிலும் நண்பா, சாதாரண வேலைகளுக்கு வருபவர்களுக்கென்றுகூடத் 'தனியான கலைப் படிப்புகள் இல்லை. ரசாயனம், பௌதிகம், மிருக சாத்திரம் படித்துவிட்டு வரும் கணக்காயன் ஒருவனுக்கு அந்தக் கலைகள் எங்ஙனம் உதவுகின்றன?

பெண்கல்வி, பெண்களின் பண்பு வளர்ச்சிக்குத் தானிருக்க வேண்டும் என்று நான் குறித்ததை நீ மறுப்பாய் என்பது எனக்குத் தெரியும். 'போடா, பண்டைய நம் நாட்டுத் தமிழ்ப் பெண்மணிகள் பள்ளியோ கல்லூரியோ சென்று தான் பண்பு பயின்றார்களாக்கும்! செங்கோலேந்தி ஆட்சி செய்த இராணி மங்கம்மாள், அமைச்சுத் தொழிலில் வல்ல மங்கையருக்கரசியார், அறிவுக் களஞ்சியங்களான ஔவையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், பாரி மகளிர், மாறோக்கத்து நப்பசலையார் ஆகியவர்கள் எந்தக் கல்லூரிகளிலப்பா கற்றனர் தங்கள் கருத்துக்களை' என்று நீ கேலியும் செய்வாய். ஆனால் நீ பண்டைக்காலத்தையும் இந்தக் காலத்தையும் எடை போடாதே! இயற்கையாகவே நற்பண்புகளாலாக்கப்பட்ட நற்பெண்டிர்களாக விளங்கினர் நந்தமிழ்ப் பெண்டிர். இன்றைய எந்தக் கலையும்—அறிவும் புகட்டுவதைவிட எந்து

னையோ அளவு மேலாகக் குடும்பத்திற்கு—நாட்டிற்கு வேண்டிய பண்புகளை அறிந்திருந்தனர். இன்றைய நிலை வேறு. பற்பல இனத்தவர் கலப்பால்—மேலை நாடுகளின் மோதலால் நம் நாகரிகம் தலை கீழாக உருண்டோடி விட்டது. பெண்களின் நற்பண்பும் குடும்பப் பொறுப்புகளுங்கூடச் சிதைந்து நிற்கின்றன. இந்நிலையில் கல்வி மூலந்தான் அவர்களுக்கு 'மறைந்த கலை'யைப் புகட்ட வேண்டும்.

'குடும்பத்துப் பெண்டிர்க்குப் படிப்பெதற்கு? பெண் பட்டம் வாங்கி என்ன பண்ணப் போகிறாள்' என்றெல்லாம் சிலர் உளறுகிறார்களே அதற்குக் காரணம் என்ன தெரியுமா? இன்றைய பெண் கல்வியின் கீழ்த்தனந்தான். இந்நாளைய எத்தனைக் கல்லூரி மாணவிகளுக்குச் சமையல் பண்ணத் தெரியுமென்று நினைக்கிறாய்? சமைக்கத் தெரியாமலிருப்பது கல்லூரிப் பெண்களுக்கு ஒரு தனி நாகரிகம். படித்து வேலைக்கு வந்தாலுங்கூடத் தனியாக ஒரு சமையக்காரி வேண்டுமே ஒரு கல்லூரிமாணவிக்கு. கல்லூரி மாணவி ஒருத்தியின் தந்தை கேட்கிறார் இப்படி: 'கல்லூரியில் படித்து என்னம்மா பிரயோஜனம்? சமையலே பண்ணத் தெரியலை. கணவன் வீட்டுக்குப் போனால் உனக்கு ஒரு தனி சமையற்காரியுந் தேவை. என்று எவ்வளவோ கூறினார். செலவு செய்து உன்னைப் படிக்கவைத்தும் வீட்டு வேலைகளுக்காவது நீ நன்றாகப் படித்துக் கொள்ளவில்லை'. இதில் என்ன குற்றமிருக்கிறது?

இன்றையப் பெண்கல்வி பெண்களை வாட்டிப் பிழியும் ஒரு இயந்திரமாகத்தானிருக்கிறது. அன்றொரு நாள் எங்கள் தமிழாசிரியர் கல்லூரிப் பெண்களெல்லாம் மிகவும் ஒல்லியாக விருப்பது அவர்கள் கற்கும் ஆங்கில மொழி அவர்களை உருக்கி விடுவதனாற்றான் என்று. ஆங்கிலம்-கலைச்சுரங்கம். அதைப் பயில வேண்டியதுதான். ஆனால் மற்ற எல்லாப் பாடங்களையும் அம் மொழியின் மூலமே பயில்வது எவ்வளவு துன்பமுள்ளது தெரியுமா என்கிறார் அவ்வாசிரியர். ஆனால் இதைவிடப் பெரியதான மற்றொன்றை நான் கூறுவேன். நண்ப, விஞ்ஞானம், ரசாயனம் என்று சொல்லிக்கொண்டு பி. ஏ., பி. எஸ்ஸி. வகுப்புக்களில் மூன்று மணி நேரம், ஆறுமணி நேரமாக ஒரே இடத்தில உட்கார்ந்துகொண்டு சோதனை செய்கிறார்களே பெண்கள் அவர்கள் நிலைதான் உனக்குத் தெரியுமேடா! நீயும் கூட்டுக் கல்லூரி மாணவன்தான்; உனக்குத் தெரியாதா என்ன! பெண்கள் மெல்லியலார்; இளங்கொடி போன்றவர்கள் என்றெல்லாம் வர்ணிப்பர்; அத்தகைய பெண்கள் சோதனைச் சாலைகளில் வெகுநேரம் தீயருகில் நின்றுகொண்டு எவ்வளவு அல்லலுறுகின்றனர்! வீட்டிலேயே ஏறக்குறைய இரு மணி நேரமேனும் அடுப்பங்கரையில் தொடர்ச்சியாய் உட்கார்ந்திருக்க முடியாதே அவர்களால் நண்பா, நான் பார்க்கிறேன் தினந்தோறும், மாணவிகள் கண்பார்வையையே கெட வைக்கும் தன்மை வாய்ந்த நுண்ணிய கருவிகள் மூலம் கூர்ந்து நோக்கியும், உடலையும் ஆடை முழுவதையும் வியர்வைக்கடலுள் மூழ்கவைக்கும் 'பர்னரோ'டு சேர்ந்து போராடியும் துன்பப்படுவதை, நீதான் 'தூய கணக்காயன்' ஆயிற்றே உனக்கு இப்படிப்பட்ட காட்சிகளைக் காண எங்கே சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது? ஒருநாள் ஒரு சோதனையின்போது மண்ணெண்ணெயை ஒரு குழாய் மூலம் உறிஞ்சி நிரப்பும்பொழுது எல்லாப் பெண்களும் தங்கள் வாயை நிரப்பிக்கொண்டனர் மண்ணெண்ணையால்! இவைகளைக் குறிப்பதால் பெண்களுக்குச்

'சோதனை'களே வேண்டா; அவர்களுக்கு அவைகளை ஆற்றலுடன் செய்யத் தெரியாது' என்று நான் கருதவில்லை என்பதை நீ எண்ண வேண்டும். ஏதோ ஒரு வேலைக்கோ அல்லது குடும்ப வாழ்க்கைக்கோ வரவேண்டிய பெண் கட்டாயம் இவைகளை யெல்லாம் செய்துதான் தீரவேண்டுமா என்பதுதான் என் கட்சி.

பெண்கல்வி நல்ல முறையில் திருத்தம் பெறல் வேண்டும்: மேல் வகுப்புகளிலுங்கூடக் குடும்ப வாழ்விற்கான செயல்களில் பயிற்சி அளிக்க வேண்டும். சமையல் செய்தல், குழந்தை வளர்ப்பு, குடும்ப நிர்வாகம் போன்றனவற்றில் பயிற்சி அளித்தால் அவர்கள் பிற்கால வாழ்வு எவ்வளவு பிரகாசமாய் விளங்கும்; சமையற்றொழிலை வீட்டிலே பயின்று கொள்ளலாமே; அத்தொழில்தான் பெண்களுக்கு இயற்கையாக வருமே என்றால், கல்லூரி மாணவிகளுக்குச் சமைக்கவும் வீட்டுக்காரியங்கள் பார்க்கவும் எங்கே நேரமிருக்கிறது? மனமும் வராதே சமையற்றொழிலைப் பாடமாகப் புகுத்தி விட்டால் எல்லாப் பெண்மணிகளும் கட்டாயம் பயின்று தானே தீரவேண்டும்?

நன்றாகச் சமைக்கத் தெரிந்த பெண் குடும்பத்திற்கே ஓர் அரிய பொருள். நம் நாட்டில் கணவன் மனைவியரிடையே ஏற்படும் காதலுக்கும் பிணக்கிற்கும் இத்தொழில்தான் காரணமெனில் அது மிகையாகாது. தனது ருசிக்கேற்ற வகைகளில் உணவு சமைத்து அமுதளிக்கும் மனைவியைக் கணவன் எவ்வளவு அன்புடன் நேசிக்கிறான் தெரியுமா? உணவில் ஊறு ஏற்படுவதனாற்றானே கணவன், மனைவியைக் கோபிக்கவும் உணவு விடுதிக்குச் சென்று உண்ணவுமாக நேரிடுகிறது? பெண்களுக்கு, உணவு சமைத்துத் தம் கணவர்க்கும் குழந்தைகட்கும் படைப்பதில் எவ்வளவு ஆனந்தம் ஏற்படுகிறது தெரியுமா? தன் மனைவி கையில் உணவு வாங்கி ருசி பார்த்தாலே கணவனுக்கு ஒருவிதத் தனி ருசி ஏற்படத்தான் செய்கிறது. இந்த இன்பத்தை அனுபவித்தறியாத குடும்பங்கள் தாம் சமையற்காரிகளை வைத்துக் கொண்டிருக்கின்றன. கொஞ்சம் படித்தவளாயிருந்தாற்கூட கணவனுக்குச் சோறு படைப்பதும் இல்லை. தானும் கணவனும் அருகிருக்கச் சமையற்காரி அமுது படைக்க வேண்டும்; அல்லது கணவன் தானாக படைத்து உண்ண வேண்டும். நந்தமிழ்நாட்டுச் சங்க இலக்கியங்கள் பல, சமையற்றொழிலால் தம்பதிகட்கிடையே நிலவியிருந்த அன்புப் பிணைப்பு பற்றி அழகாகக் கூறுகின்றன. இது அறிந்திராத மேலைநாட்டு நாகரிகத்தை நாமும் 'காப்பி' அடிக்கிறோம்... அமெரிக்க நாட்டுக் கல்வி முறையில் பெண்கள் கல்வியில் இப்பகுதி இடம் பெற்றுள்ளது. ஆண்டுக்கொருமுறையோ இருமுறையோ கல்லூரி மாணவிகள் தாம் கற்ற பல புதிய முறைகளாலும் மிகத் திறம்படச் சமைத்த உணவு கொண்டு கல்லூரியிலேயே தம் பெற்றோர்க்கு விருந்திட்டு மகிழ்வார்களாம்! சமையற்றொழிலைச் சீராக்க—எளிதாக்கவேண்டிய ஆராய்ச்சிகளும், செய்முறைகளால் ஆராயப்படுகின்றன. இவ்வாறே பிள்ளை வளர்ப்பு முறை, குடும்பப் பொறுப்புக்கள், வரவு செலவு 'பட்ஜெட்' போன்ற பகுதிகளுமே அந்நாட்டுப் பெண் கல்வி முறையினை நிரப்பியுள்ளன. நம் நாட்டுப் பெண் கல்வி இந்த முறையில் அமைதல் வேண்டும். அதைத்தான் 'பண்பு வளர்த்தல்' என்று குறிப்பிட்டேன். இதற்குப் பின் பிற முற்போக்கான கலை ஆய்வுகளில் இறங்கட்டும் பெண்கள்! அப்

பொழுதுதான் படித்துவிட்டுச் சாதாரண வேலைக்கு வரும் பெண் முதற்கொண்டு பெரிய ஆராய்ச்சியாளர்களாக வரும் பெண் வரை எல்லாப் பெண்களும் நல்ல 'குடும்ப விளக்கு'களாக மிளிர முடியும். வீட்டுத் தொழில்கள் தெரியாமல் ஏதோ வேலையென்று கூறி ஐந்தாறு காசுகள், சம்பாதிப்பதைவிடப் பெண்கள் நல்ல குடும்ப வாழ்க்கை நடாத்தும் 'மனைவி'களாக இருந்து கணவன் வருவாயிலேயே குடும்பம் நடத்துதல் சாலச் சிறந்தது என்பேன் நான்! அருமை நண்பா, கூட்டுக் கல்வி பற்றியும் குறிப்பிடக் கேட்டிருக்கிறாய். பெண் கல்வியில் மேலே குறிப்பிட்டுள்ள 'புதுமைகள்' எத்துணை அவசியமோ அத்துணை அளவு முக்கியமானதுதான் கூட்டுக் கல்வியும்! பெண்கள் கல்லூரிக்கெல்லாம் வந்து பயில்வது எதற்கடா தம்பி? நாடறிய...பலர் பண்பு அறிய—ஒழுக்கம் உணர—நற்பண்புகள் கற்றுக் கொள்ளத்தானே? அத்தகைய கண்ணோட்டத்திலிருக்கும்பொழுது தனியாகப் பெண் குழு ஒதுங்கியிருந்து படிப்பதால் என்னப்பா நலங்கள் பெற முடியும்? ஒருத்தி மற்றொருத்தியின் நாகரிகத்தையும், பழக்க முறைகளையும் பார்த்துத் தம் நடுவிற்றான் காணப்படும் சிறப்புக்களைத்தான் உணர முடியுமேயன்றி, பிற ஆண்களின் உள்ளப்பாட்டையும் பண்பையும் அறிவையும் தெரிந்து கொள்வது எங்ஙனம் சாலும்?

ஆண்கள் பெண்களோடு பயில்வதால்—பழகுவதால் எவ்வளவு நன்மையடைந்திருக்கிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். கூட்டுக் கல்வியின் நோக்கமெல்லாம் இரு இனப் பண்பாடுகளை உயர்த்திச் சமூகத்தைச் செப்பனிடும் உயர்ந்த குறிக்கோள்தான். பண்புதனை வளர்க்கத் தவறி, வெறுக்கத்தக்க செயல்களை வளர்க்குமேயானால் அக்கால கூட்டுக்கல்வியின் பயன் ஒன்றுமில்லை: அக்கல்வியின் அமைப்பும் சரியில்லை என்றுதான் நாம் கருதுதல் வேண்டும். நண்பா, உனக்கும் எனக்கும் தெரியும்—நம் போன்ற தாயமனத்தினர்க்குந் தெரியும் கூட்டுக்கல்வி அளித்த நலன்கள். பிற கள்வர்கள்—கூட்டுக் கல்விக்கே உலைவைத்த 'உத்தமர்கள்' எப்படி அறிவார்கள் பண்பை? அத்தகைக் கயவர்களால் நாட்டிலும் கூட்டுக் கல்வியின் நிலை நாசமாகி வருகிறது

'அக்காள் தங்கையோடு பிறந்திருக்கிறாயடா?' என்று சிலர் கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். இரக்கம் பற்றிக் குறிக்க அக்காள் தங்கை என்பவர்களை ஏன் சுட்ட வேண்டும்? அண்ணன் தம்பிகளோடு பிறந்திருந்தால் என்ன, இரக்கம் இருக்காதா? இதன் முரண்பாட்டை நாம் நன்றாக அறிய வேண்டும் நண்பா! அக்காள் தங்கைகள் பெற்ற ஆண்கள் பிற ஆண்களைவிட உள்ளத்தால் 'மெல்லியரா'யிருப்பர்—அன்பிலும் இரக்கத்திலும். இளகிய மனம், இரக்கப் பண்பு அவர்களிடம் அதிகம் இருக்கும். 'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்பார்களே அதுபோலப் பெண்களோடு பழகுவதால் உள்ளம் உருகுகிறது; பண்பு மிளிர்கிறது; பிறர்க்காக வாழ வேண்டிய பொறுப்புகள் தாமாக நம்மையடைகின்றன. அண்ணன், தம்பியைத் திட்டுவதைவிட, அடித்துத் திருத்துவதைவிடத் தங்கையிடம் மிகவும் எளிய முறையில்தான் பழகுகிறான். தம்பி அழுதாலும் ஒருவேளை அழாமலிருந்து விடுவான் அண்ணன். ஆனால் தன் தங்கைக்கும், தமக்கைக்கும் எத்தகைய தியாகமும் செய்யத் தயாராயிருப்பான் அண்ணன்—உயர்ந்த நெறி படைத்தவன். உதாரணத்திற்குத்தான் நீ இருக்கிறாயேடா நண்பா! என்னை

விட உன் மனம் குறைந்த 'உருகு நிலை' கொண்டுள்ளது: பெண்ணினங் கண்டால் உனக்குப் பரிவும் மகிழ்வும் தயாள குணங்களுந் தோன்றுகின்றனவே! திருமதியின் திருமணம் முடிந்தபிறகுதான் எனக்குத் திருமணம் என்று நீ கூறிவிட்டாயே நீயல்லவா தியாகி!

நண்பா, எனக்கு அத்தகைய 'பாக்கியம்' கிடைக்கவில்லையே என்று வருந்துகிறேன். 'தங்கை இல்லாத தடிப்பயல்' என்று நான் என்னைத்தானே திட்டிக் கொள்கிறேன். நம் பண்பைச் சீராக்கும் ஒரு பெண் இல்லையே. கல்மனதைக் கரைக்கும் அரிய தங்கை ஒருத்தி இல்லையே. பெண்ணினப் பரிவையும் உள்ளத்தையும் குணங்களையும் அறிய வாய்ப்புகளில்லையே! என்று நான் எண்ணிக் கண்ணீர் சிந்தாத நாட்களில்லையடா! பெண்ணோடு பிறந்திராத பாவியல்லவா நான்! ஆனால் உன்னோடும்-உன் தங்கை—அல்லி கமலத்தோடும் நான் கழித்த நாட்களையும் கண்ட இன்பங்களையும் மறக்க முடியுமா? என்றாலும் கமலம் தூரத்திலிருக்கும் தங்கை. இதோ என்னருகே மற்றொரு தங்கை உட்கார்ந்து கொண்டு நான் எழுதிய குறிப்புகளை எழுதிக்கொண்டிருக்கிறாள். என் ஒடிந்த உள்ளத்தைச் செம்மையாக்க வந்த தங்கை இவள்! தன் அன்பால்—உயரிய பண்பால் என் உள்ளத்தைத் தொட்ட தங்கை இவள்! நண்பா, இத்தங்கை ரூபெல்லா பற்றி நான் முன்னொரு மடல்களில் மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்ததை நீதான் அறிந்திருக்கிறாயே. பெயர்மட்டுந்தான் உனக்குத் தெரியாதிருந்தது. ரூபெல்லாவுடன் பழகியதிலிருந்து நான் முற்றும் புதிய மனிதனாக மாறியிருக்கிறேன். நீதான் முந்தைய உன் கடிதத்தில் கேட்டிருந்தாயே என்னடாப்பா, உன் லிகிதங்களெல்லாம் ஒரே அன்புணர்ச்சி வெள்ளப் பெருக்காக இருக்கிறதென்று! ரூபெல்லாவின் உள்ளம் என் உள்ளத்தின், மறு உருவம். என் நெஞ்சம், இரக்கம் அன்பு ஆகிய காற்றுக்களால் திரிக்கப்பட்டு இளகிய தன்மையுடையதாக மாற்றப்பட்டுள்ளது. 'பிறர்க்கென வாழாத் தனக்குரியானன்' என்ற பேதைமை போய்த் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியானாய்' மாறியிருக்கிறேன். ரூபெல்லா என்னை அண்ணா என்று அன்பு ததும்ப அழைப்பாள். நான் தங்கையென எண்ணிக் கொண்டாலும் கேலிக்காக 'அக்காள்' என்று அழைப்பேன்! நாங்கள் பற்பல காரியங்கள் பற்றி விவாதிப்போம்; சிந்தனை செய்வோம்; ஒன்றாகப் படிப்போம்; ஒன்றாக வீடு திரும்புவோம். ஆனால் கள்ள உள்ளமும், பிளவான எண்ணமும் எங்களுக்குக் கிடையாது. என்றாலும் சிறிய பிணக்குகளும் இடைப்படும். ஆனால் அவை நீர்மேலெழுத்துக்கு நேராகி'விடும்! பிற வெறியர்போலப் பழகுங் காலைத் தங்கையாகவும், நான் செல்லச் செல்லக் காதலியாகவும் எண்ணும் வழக்கம் என்னிடம் இல்லை. ரூபெல்லாவும் அப்படித்தான்.

டேய் நண்பா, கல்லூரியில் படிக்கும்போதே காதல் என்று சொல்லிக்கொண்டு பிடிவாதஞ் செய்யுங் குணத்தை நீ போற்றுகிறாயடா? அத்தான் ஒருவன் கல்லூரியில் படித்துக் கொண்டிருப்பான்; அல்லது ஊரில் நல்ல குணமும் சொத்தும் கொண்டு ஏதோ வியாபாரஞ் செய்துகொண்டுதானிருப்பான். அத்தைமகளோ படிக்கப்போன இடத்தில் பிறனொருவனைக் கண்டு காதல் கொண்டு மணமும் முடிக்க உறுதிசெய்துகொண்டால் அது எப்படியடா இருக்கும்? காதல் மணம் வேண்டாமென நான் கூறவில்லை. அல்லது படியாத—பண்பு இல்லாத அத்தானை வரித்துக் கொள்ளவும் சொல்ல

வில்லை. 'காதல் தெய்வீகமானது; கண்டவுடன் ஏற்படுவது; எவராலும் அழிக்கப்பட முடியாதது' என்றெல்லாம் கூறுகிறார்களே அதைத்தான் நான் மறுக்கிறேன். கல்லூரி சென்று பயில்வது பண்புணர்வில்லாது காதலர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகவல்ல! பெற்றோர்களால் மணமுடிக்கப்பட்ட 'பெரிய வீட்டுத்' தம்பதிகளிடம் காதல் இல்லையா? அல்லது படித்த—ஒருவரையொருவர் அறியாத—இருவர் நடத்தும் வாழ்வில் காதல் இல்லையா? அமெரிக்காவில் ஆண்களும் பெண்களும் ஒருவரோடொருவர் பல்லாண்டுக் காலம் பழகிய பின்புதான் மணமுடிப்பராம், பழக்கவழக்கங்களை நன்றாக அறிந்த பின்னர்! என்றாலும் மாதத்திற்குக் குறைந்தது நாலைந்து மண முறிவுகள்! வெறும் அழகுக்காக மட்டுங் காதல் கூடாது. அறிவிற்கும் பண்பிற்கும் காதல் ஏற்பட வேண்டும். கல்லூரியில் இத்தகைக் காதல்கள் வெறும் அன்பு வடிவிலேயே விளங்குதல் நன்று. படித்து முடிந்த பின்னர் குடும்பநிலை, சூழ்நிலைக்குத் தக்கபடி மணமுடித்துக் கொண்டு காதல் ஆற்றலாம் வாழ்வில்!

நானும் ஒருபெண்ணாவும் பழகுதலால் எங்கள் குறைகள் வெளிப்படுகின்றன. வெறும் 'முகம் நகுதல்' மட்டுமல்லாது அகம் நகவும் வண்ணம் கொண்ட நட்பாதலால் எங்கள் குறைகளின் தன்மைகளை எங்கள் ஒவ்வொருவர் வாயிலாக அறிந்துகொண்டு திருத்திக் கொள்ள முடிகிறது. நண்பா, சில நண்பர்கள் உண்டு. அவர்களுக்குச் சிரிப்பூட்டிப் பேசினால் போதும். ஆனால் அவர்களிடத்துள்ள குறைகளை எடுத்து நீ கூறினாலோ உடனே உன் நட்பிற்கு முறிவுச்சீட்டு! நம் முன்னாள் நண்பர் திரு——அவர்களை மறந்திருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன்!... நாங்கள் இருவரும் பழகுவதால் ஒரு ஆண் ஒரு பெண் இருவரின் பண்புகளே விருத்தியடைகின்றன. உலகில் என்ன, எல்லா ஆடவருமா ஒரேவித நடத்தைகளைக்கொண்டுள்ளனர்? 'ஒரு பானைக்கு ஒரு சோறு பதம்,' என்ற பழமொழி உலக மக்களின் 'குணத்தேர்வுக்குப் பொருந்துமா? ஆகவே, எங்களைப் போலக் கல்லூரி பயிலும் எல்லா மாணவரும், மாணவியரும் நெருங்கிப் பழகுவதால் பலதிறப்பட்ட குணங்களும் பண்புகளும் ஒன்றோடொன்று மோதி நன்மை பயக்கும். இரு இனங்களும் பண்பால் பரிணமிக்க முடியும்.

நண்பா,

கூட்டுக் கல்வியின் பயன் இதுமட்டுந்தானா? கல்லூரி வாழ்வே ஒரு தனி இன்பச் சோலையாக வல்லவா காட்சியளிக்கிறது! விநோத குணங்களையோ நடத்தைகளையோ கொண்ட 'இனத்தவர்' அடுத்த 'இனத்தவரால் கேலி பண்ணப்படவும், கிண்டல் பண்ணப்படவும்—அதனால் மகிழ்ச்சி, சிரிப்பு, இன்பம், கேலிதரும் கெக்கலிப்பு மட்டுமல்ல பயனும் விளைகிறது. எங்கள் கல்லூரியில் பெண்களினத்தில் 'கவரிமான்', 'வனராணி', 'சிங்காரி', 'நவீன குமாரி', 'திலோத்தமா'க்கள் உண்டு! ஆண்களினத்தில் 'ஷோக்கு சுந்தரம்', 'நவீன நாரதர்', 'பீமசேனன்', 'முருங்கை மரம்', 'மாமண்டை', 'மாஸ்டர் கிச்சுக்கள் உண்டு! படிப்பில் இரு இனத்திலும் ஒன்றை மிஞ்சிய மேதைகள் மறு இனத்திலிருக்கலாம். அவர்களுள் பெண்களாயிருந்தால் அவரிடத்துச் சென்று கேட்கும் சந்தேக நிவர்த்திகள் ஆசிரியர் உணர்த்துபவைகளை விட அதிகமான தெளிவுடையனவாகத்தானிருக்க முடியும். சோதனைச்சாலைகளிலும் இடைப்படுஞ் சந்தேகங்களைப் பக்கத்துமாணவ மாணவியரிடங் கேட்டுத் தெளியப்பழகல் வேண்டும்.

நண்பா,

ஆண்களோடு பெண்களும், பெண்களோடு ஆண்களுந்தான் எளிதாகப் பழக முடிகிறதில்லையே! அதிலும் 'வாலிப உருவங்கள்' இந்தக் காலச் சூழ்நிலையில் பழகுவதும் பண்பிலா அமைகிறது? ஏன், அன்றொருநாள் கமலா, வெளியே தன் பள்ளி மாணவனுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தது கேட்டு உன் அப்பா என்ன கூறினார் பார்த்தாயா? கமலா, கமலம் போன்ற தூய குணத்தினளாகவிருந்தும் அவளுக்குக் கெட்ட பெயர் கிடைப்பதன் காரணம் தெரியுமடா? ஊறிப்போன சமூகச் சாக்கடை பழங்காலக் கண்மூடிப் பழக்க வழக்கங்களிலிருந்து இன்னும் விடுதலை பெறவில்லை. கல்லூரியில்கூடப் 'பெண்ணோடு ஆணோ பேசிடில் தனியே' பிற மாணவர்கள் அவர்களிடம் தனிக் கண்ணோட்டம் செலுத்துகின்றனர். சந்தேகப் பார்வையைத்தான் அவர்கள் கண்கள் சொரிய முடிகின்றது!

பெண்களும் மானிட இனந்தானே? அப்படியிருக்க அவ்வினத்தினிடம் மட்டும் ஆண் இனம் தனி அக்கரை. பார்வை செலுத்துதல் ஏன்? எங்கள் கல்லூரியில் பி. ஏ. வகுப்புகளில் மட்டுந்தான் மாணவிகள் பயில்கின்றனர்—மிகச் சிறிய தொகையினர். வகுப்புக்களுக்கு இவர்கள் புறப்பட்ட பின்னர்தான் மாணவர்கள் இவரைப் பின் தொடர்வர். அவ்வாறே வகுப்பு முடிந்த பின்னரும், கல்லூரிக் கூட்டங்களில் முந்தியடித்துக்கொண்டு இவர்களுக்கு அருகில் பின்புறம் உட்கார்வதும், வேண்டுமென்றே அரட்டையடித்துத் தங்கள் 'திறமை'களைக் காட்டிக்கொள்வதும், மாணவர் செயல்கள். இவையன்றி வகுப்பு நேரமற்ற மற்றைய நேரங்களிற்கூட அங்கோ இங்கோ தப்பித்தவறி ஒரு பெண் சென்று விட்டாளானால் அவள் உருவம் மறையும்வரை மாணவர்கள் தங்கள் பார்வையை மறுபக்கம் செலுத்த மாட்டார்கள்! காரணம் என்னடா நண்பா?

ஆரம்ப வகுப்பு முதற்கொண்டு உயர்தரப் பள்ளிவரைத் தனியாக படித்த மாணவர்க்குக் கல்லூரியில்மட்டும் பெண்களைக் கண்டவுடன் 'வியப்புக் குறி' தோன்ற லியல்புதானே! அதுவரை மாணவிகளோடு பழகியறியாத அல்லது அவர்களைக் கண்டுமறியாத(!) மாணவர்க்கு இயல்பாகவே வியப்பும், கேலியும், கிண்டலும், மருட்சியும், ஆச்சரியமும் உண்டாகி விடுகின்றன. ஆகவேதான் கூட்டுக்கல்வி கல்லூரிகளுக்கு மட்டுமல்ல எல்லாப் பள்ளிகளுக்கும் இன்றியமையாதது என்பது தெளிவு. இளவயதில் ஒன்றிப் பழகினால் பிறகு ஒரு இனம் பற்றிய மருட்சியும் ஆச்சரியமும் மற்றொரு இனத்திற்கு உண்டாவது அரிதுதானே!

நண்பா,

அன்றொரு நாள் என்னோடு சோதனைசெய்து கொண்டிருந்தாள் வசந்தி. இடையே ஏதோ கோளாறு ஏற்பட்டதன் காரணமாகக் கருவியைச் சரியாக்கத் தெரியாததால் வாளா நின்றுகொண்டிருந்தவளுக்கு நானே முன்சென்று உதவி புரிந்தேன். 'தாங்க்ஸ்' என்ற வார்த்தைகளை உதிர்க்கும்போதே அவள் முகம் நன்றியறிதலோடு என்னைப் பார்த்தது. சோதனை முடிந்து வீடு திரும்பும்போது, 'ஸிஸ்டர், தங்களைப் பற்றிக் கொஞ்சம் நான் அறியலாமா...?' என்று கேட்டேன். நண்பா, நான் கேட்டது ஏதேனும் தவறாகத் தெரிகிறதோ? அவள் சூழ்நிலையையும் குடும்பத்தையும்பற்றி அறிந்து கொண்டால் நலந்தானே என்ற கருத்திற்றான் நான் கேட்

டேன். வசந்தி ஏனோ விர்ரென்று போய்விட்டாள், ஒன்றுங் கூறு மல்—திரும்பிக்கூடப் பார்க்காமல். நண்பா, நான் வசந்தியைக் குறைகூற விரும்பவில்லை. ஆண் இனம் பற்றித்தான் குறைகூறு வேன். இன்றைய கல்லூரிப் பெண்கள் தங்களை நெருங்காதபடி ஆக்கிக் கொள்கிறார்களே சில கயவர்கள்-மாணவர்கள் என்ற பெய ரில் அவர்களைத்தான் குறை கூறுவேன். 'பேசினால் காதற்பேச்சு; செயலானால் காதற்செயல்' என்றெண்ணித் தங்கைபோலச் சிரிக்கும் தன்மையையும்,உடன் பிறந்தாள் போல உணர்த்தும் கண்பார்வை யையும் வேறு விதமாகக் கற்பனை பண்ணுபவரிடத்து எப்படியடா உண்மையான அன்பு பிறக்க முடியும்? ஆண்கள் உற்று நோக்குதல் போலப் பெண்கள் ஏனோ ஆண்களை அப்படிப் பார்ப்பதில்லை.

எங்கள் கல்லூரித் தலைவர் கூறினார், 'ஒவ்வொரு மாணவனும் தன் கூடப் பயிலும் மாணவிகளைத் தன் உடன் பிறந்த சகோதரிக ளாக எண்ணிப் பழகினால்—நடந்தால் கூட்டுக் கல்வியிலுள்ள சிக் கல்கள் தீர்ந்துவிடுமே' யென்று. உண்மைதானே நண்பா! மறுதலை யாகப், பெண்களுக்கும் அப்படித்தானே என்று கேட்பாய். அதி லுஞ் சந்தேகமென்ன?

என் உயர்தரக் கலாசாலைத் தோழி ஒருத்தி இருக்கிறாள். அவ ளும் என்னிடத்து நன்றாகத்தான் பழகினாள் தங்கைபோல. ஆனால் இப்பொழுது என்னைக் கண்டால் ஏன் பேச மாட்டேனென்கிறாள்? அவளுக்கு அவர் இருந்தாலும், சீர்கெட்ட சமூகம் தடையாயிருக்கிறது! எனக்கு ஒரு கல்லூரித் தோழி உண்டு. அவளுக்கு மணமாகிக் குழந்தைகளும் பிறந்துவிட்டன. உயர்ந்த உத்தியோகத்திலிருக்கி றான். இன்றுங்கூட நான் அவள் வீட்டிற்குச் சென்றால் தவறாமலே குறைந்தது அரை மணி நேரம் பேசிக்கொண்டு அளவளாவுவோம் என்று கூறினார். எங்கள் கணித ஆசிரியர். ஒருநாள் எனக்கு எவ் வளவு மகிழ்ச்சியும் ஆசையும் உண்டாயிற்று தெரியுமாடா நண்பா. அப்படி ஒரு தோழி கிடைப்பாளா என்று! எழுத வார்த்தைகள் வாரா; கருத்தும் வராதுடா நண்பா!

என் கல்லூரி வாழ்வின் நோக்கம் என்னைப் பொறுத்தமட்டில் என்ன என்பதுதான் உனக்குத் தெரியுமே. குறைந்தது மாணவருள் ஓரிரு உயிர் நண்பர்; மாணவியருள் ஓரிரு உயிர்த் தோழிகள் என்பிற் கால வாழ்விலுங்கூட நிலைத்திருக்கவேண்டும் என்பதுதான் என் தளராத அவா. குப்பெல்லா அதற்கு எடுத்துக்காட்டாக அமைவாளா?

நண்பா,

கூட்டுக் கல்விபற்றி எத்தனையோ பக்கங்கள் எழுதிக்கொண் டேயிருக்கலாம். நீ எழுதிய கடிதங் கண்டாள் குப்பெல்லா.

"நானும் இதுபற்றி ஒரு கடிதம் எழுதி அனுப்பட்டுமா, அண்ணா?" என்று கேட்டாள்.

"ஏதாராளமாக செய்யேன். உங்களின் முன்னேற்றத்திற்கு நீயே ஒரு வக்கீலாக அமைந்துவிட்டால், அடேயப்பா, பிறகு கேட்கவேண் டுமா பெண்களின் முன்னேற்றத்தை" நான் என பதிலளித்தேன்.

"அப்படியல்ல, இரு இன முன்னேற்றமும் இதில் அடங்கி யுள்ளது" என்று கூறிச் சிரித்தாள்.

குப்பெல்லாவின் கடிதமும் உனக்கு விரைவில் கிடைக்கும். இந்த லிகிதத்தில் காணப்படும் கருத்துக்களிற் சிலகூட குப்பெல்லா கூறி யதுதானடாப்பா நண்பா!

சமூக வளர்ச்சிக்கு—நாட்டின் முன்னேற்றத்திற்குக் கூட்டுக் கல்வி தனி சிறந்தது. அடிப்படையிலேயே ஆரம்பிக்கப்பட வேண்

டும். அப்பொழுதுதான் 'முதிர்ந்த பலனை' நாம் எதிர் பார்க்கமுடி யும். அயல் நாட்டுக் கூட்டுக்கல்வி வேறு; நம் நாட்டுக் கூட்டுக் கல்வி வேறு. அவர்கள்போல ஆண்களும் பெண்களும் ஒருவர் தோள்மேல் மற்றொருவர் கை போட்டுக்கொண்டும், கை கோர்த்துக் கொண்டும், முத்தமிட்டுக்கொண்டும், கை குலுக்கிக் கொண்டும் செல்லுதல் நம் நாட்டிற்குப் பொருந்துமா? உடன் பிறந்தாளாயினும் பெண்களைத் தொடக்கூடாத பண்பறிந்த நமக்கு அத்தகைய 'ஆடம்பர முன்னேற்றம்' வேண்டுவதின்று என்றாலும் அத்தகைய 'பண்புகள்' சில நம்மிடம் தலை காட்டுகின்றன. அவைகளைத் தலை தூக்கா தழித்துவிட நாம் முயலல் வேண்டும். கேவலமான உடற் தொடர்பின்றி உள்ளத் தொடர்பு ஏற்படாதா என்ன! நம் நாட்டுப் பண்பமைப்பில் கூட்டுக்கல்வி அமைய வேண்டும்.

குடும்பத் தொல்லைகளின்போது மனதைக் குளுமைப் படுத்தும் ஆற்றல் வாய்த்த நட்பு எம் மனிதர்க்கும் இன்றியமையாதது தானே! ஆண்கள் நட்பைவிடப் பெண்களிடத்துக் கொண்டிருந்த நட்பை அன்பின் பிணைப்பை எண்ணிப் பார்க்க வேண்டுமடா நண்பா. அந்தச் சோக நோத்தில்! உள்ளம் உருகும்; மனம் தெளி வுறும்; சிந்தனை செயலாற்றும்.

கூட்டுக்கல்வி இன்றைய நிலையில் மிக மிகக் குறுகலாகவிருக் கிறது. தற்கால நிலையிலிருந்து அக் கல்வியிலைப் பல திருத்தங்க ளோடு மேனிலைக்குத் தூக்கி வைத்தல் வேண்டும் ஆரம்பப் பள்ளி முதற்கொண்டு பல்கலைக் கழகம் வரையும் கூட்டுக் கல்வியைத் 'திணித்தல்' இன்றைய கல்விக் குழுவின் தலையாய் கடன்.

நண்பா,

உணர்ச்சிப் பெருக்கால் நிறைய எழுதி விட்டேன். என்றாலும் இந்தக் கடிதத்தையேனும் முழுதும் படி. நான் பண்ணியிருக்கும் 'குற்றப்பட்டியலை' அனுப்ப மறந்துவிடாதே!

முழுத் தேர்வு தன் பிளந்த வாயைக் காட்டிக்கொண்டு நம்மை அச்சுறுத்தத் தொடங்கி விட்டது என்றாலும், அதன் வாயைக் கிழித்தெறிய நம்மால் தானா முடியாது? நன்றாகப் படி விடுமுறை நாட்களை எப்படிக் கழிக்கலாம் என்பது பற்றி எழுது. கமலாவுக்கும் காட்டுடாப்பா நண்பா இந்தக் கடிதத்தை! "தங்கை கமலாவுக்கு, அநேக ஆசிச் செய்திகளும் வாழ்த்துக்களும்! என் கண்ணு கமலா நன்றாகப் படியம்மா! அண்ணன் சொற்களைத் தட்டாதே!தேர்வைக் கடந்து செல்லும் வழியில் இறங்கு! இடர்களைக்கண்டு மனந்தள ராதே கமலம்! உன் அண்ணனை மறந்து விடாதே! விடுமுறையில் நான் வந்தாலும் வருவேன். விடுமுறையை எப்படிக் கழிக்க விரும்புகிறாய் என்பதுபற்றி உன் கருத்தையும் எழுது. வாழ்க நீ கமலா!"

நண்பா,

அத்தை மகள் என்ன சொல்லுகிறாள் அஞ்சல் மூலம்? அதி லேயே மூழ்கிவிடாதேடா முட்டாள்! தேர்வை ஒரு கை பார்த்து விட்டு வா; பிறகு அத்தை மகளை விட்டுவிடாதே! அவளுக்கும் என் ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பாயா? தாய் தந்தையர்க் கும் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவி

இதோ குப்பெல்லா எழுந்துவிட்டாள். வருகிறேன்.

உன்னை என்றும் மறக்க வொண்ணாத

அரிய நண்பன்

" இலக்கியப் பித்தன் "

இலக்கிடேக்குடில்,
(மயிழ்காம.)

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

நந்தன௵ ஆனி௴ கலியுகாதி 5054, சாலிவாகனம் 1875,

பசலி 1361-62, ஹிஜிரா 1371, கொல்லமாண்டு 1127,

இங்கிலீஷ் 1952௵ ஜூன்௴—1952௵ ஜூலை௴

ஆனி	ஜூன்	வாரம்.	திதி.	நட்சத்ரம்	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்
1	14	சனி	சப்22-40	சத4-43	அ4-43ம	மிதுன ரவி கா-11-20
2	15	ஞா	அ18-38	பூர2-18	சி2·18அ	த்ரிலோசன பூஜா
3	16	திங்	நவ15-45	உட்0-58	சி60	நாற்கால் பிராணி வாங்க
4	17	செவ்	தச13-55	ரே0-43	அ60	வியாதியஸ்தர் குளிக்க
5	18	புத	ஏ13-13	அசு1-33	ம1-33சி	சர்வ-மத்வ ஏகாதசி
6	19	வியா	து13-35	✳ப3-30	சி3-30ம	கிருத்திகை விரதம்
7	20	வெ	திர15-03	கிரு6-30	சி6-30ம	மாத சிவராத்ரி
8	21	சனி	ச●17-35	ரோ10-35	சி60	ஸர்வத்ர அமாவாசை
9	22	ஞா	அ21-1	மிரு15-38	சி60	தனியநாள
10	23	திங்	பிர25-45	திரு21-40	சி21-40அ	ஆஷாட சுத்தம்
11	24	செவ்	துதி31-18	புன28-38	சி60	
12	25	புத	திரு37-30	பூச36-15	சி60	குரு · சுக் சூரி · பு புத
13	26	வியா	சது44-03	ஆ44-10	அ44-10சி	
14	27	வெ	பஞ்50-23	மக51-55	ம51-55சி	1-மிது-சூரி
15	28	சனி	சஷ்56-5	பூர59-03	சி59-03ம	ரா · 3-மிது-சுக்
16	29	ஞா	சப்60-00	உத60-00	சி60	13-கட-புத
17	30	திங்	சப 0-30	உத4-55	சி60	17-மேஷ-வ-சி
18	1	செவ்	அ3-15	அ9-08	சி60	27-கட-சுக்
19	2	புத	நவ4-13	சித்11-28	சி60	32-மக-ராகு
20	3	வியா	தச2-40 ஏ59-20	சு11-35	அ11-35சி	32-கட-கே · கேது · 32-கட-சூரி
21	4	வெ	து54-03	வி9-45	சி60	அங் · சனி செவ்
22	5 (1952௵ ஜூலை)	சனி	திர47-13	அ6-08	சி60	
23	6	ஞா	சதி39-13	கே0-58 மூல54-53	ம0-58அ	அவமாகம், தனியநாள
24	7	திங்	○ப30-28	பூ48-03	ம60	வ்யாஸபூஜா, ஆகாமாவை
25	8	செவ்	பிர21-23	உத்40-58	பி40 58சி	ஆஷாட பகுளம்
26	9	புத	துதி12-18	திரு34-08	சி34-08பி	ச்ர-உபவாசம்
27	10	வியா	திரு3-40 சது55-53	அ27-55	சி27-55ம	சங்கஷ்டசதுர்த்தி, அவமாகம்
28	11	வெ	பஞ்49-08	சத22-40	சி60	... ...
29	12	சனி	சஷ்43-43	பூர18-35	ம18-35சி	மாலை தானியம் செலவிட
30	13	ஞா	சப்39-43	உட்15-50	அ60	பானு ஸப்தமி
31	14	திங்	அ37-18	ரே14-43	சி60	காலாஷ்டமி
32	15	செவ்	நவ36-25	அசு15-02	சி60	கடகரவி கா-38-15, தக்ஷிணாயன புண்யகாலம்

EDITED, PRINTED & PUBLISHED BY N. MUNISWAMY MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

புத்திர சந்தான எண்ணெய்

ஆண்மலடு சொன்னாலும் சொல்லலாகும்
அப்பனே பெண்மலடு யாருமில்லை
பெண்மலடாய்ப் போனதென்று கேட்பாயாகில்
பிரப்புயேன் கருக்குழியில் சொறிசேர்ந்தால்
என்பிருந்தால் புழுதரித்தால் உதிரங்கெட்டா
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால் [ல்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்துவிடுவதனாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சோதி பற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கியிருப்பதனாலும் கரு தரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1 அல்லது 2 காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் மேற்படி குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறு மாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருதரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து இடையில் உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயினால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

தபாற்கூலி 0—13—0.

கர்ணபிந்து

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் இரைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கி விடும்.

புட்டி 1-க்கு விலை அணா 8.

தபாற்கூலி 0—13—0.

சீராத மேஹரணங்களுக்கு சஞ்சீவி களிம்பு விலை 0—12—0.

தபாற்கூலி 0—13—0.

கஸ்தூரி மாத்திரை

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் சளி, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகள் தீரும். 25 மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூ: 1.

தபாற்கூலி 0—13—0.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை.

மதன காமேஸ்வரக் குளிகை என்னும்

தாது ஸ்தம்பன தங்க மாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தால், உலக இச்சை இல்லாதவர்களுக்கும் இழந்த பலத்தையும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஒரு விதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும். இது

வன்றி வேறு எந்த கோளாறிலுண்டான பலவீனமும் இம்மருந்தினால் நீங்கும். இரத்த விருத்தியை புண்டாக்கி நாம்புகளுக்கு உறுதியைக் கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச்சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டு சிறந்த வைபாக செய்பாகங்களாய் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒரு முறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

தபாற்கூலி —13—0

சூதக நிவாரணி மாத்திரை

ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (ருது) சிரமமாக வெளிப்படாமல் காலந் தவறி வெளிப்படுதல், சிலகாலம் வெளிப்படாமலே யிருத்தல், வயிற்றுவலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்து சிவு, ஜன்னி தோஷங்கள், மஞ்சட் காமாலை, உணர்ச்சியின்றி சிறுநீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபட வென்று அடித்துக்கொள்ளுதல், மேல்மூச்சு வாங்குதல், மர்ம ஸ்தானத்தில் பொறுக்கமுடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும்.

ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1. தபாற்கூலி 0-13-0.

சர்வபடை சம்மாரன்

சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத கமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டுபண்ணும் படைகள். ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு விலை அணா 4. தபாற்கூலி 0-13-0.

4-புட்டிக்கு விலை ரூ. 1. தபாற்கூலி 0-13-0.

தனலட்சுமி கம்பெனி,
நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை.

சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர் டிரேட் மார்க்)

அழுதவன் சிரிப்பான்!!

பட்டவுடனே விஷம் பறக்கும்!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.

நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கைவசமிருப்பில் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன்குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்யக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகள் அடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி 0—13—0. டஜன் 1-க்கு விலை ரூபா 5; தபாற்கூலி 1—3—0

சுகபேதி மாத்திரை

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை திரேக நிடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்துகொள்ளலாம்.

25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6 தபாற்கூலி 0—13—0

கண்நோய் மருந்து

இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளை கட்டல். சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இமைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போடவேண்டியதில்லை.

புட்டி 1-க்கு அணா 10. தபாற்கூலி 0—13—0.

(எல்லா மருந்துகளுக்கும் தபால் கூலி வேறு.)

தன[illegible]மி கம்பெனி,
நெ. 6. லாய[illegible] முதலி தெரு, சென்னை.

தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்

ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை

	ரூ	அ.
ஞானசெல்வாம்பாள் 5-பாகம்	9	10
கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ...	2	0
கடற்கொள்ளைக்காரர்2பாகம்	4	0
மதனாம்பாள் 2-பாகம் ...	3	0
லோகநாயகி ...	1	0
விளையாட்டுச் சாமான் ...	1	6
பவளத்தீவு 2-பாகங்கள் ...	3	12
தபால்கொள்ளைக்காரர்கள் ...	0	14
அமராவதி 2-பாகங்கள் ...	5	0
மஞ்சள் அறையின் மர்மம் ...	2	0
கற்கோட்டை ...	2	8
பூங்கோதை ...	0	12
வீரநாதன் ...	0	12
அனகபூஷணம் 2-பாகமும் ...	3	12
கமலசேகரன் ...	2	8
தினகரசுந்தரி ...	1	4
ரத்தினபுரிரகசியம் 9-பாகமும்	18	14
சந்திராபாய் ...	2	8
இராஜாமணி ...	2	8
இரத்தினாபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	8
சுவர்ணாம்பாள் ...	0	12
தேவசுந்தரி ...	2	0
குணசுந்தரன் ...	1	0
பத்மாஸனி ...	1	0
ஆனந்தஸிங் ...	2	0
மின்சார மாயவன் ...	2	0
ஆனந்தசிங்கின் அஷ்டஜயங்கள்	2	0
அரசூர் இலக்ஷ்மணன் ...	3	0
கைவல்லிய நவநீத வசனம் ...	1	8
சகோதரவாஞ்சை ...	0	5

	ரூ	அ.
தத்வசங்க்ரஹ ராமாயணம் அச்சில்		
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்	3	0
விவேகானந்தர் சரித்திரம் ...	4	0
தமிழ் மெடீரியா மெடிகா ...	3	8
மாதவி மாதவன் 2-பாகம் ...	2	4
மலையாள பகவதி ...	1	4
அற்புத நவநீத ரம்பை ...	1	8
அகட விகட விலாச விநோதம்	0	10
மோட்டி கார்த்தியாயினி ...	0	14

	ரூ.	அ.
துயராளன் கதை அச்சில்		
பூலோக லக்ஷ்மி கதை ..	0	14
கனகரத்தினம் ...	0	8
கண்டிராஜா நாடகம் ...	0	12
நளினா சுந்தரி	அச்சில்	
கம்பராமாயணவசனம்	அச்சில்	
குசேலோபாக்கியான வசனம்	1	0
ஸ்ரீபாலன் ...	0	8
உதயணன் ...	0	6
தசக்கிரீவன் ...	0	14
போஜ சரித்திரம் ...	0	5
சதானந்தர் ...	1	4
ஜீவகன் வசனம்	அச்சில்	
கர்ணன் சரிதை ...	0	12
பீஷ்ம விஜயம் ...	0	10
கீர்த்திசிங்கன் ...	0	7
முப்பெருந்தாசர் ...	0	10
அரிச்சந்திரன் சரிதை ...	0	8
நீலக்கொடி	அச்சில்	
மணவாளன் ...	0	3
பரசுராமன் ...	0	3
சிசுபாலன் ...	0	6
அங்கதன் ...	0	4
தசாவதார மகிமை ...	0	6
கிருஷ்ணன் தூது வசனம் ...	0	8
சண்டோபாக்யானம் ...	0	6
கருணாகரரும் சத்தியசீலரும்	0	8
சத்தியவசனன் ...	0	4
விமலன் ...	0	4
கண்ணபிரான் ...	0	4
செய்யுட்பாடத்திரட்டு ...	0	4
நாலு மந்திரி கதை ...	0	4
மங்களேசுவரன் ...	0	6
தக்கன் ...	0	6
சீமந்தனி ...	0	8
நான்குகோடி ...	0	4
மதிமோசவிளக்கம் ...	1	0
மெய்க்காதலி ...	0	12
மேனாமினுக்கி கதை ...	0	12
வீணாகானன் ஞானேந்திரி ...	0	8
மனோன்மணி கதை	அச்சில்	
கோமளவல்லி கதை ...	0	12
விகடவல்லி கதை ...	0	6
தாலிகட்ட மறந்த கதை ...	0	7

இந்திர கவசமென்னும் ஸர்வ தேவதா வசியம்
முதல் பாகமும் இரண் ... விலை ரூபா 1.

ஆனந்தபோதினி ... தபால் பெட்டி ... 167, மதராஸ்.

12547

"ஜீவா" தீட்டிய

எழுத்து ஓவியங்கள்

யான் ஏன் பெண்ணாய் பிறந்தேன்?
விலை ரூ. 2-0-0.

தாசி ரமணி
விலை ரூ. 1-8-0.

உயிரோவியம்
விலை ரூ. 1-8-0

காதலனா? காதகனா?
விலை ரூ. 1-4-0.

இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்?
விலை ரூ. 1-0-0.

மோட்டி கார்த்தியாயினி
விலை அணா 14.

ஒவ்வொரு புத்தகத்துக்கும் தபால் சார்ஜ் அணா 0-7-0
6-புத்தகங்களுக்கும் தபால் சார்ஜ் ரூ. 1-6-0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.



இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாக கண்டிக்கக் கூடியது. வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பல விருத்தி தருவதில் இது சிறந்த மருந்தாகும். சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய் கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளுமளவில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாம். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூ. 1. 40-நாள் மருந்து விலை ரூ 1-12-0.

போஸ்டேஜ் 20-நாள் மருந்துக்கு அ. 10. 40-நாள் மருந்துக்கு ரூ 1,

அயத்தங்கத் திராவகம்

தனலட்சுமி கம்பெனி, 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை.

Edited, Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, at the "ANANDA BODHINI PRESS", No. 6, Lawyer Chinnathambi Mudali Street, Sowcarpet, Madras.